# சத்தியத்தின் குரல்




## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

‘ திருமறை ஆசான் ’
‘ கிருபையுள்ள வார்த்தை ’
‘ வோர்டு ஆப் கிரைஸ்ட் ’


மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385



சத்தியத்தின் குரல் Volume - 46 THE VOICE OF TRUTH INTERNATIONAL



மலர் : 46


# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION


Volume - 46



ஆசிரியர் உரை

# வேதாகம மௌனத்தின் அதிகாரம்
# The Authority of Biblical Silence

Louis Rushmore

சிலவேளைகளில் வேதாகம மௌனம் என்பது மற்ற வேத வாக்கியங்களைப் போல் உரக்கக் குரல் கொடுக்கிறதாகவே இருக்கின்றது. அதே போல் வேதாகமம் சிலவேளைகளில் ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து மௌனம் காத்தாலும் அதே காரியத்தைக் குறித்து வேதாகமம் வெளிப்படையாகச் சொன்னால் எந்த அளவு வேதாகம அதிகாரம் இருக்குமோ அதே அளவு வேதாகம அதிகாரம் இருந்துவிடுகிறது. அதனால்தான், வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே நாம் பேசுவதும், வேதாகமம் எங்கே அமைதி காக்கிறதோ அங்கே நாம் அமைதி காப்பதும் சாலச் சிறந்ததாகும். ஆவிக்குரிய வாழ்க்கையின் சில பகுதிகளில் ஒன்றை செய்ய வேண்டுமென்று வேதாகமம் கட்டளையிடாமல் மௌனம் காக்கும்போது அங்கே வேதாகம மௌனம் என்பது வேதாகம அதிகாரத்தைக் குறிக்கிறது.

புதிய ஏற்பாட்டு ஆராதனையில் இசை என்பது இக்கூற்றை விவரமாக விளக்குகிறது. புதிய ஏற்பாட்டு ஆராதனையில் பாடல் பயன்படுத்தப்படவேண்டுமென்பதை வேத வாக்கியங்கள் அங்கீகரிக்கின்றன (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16). ஆகவே, வேறு வகையான இசையைப் பயன்படுத்துவது சம்பந்தமாக வேதாகமத்தின் மௌனம் தேவன் கட்டளையிட்டதை மறுபடியும் வலியுறுத்துகிறது. முணுமுணுத்தல், விசில் அடித்தல், கைதட்டல், கால்களை பலத்த சத்தத்தோடு அடித்தல் போன்று இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது:

* தேவன் சொன்னவைகளுக்கு விரோதமானவைகள்
* வேதாகம மௌனத்திற்கு எதிரானவைகள்
* வேதத்தோடு கூட்டுவது வேதத்திற்கு விரோதமாகும்
* அது பாவமுள்ளதாகும். அவை கிறிஸ்துவின் அதிகாரத்திற்கும், உபதேசத்திற்கும் அப்பாற்பட்டதாகும் (கொலோசெயர் 3:17; II யோவான் 9–11

எபிரெய எழுத்தாளர் தன் நிருபத்தின் வாசகர்கள் ஏற்கனவே தேவனால் தீர்த்து வைக்கப்பட்ட காரியங்களுக்கு வேதாகமத்தின் மௌனம் அதிகாரமுள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டு மென்று விரும்புகிறார். பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு வாக்கியங்களை அடிப்படையாக வைத்துப்பார்க்கும்போது, கிறிஸ்து இப்பூமியிலே ஆசாரியராயிருப்பதற்கு தகுதியானவர் அல்ல என்பது தான் வேத வாக்கியங்களின் மௌனத்திலிருந்து நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். (எபி. 8:4;7:13) நம் கர்த்தர் யூதா கோத்திரத்திலிருந்து தோன்றின படியால் அவர் ஆசாரியராயிருப்பதற்கு தகுதியானவரல்ல மேலும், யூத கோத்திரத்திற்கும் ஆசாரியத்துவத்திற்கும் எந்த சம் பந்தமும் இருப்பதாக மோசே ஒரு போதும் பேசினதே இல்லை. (எபி.7:14).




தேவ ஆவியினால் ஏவப்பட்ட வேதாகம எழுத்தாளர்கள் வேத வாக்கியங்களின் மௌனத்தை சரியாகப் புரிந்து கொண்டிருக் கிறார்கள். அதேபோல் நாமும் கூட, வேதாகமம் மௌனம் காட்டும் இடங்களிளெல்லாம் அங்கே உள்ள வியாக்கியான விதியை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். இருந்த போதிலும், புதிய வியாக்கியான விதியின் ஆதரவாளர்கள் வேதாகம மௌனத்தின் பங்கை அவமதிக்கிறார்கள் அல்லது தவறாகப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, தவறு செய்யும் சகோத ரர்கள் தங்கள் ஆத்து மாக்களை ஆபத்துக்குள்ளாக்கு வது மட்டுமல்லாமல், மற்றவர்களுடைய ஆவிக்குரிய நலனையும் ஆபத்துக்குள்ளாக்கு கிறார்கள். வேதாகம மௌனமும் தேவனுடைய வார்த்தையும் சரியாகக் கையாளப்பட வேண்டும்.



நிர்வாக ஆசிரியர் உரை

# சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமும்

## The Pillar and Ground of the Truth

*E.Z.S. Rajanayagam*

**மூ**ன்று நற்செய்திப் பயணங்களை மேற்கெண்ட பவுலடியாருக்குத்
தன் முதல் பயணத்தின் போது கிடைக்கப் பெற்ற நன்முத்து தான் இந்த
தீமோத்தேயு. இவன் சிறுபிள்ளையாயிருக்கும் போதே, பக்திக் கனலுக்
கான நெருப்பு இவன் தாயாகிய ஐனிக்கேயாளாலும்,பாட்டியாகிய லோவி
சாளாலும் பற்ற வைக்கப்பட்டிருந்தபடியால், ஏற்ற சமயத்தில் அது கொ
ழுந்து விட்டு எரிந்தபடியால், ஒரு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக இணை
யில்லாத தேவதாசனாகிய பவுலடியாருக்கு ஊழியக் கூட்டாளியாக மாறி
விட்டான். இதை நாம் லேசாகக் கருதிவிடக்கூடாது. ஏனெனில், இரண்
டாம் நற்செய்திப் பயணதிற்கு யோவான் மாற்குவைக் கூட்டிப் போகலாம்
என்று பர்னபா சிபாரிசு செய்த போது **ஊழியத்திற்கு அவன் சரியான
நபர் அல்ல** என்று கறாராகப் பேசி கைவிரித்தவன் தான் இந்தப்பவுல் [அப்
15:36-39]. ஆனால், இதே பவுல் இளம் கிறிஸ்தவனாகிய தீமோத்தேயு
வை ஊழியக் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்கிறார். புரிகிறதா? தீமோத்
தேயு தன்னை எந்தளவு குறுகிய காலத்தில் தகுதிப்படுத்திக் கொண்டான்
என்று. அத்தோடு அவருடைய ஒட்டுமொத்த நம்பிக்கைக்குரிய நபராக
வும் மாறிவிட்டான். ஆம், **என்னைப் போல் மனதுள்ளவன் என்றும்,
கிறிஸ்துவுக்குரியவைகளைத் தேடுபவன்** என்றும் எழுதி பெருமைப்ப
டுத்துகிறார் [பிலி 2:19,20]. இப்படி ஊழியக் கூட்டாளியாகவும், நம்பிக்
கைக்குரியவனாகவும், கிறிஸ்துவுக்குரியவைகளைத் தேடுபவனாகவும்
இருந்த தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபத்தில் தான் சபையா
னது சத்தியத்திற்கு தூணும், ஆதாரமுமாயிருக்கிறது என்று வெளிப்
படுத்துகிறார்.

சரி, ஊழியப் பயணத்தின் ஒரு கட்டத்தில் தீமோத்தேயு எபேசுவிலே
விடப்பட்டிருந்தார். அப்படி, விடப்பட்ட தீமோத்தேயு எபேசுவிலே நிறை
வேற்றும்படிக்கு இரண்டு பெரும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது.
1. தலைதூக்கியிருந்த கள்ளப்போதகம் துப்புரவாகத் துடைத்தெறியப்பட
வேண்டுமென்பது 2. சபையின் ஒழுங்கு செயல்பாடுகளின்

நெறிமுறைகளும், சபையின் ஆளுகை அமைப்பும் நிலை நாட்டப்பட வேண்டுமென்பது. ஆம், உபதேசக் காரியங்களுக்கும்,ஒழுங்கு செயல் பாட்டுக்கும் தேவன் எவ்வளவு முக்கியத்துவம் தந்துள்ளார் என்று பாருங்கள். ஒருவேளை இன்றைய ஊழியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக் கும் இவை முக்கியமில்லாமலிருக்கலாம். ஆனால், தேவனுக்கு இவ்வி ரண்டும் மிகவும் முக்கியம். சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆனால், எந்த ஒரு சபையிலும் உபதேசம் சார்ந்தும், ஒழுங்கு செயல் பாடுகள் சார்ந்தும் தேவன் பிரியப்படும் அளவில் காரியமாற்றுவது மிகவும் சவாலானது. எதிர்ப்புகளையும், ஏளனங்களையும் எதிர்கொள்ள நேரிடும். இதை உணர்ந்துதான் ஆவியின் ஏவுதலால் பவுலடியார் இரண்டு முக்கிய மான வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். 1. **கட்டளை** 2. **ஜாக்கிரதை.** இந்த இரண்டு சத்தான வார்த்தைகளைத் தீமோத்தேயுவுக்கு பயன்டுத்தும் முன், பவுலாகிய நான் தேவனிடத்திலிருந்து எனக்காக **கட்டளை** பெற்றி ருக்கிறேன்.(1:1) என்பதைத் தெளிவுபடுத்திவிட்டார். இதன் மூலம் பவுல் இடும் கட்டளைகள் குறித்து தீமோத்தேயு கேள்வி எழுப்ப முடியாது.

முதலாவது **கட்டளை.** ஒன்றாம் அதிகாரம் வசனம் 3-ல் உள்ள உபதே சம் சார்ந்த கட்டளை. ஆம், வேற்றுமையான உபதேசங்களுக்கும், கட்டுக் கதைகளுக்கும் செவி சாய்க்கும் சிலருக்கு எதிரான கட்டளை. அத்தோடு, இக்கட்டளையை நிறைவேற்றப் போராடும்படி தீமோத்தேயுக்குக் கட் டளை ( 1:18) பிறகு, ஒழுங்கு செயல்பாட்டுக்கான காரியங்களைப் போதிப் பதில், தன் வயதின் காரணமாகச் சோடைபோய்விடக் கூடாது என்பதற் கான கட்டளை. (4:11). இறுதியாக, ஐசுவரியவான்கள் நித்திய ஜீவனுக் கான சிந்தையைப் பெற்றுக் கொள்ளும்படி கட்டளையிடக் கட்டளை (5:19).

அடுத்த முக்கிய வார்த்தை **ஜாக்கிரதை,** பிறருக்குக் கட்டளையிடுகிற வனும், புத்தி சொல்கிறவனும் தங்கள் பங்கில் சரியானவர்களாகக் காணப் படுவது அவசியம். ஆகவே தான், நீ விசுவாசமும், நல்மனசாட்சியும் உடையவனாயிரு என்று குறிப்பிடுகிறார் (1:19)ல். இன்னும், 4:12 ல் உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும் நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்தி லும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்கிறார்(4:12). மேலும், 5:22-ல், தீமோத்தேயுவே **உன்னைச் சுத்தவானாகக்** காத்துக் கொள் என் றும் ஒரு போடு போடுகிறார்.

**கட்டளை, ஜாக்கிரதை** ஆகிய இந்த இரண்டு வார்த்தைகள் ஊழியக் காரியங்களில் மாயமாய் மறைந்து விட்ட படியால்தான், இன்றைய கிறிஸ்

தவம் சீரழிவான நிலையில் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. சத்திய வார்த்தைகளின் போதனைகள் புறக்கணிக்கப்படும்போது வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

இப்பொழுது இப்பின்னணித் தகவல்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

**1. சபையில் ஒழுங்கும், கிரமமும் அவசியம்**

தேவனுடைய வீடாகிய சபை பற்றிய இப்பகுதியிலிருந்து நம்மால் முதலாவது தெரிந்து கொள்ள முடிவது, சபையில் ஒழுங்கும், கிரமமும் மிகவும் முக்கியம் என்பது.

தேவனுடைய வீடாகிய சபையை வழிநடத்தும் மூப்பர்களாக இருந்தாலும், அவர்களுக்கு பக்கபலமாக இருக்கும் உதவிக்காரர்களாக இருந்தாலும், பிரசங்கிக்கும் போதகர்களாக இருந்தாலும், சபையின் அங்கமான கிறிஸ்தவர்களாக இருந்தாலும் அவரவர்களுக்கான கட்டுப்பாடுகள் தேவனால் வரையறுக்கப்பட்டுள்ளது. அதைத்தான் பவுலடியார் **நடக்க வேண்டிய வகையை** என்று குறிப்பிடு கிறார். சபைக் காரியங்களில் தான்தோன்றித்தனமாக நடப்பதற்கு யாருக்கும் உரிமையும், அதிகாரமும் இல்லை. புதிய ஏற்பாட்டில், ஆவியில் மிகவும் மேம்பட்ட சபையாகக் கருதப்படும் தெசலோனிக்கேயருக்குப் பவுல் எழுதும்போது இதே கருத்தை வலியுறுத்துகிறார். **அன்றியும், சகோதரரே நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக் கொண்டபடியே அதிகதிகமாய்த் தேறும்படிக்கு கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்தி சொல்லுகிறோம்** (I தெச 4:1) என்று.

அருமையானவர்களே! சத்திய வேதத்தின் போதனை இவ்விதம் இருக்கும் போது, இன்றைய நாட்களின் கிறிஸ்தவத்தில் காணப்படும் யதார்த்த நிலை எப்படியுள்ளது? யாருடைய கட்டுப்பாட்பாட்டில் கர்த்தரின் சபையும், சபைகள் என்று கருதப்படுபவைகளும் இயங்கிக் கொண்ருக்கிறது? சபையின் பக்திச் செயல்பாடுகளுக்கும், ஆளுகை அமைப்புக்கும் தேவனால் கொடுக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் செயல்படுத்தப்படுகின்றனவா? நீங்களே நிதானித்துப் பாருங்கள்! நீங்கள் மனசாட்சியிலே சூடுண்டவர்களாக இல்லாததிருந்தால் வேதவசனங்களின் போதனைகள் பின்பற்றப்படுவதில்லையென்பது பளிச்சென விளங்கும்.

ஆம், எனக்கும் விளங்குகிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் ஒருவேளை கேட்டால், இதோ அதற்கான

தேவ கட்டளை. **மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக் கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்** [II **தெச 3:8**]. இத்தேவகட்டளையை அமல்படுத்துவதா அல்லது அவமதிப்பதா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், உங்கள் ஆத்துமாவுக்கு நீங்கள் தான் பொறுப்பு.

## II **சபை சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது**

இங்கே, சத்தியம் இவ்வளவு முக்கியமானதா என்ற கேள்வி ஒரு வேளை எழலாம். இதற்குப் பதில் **ஆம்**, மிகமிக முக்கியமானது என்பது தான். ஏனெனில், தேவனால் கொடுக்கப்பட்ட அவருடைய **வார்த்தைகள் தான் சத்தியமாயிருக்கிறது** [யோவான் 17:17]. இன்னும் ஆத்துமாக்களை இரட்சிக்கும் வல்லமை கொண்ட அவருடைய **சுவிசேஷமும்** சத்தியமாயிருக்கிறது [கலா2:5,14]. இப்படிப்பட்ட சத்தியத்தைக் கொண்டு தான் தேவன் உலகத்தை **விடுதலையாக்கும்** திட்டத்தை தீட்டியுள்ளார். **சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்று [யோவான் 8:32] ல் வாசிக்கிறோம்.

சர்வவல்லவரால் இப்படியாக மேன்மைப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியத்தை சபையானது பிறருக்கு எடுத்துச் செல்வது அவசியம். [அப் 26:25] சபைக்காக உயிரைக் கொடுத்த இயேசு **நானே சத்தியம்** என்று கூறியுள்ளபடியால், இயேசுவின் உபதேசம் சார்ந்த கோட்பாடுகளுக்கு எவ்வித சமரசத்திற்கும் இடம் கொடுக்காமல், விளைவுகள் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் எச்சூழலிலும் சபையானது சத்தியத்திற்குத் தன்னைக் கீழ்ப்படுத்த வேண்டும். [ I பேதுரு 1:22]

அப்படியானால் அருமையானவர்களே! இன்றைக்கு இப்படித்தான் சபையிலும், சபைகளிலும், நடந்து கொண்டிருக்கிறதா? நான் இங்கே சபை என்றும், சபைகள் என்றும் குறிப்பிடுவதைக் கவனிக்கத் தவறிவிடாதீர்கள். இயேசுவால் கட்டப்பட்டது ஒரே சபை தான் [மத். 16:18]. ஏனைய அனைத்தும் மனிதர்களால் ஆரம்பிக்கப்படவை. இங்கே தேவன் சபைக்கு அளித்த இம்மாபெரும் பொறுப்பை அவருடைய சபை நிறைவேற்றவில்லையென்றால், அது தேவனுடைய பார்வையில் குற்றமுள்ள சபையாகவே இருக்கும். மனிதர்களால் ஆரம்பிக்கப்பட்ட விதவிதமான பெயர்களைக் கொண்ட சபைகள் கணக்கிலேயே வராது.

ஆகையால், நாம் அங்கம் வகிக்கும் சபையின் நிலையை [ பார்த்து தேவனுக்கு எது பிரியமாயிருக்குமோ அதைச் செய்யத் தைரியங்கொண்டு அப்படியாகச் செய்யும் படி நாம் நம்மை ஒப்புக்கொடுப்போம். ✝

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| வேதாகம மௌனத்தின் அதிகாரம் | Louis Rushmore | ... 1 |
| சத்தியத்திற்குத் தூணும், ... | E.Z.S. Rajanayagam | ... 3 |
| ,இயேசுவின் தெய்வீகத்தன்மை | Jerry Bates | ... 9 |
| பரலோகம் எப்படி இருக்கும் .... | J.C.  Choate | ... 14 |
| உங்களை ஒப்புக் கொடுங்கள் | Arjunan | ... 17 |
| அப்போஸ்தலர் நடபடிகள் | P.C. Philemon Rajah | ... 21 |
| நவீன விக்கிரகாராதனை | Benny Martin | ... 25 |

**தேவன் - God**

| | | |
|---|---|---|
| நான் உங்களை நேசிக்கிறேன் | Betty Burton Choate | ... 28 |
| இயேசு சொல்லாத சில காரியங்கள் | Bill Dillon | ... 31 |
| காணவில்லை ஆனால் அறிய ... | David R. Pharr | ...34 |

**தேவனுடைய வார்த்தை - The Word of God**

| | | |
|---|---|---|
| வேதாகமத்தின் 66 புத்தகங்களில் ... | Dave Hast | ... 37 |
| அதிகமாக அலட்சியப்படுத்தப்பட்ட ... | Dalton Key | ... 40 |
| வசன ஆராய்ச்சி | Jerry Bates | ... 42 |

**இரட்சிப்பு - Salvation**

| | | |
|---|---|---|
| தாழ்வான வாழ்க்கை முறைக்கான ... | Micheael L.King | ... 45 |
| இரயில் வண்டியை நிறுத்த மிகுந்த.. | Bobby Dockesy | ... 49 |

**சபை - The Church**

| | | |
|---|---|---|
| கர்த்தருடைய விருப்பத்தின் படியான.... | MThomas R. Dohling | ...52 |

**வாழ்வதற்கான உபதேசம் - Doctrine to Live by**

| | | |
|---|---|---|
| எரேமியா 37 - 36 அதிகாரங்க... | | ... 55 |
| நம் பெலவீனங்களில் உதவி | Wayne Barrie | ... 57 |

**செயலில் கிறிஸ்தவம் - Christianity in Action**

| | | |
|---|---|---|
| 1 ஆம் நூற்றாண்டு உலகில் முதல் .... | Kevin L. Moore | ... 59 |

### செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action


| | | |
|---|---|---|
| பவுல் அரேபியஸவில் என்ன செய்தார்? | **Kevin L. Moore** | ... 61 |
| தேவனைப் பற்றி வைராக்கியம், ஆனால்... | **Sunny David** | ... 63 |
| கர்த்தராகிய இயேசுவுக்கு செவி கொடுத்து... | **Tim Childs** | ... 67 |


### அனுதின கிறிஸ்துவ ஜீவியம் – Daliy Christian Living


| | | |
|---|---|---|
| லாபங்களும், நட்டங்களும் | **J. Randal Matheny** | ... 69 |
| எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்... | **Reyncard Elliaoti** | ... 71 |


### கிறிஸ்தவ இல்லம் – The Christian Home


| | | |
|---|---|---|
| நல்ல திருமணங்களைக் கட்டுதல் | **Dan R. Owen** | ... 73 |
| தேவ பக்தியுள்ள பெற்றோரின் ... | **Darrell Surrett** | ... 76 |
| அவருடைய நாமம் பரிசுத்தமும் ... | **Dennis Gulledge** | ... 79 |
| கிறிஸ்தவத்தின் நான்கு முக்கியமான .... | **mark n. Posey** | ... 81 |


### வேதாகம கேள்விகள் – Bible Questions


| | | |
|---|---|---|
| சிலுவையில் தொங்கிய அக்கள்ள... | **Brain R. Kenyon** | ... 84 |
| அவர்கள் ஞானஸ்நானம் பெறு... | **Wes MC Adams** | ... 87 |


### வேதாகம கதாபாத்திரங்கள் – Bible Characters


| | | |
|---|---|---|
| எப்பாப்பிராவின் மாதிரி | **Wes MC Adams** | ... 92 |
| சாத்தானின் மிகப்பெரிய பொய் | **Gary. C. Harpton** | ... 96 |
| சாத்தானால் செய்ய முடியாத ... | **Tim Childs** | ... 98 |
| பாவத்தின் வேர் | **Bonnie Rushmore** | ... 102 |


### ஆராதனை – Worship


| | | |
|---|---|---|
| ஆராதனைக்கு நீங்கள் என்ன கொண்டு .... | **Patrick Morrison** | ... 103 |


### சபை வரலாறு – The Church History



| | | |
|---|---|---|
| நிர்வாகத்தோடு போராடுதல் | **Jeremy W.bannier** | ... 106 |



## இயேசுவின் தெய்வீக தன்மை
## The Deity of Jesus

Jerry Bates

**வே**த வாக்கியங்களில் திரித்துவ உபதேசம் மிக குழப்பமானதும், புரிந்து கொள்வதற்கு கடினமான உபதேசங்களில் ஒன்றாகவும் இருக்கிறது. இது முரண்படுகிற உபதேசம் போல் தெரிகிறது. எப்படி தேவனால் ஒரே தேவனாக இருந்து கொண்டு அதே நேரத்தில் மூன்று நபர்களாக இருக்க முடியும்? இப்பிரச்சனைக்கு ஜனங்கள் வித்தியாச மாக எதிர்வினை ஆற்றுகிறார்கள். சிலர் வெளிப்படையாகவே இந்த உபதேசத்தை மறுக்கிறார்கள். சிலர் இதற்கு மறுவியாக்கியானம் கொடுப்பதினால் பலருக்கு இது புரியும் படியாக இருந்தாலும் கூட இறுதியில் திரித்துவத்தை மறுப்பதில் தான் இது போய் முடிகிறது. சிலருக்கு இந்த உபதேசம் எவ்விதத்திலும் புரியாதபடியால் இதைக் குறித்து பரிசிலனை செய்ய மறுத்து, அக்கறைக்காட்டுவதில்லை. இப்பிரச்சனைக்கு ஒரே அடியாக தீர்வு காணும் விதத்தில் நமக்கு தெளிவான அதே நேரத்தில் சுருக்கமான வாக்கியம் தேவையா யிருக்கிறது.



பலர் திரித்துவத்தை முழுமையாக புரிந்து கொள்ளாத படியால் இந்த உபதேசம் உண்மை யாக இருக்க முடியாது என்று சொல்லி அதை விசுவாசிக்க மறுக் கிறார்கள். நம்மால் ஒன்றை புரிந்த கொள்ள முடியவில்லை என்பதற்காக அது உண்மை அல்ல என்று பொருள்படாது உதாரணமாக, நம்மால் உணர்வுகளை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது என ஒருவர் இவ்விதமாகச் சொன்னார். நாம் அன்பைப் பற்றி முழுமையாகக் கண்டுபிடித்துவிட்டோம் என்று நினைக்கக்கூடாது. ஏனென்றால், அது ஒரு பிரச்சனையே அல்ல; அது ஒரு இரகசியமாகவே இருக்கிறது. இரகசியமாகவே இருக்கும். இதன் பொருள் இவ்வுலகில் அன்பு, வெறுப்பு போன்ற உணர்வுகள் எல்லாம்

இல்லாமல் போய்விடுமா? பௌதீக சாஸ்திர வல்லுநர்களுக்கு வெளிச்சத்தைப் புரிந்து கொள்வதிலும், அதை விளக்குவதிலும் பிரச்சனை இருக்கிறது. ஆனால் வெளிச்ம் உண்மையாகவே இருக்கிறது.

இந்த உபதேசத்தின் மிக முக்கியமான பகுதி தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள உறவுதான். பலர் இயேசுவின் தெய்வீகத் தன்மையை மறுக்கிறார்கள் அல்லது தேவனுக்கு கீழான நிலையில் இயேசுவை வைக்க முயற்சிக்கிறார்கள். நிச்சயமாக இந்த பாடத்தை இந்த குறுகிய கட்டுரையில் போதுமான அளவில் அடக்க முடியாது. ஆனால், இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைப் பற்றி சில முக்கியமான கருத்துக்களை அலசிப்பார்ப்போம்.

ஏராளமான வசனங்கள் இயேசு கிறிஸ்துவுக்கு சிருஷ்டிப்பில் பங்கு இருந்ததை தெளிவுப்படுத்துகின்றன. அதாவது, பிதாவுக்கு பங்கு இருந்ததைப் போல இயேசுவுக்கும் பங்கு இருந்தது (யோவான் 1:3; கொலோசெயர் 1:16,17) தேவனால் மாத்திரம் எதையாவது சிருஷ்டிக்க முடியும் என்றிருக்கிறபடியால் பிதாவாகிய தேவனைப் போல் இயேசுவும் தேவனாக இருக்கிறார்.

இயேசு கிறிஸ்து மாறாதவராகவும் இருக்கிறார். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபிரெயர் 13:8). இயேசுவைப் பற்றி எபிரெய ஆசிரியர் சொல்லும் போது ஒரு சால்வையைப் போல அவைகளைச் சுருட்டுவீர்; அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உம்முடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை என்று சொல்கிறார் (எபிரெயர் 1:12). தேவனால் மாத்திமே மாறாதவராயிருக்க முடியும். ஆகவே, இயேசு கிறிஸ்து தேவனாக இருக்கிறார்.

மேலும், இயேசு கிறிஸ்து நித்தியமானவர் என்பதை வேத வாக்கியங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும். இயேசு கிறிஸ்துவின் தோற்றம் அவர் பூமியில் பிறந்ததிலிருந்து தொடங்க வில்லை. அவர் தம்முடைய பிறப்பின் போது தான் தம்மை தாழ்த்தி மனித அவதாரம் எடுத்தார். இயேசு கிறிஸ்து ஆதியிலேயே சிருஷ்டிப்பிலேயே தேவனோடிருந்தார் (யோவான் 1:1) அவர் நித்திய பிதாவாகவும், சமாதானப் பிரபுவாகவும் என்றென்றும் இருப்பார் (ஏசாயா 9:6). அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது ( மீகா 5:2). ஒரு தேவனால் மாத்திரமே நித்தியமானவராக இருக்க முடியும்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களிலே தம்முடைய தெய்வீக வல்லமையை ஓரளவுக்கு விட்டுக் கொடுத்தார்; ஆதலால் தான் அவர் பிதாவுக்கு தம்மை முழுமையாக கீழ்ப்படுத்தினார் என்று அடிக்கடி வாசிக்கிறோம். இருந்த போதிலும் இது அவர் தேவனாயிருக்கவில்லை, தேவனாக இல்லை என்று பொருள்படாது. அதனால் தான் பவுல் அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமை யின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் என்று அறிவிக்கிறார் [பிலிப்பியர் 2:6,7]. இந்த வசனப்பகுதியில் பவுல் இயேசு கிறிஸ்து மனித அவதாரம் எடுப்பதற்கு முன்பாக அவர் பிதாவாகிய தேவனுக்கு சமமாயிருந்ததாகவும், இயேசு தாமாகவே முன்வந்து, தெய்வீக சிலாக்கியங்களை வெறுமையாக்கி மனிதனாக மாறுவதற்கு முன்பாக அவர் பிதாவாகிய தேவனுக்கு சமமாகத்தான் இருந்தார் என்று தெளிவுப்படுத்துகிறார்.

இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் அவர் வெறுமனே தீர்க்கதரிசியாக மட்டும் இருக்கவில்லை அவர் தேவனாகவே இருந்தார். தேவனுடைய பரிபூரணம் மனித அவதாரம் எடுத்த வார்த்தையில் பூரணமாய் வாசமாயிருந்தது. அதனால் தான் பவுல் சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும் என்று எழுதுகிறார் [கொலேசெயர் 1:19]. இதேபோல் கொலேசெயர் 2:9] ல் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. என்று வாசிக்கின்றோம். பவுல் தன் வாசகர்கள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்குள் வாசமாயிருந்தது என்பதைப் புரிந்து கொள்ள விரும்பினார். இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களிலே மனித னாகவும் தேவனாகவும் இருந்தார். பரிபூரணம் எனும் வார்த்தைக்கான கிரேக்க பதம் **Pleroma** தேவனிடம் மாத்திரம் இருக்கக்கூடிய ஒட்டு மொத்த வல்லமையையும் பண்புகளையும் குறிக்கும். எனவே, இதே வல்லமையையும், பண்புகளையும் கிறிஸ்துவும் பெற்றிருந்தார்.

வேறுவிதமாகச் சொன்னால், பிதா தேவனாக இருப்பதற்கு என்னென்ன குணாதிசயங்கள். அவசியமோ அவைகள் எல்லா வற்றையும் கிறிஸ்து பெற்றிருந்தார். வேத வாக்கியங்களில் குமாரனாகிய இயேசு பல சந்தர்ப்பங்களில் தேவனாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறார். அதிலும் விசேஷமாக ஒரே கடவுள் கொள்கை உடைய யூதமார்க்கத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க காரியமாகும். அப்போஸ்தலனாகிய யோவான் இயேசு கிறிஸ்துவை மெய்யான தேவன் என்றும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்றும் உறுதிப் படுத்துகிறார் [I யோவான் 5:2]. அப்போஸ்தலனாகிய பவுல் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன் என்று அறிவிக்கிறார். [ரோமர் 9:5]. கிறிஸ்தவர்களாக

நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்ன மாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (தீத்து 2:13) இந்த வசனத்தில் இயேசு தேவனாகவும் இரட்சகராகவும் குறிப்பிடப்பட்டி ருப்பதை கவனியுங்கள். குமாரனை நோக்கி; தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது என்ற சொல்லியிருக்கிறார் (எபிரெயர் 1:8) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு அவர் தம்முடைய அப்போஸ்தலர்கள் எல்லோருக்கும் தரிசனமானபோது தோமா இவ்விதமாக அறிக்கை செய்தார். **தேவன்** என்று பயன்படுத்தப் பட்டிருக்கும் இந்த வார்த்தை மூல மொழியாகிய கிரேக்க மொழியில் Theos என்றுஅழைக்கப்படுகிறது. இவ்வார்த்தை பிதாவாகிய தேவனைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். மேலும், இயேசு தம்மைத் தோமா தேவனே என்று அழைத்த போது தோமாவை கடிந்து கொள்ளவில்லை. இதன் மூலம் இயேசு கிறிஸ்து தேவன் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படுகிறது.

மேலும், இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் ஆராத னையை ஏற்றுக்கொண்டிருக்கிறார். பழைய ஏற்பாடு தேவனைத் தவிர வேறு யாரும் ஆராதனையை ஏற்றுக் கொள்வதை தடை செய்கிறது (யாத்திரகமம் 20:14) அப்பேஸ்தலர்கள் 10:2526;14:11-13).

தேவதூதர்களுக்குக்கூட ஆராதனையை ஏற்றுக்கொள்ளும் உரிமை கொடுக்கப்படவில்லை (வெளிப்படுத்தல் 22:8,9). ஆனால், இயேசு கிறிஸ்து மற்றவர்கள் வந்து தம்மை பணிந்து கொண்ட போது ( ஆராதித்த போது) அவர் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார் (மத்தேயு 8:2;9:18;15:25;20:20). கிறிஸ்து தாம் உயிர்த்தெழுந்த பிறகும் கூட ஆராதனையை ஏற்றுக்கொண்டிருக்கிறார் மத் 28:9,17, இயேசு மரணத்திற்கு முன்னும், பின்னும் ஆராதனையை ஏற்றுக் கொண்டபடியாலும், இயேசு தாம் தேவன் என்பதை அறிந்திருந்தார் என்று நிச்சயமாக முடிவுக்கு வர முடியும். மேலும், இயேசு கிறிஸ்து இப்பூமியில் இருந்த நாட்களில் அவரை ஆராதிப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தால் மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவை நாம் ஆராதிப்பதும் ஏற்றுக் கொள்ளக்கூடியது தான். இருந்த போதிலும், இயேசு கிறிஸ்து பிரதானமாக தம்மைப் பின்பற்றுபவர்கள் பிதாவாகிய தேவனை ஆராதிக்க வேண்டுமென்று போதித்தார் (மத்தேயு 6:6,8-9)

சில விமர்சகர்கள் இயேசு கிறிஸ்து தம்மை ஒரு போதும் தெய்வீகத் தன்மை கொண்டவராக சொல்லிக்கொள்ளவில்லை என்று நிரூபிக்க முயற்சிக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தெளிவாக பல இடங்களில் தம்முடைய தெய்வீகத் தன்மையை குறித்து சொல்லியிருக்கிறார். இதை யூத விமர்சகர்கள் நன்றாகவே அறிவார்கள். இயேசு அவர் களை நோக்கி: என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார். நானும் கிரியைச் செய்து வருகிறேன்

என்றார். அவர் ஓய்வு நாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்று சொல்லித் தம்மைத் தேவனுக்கு சமமாக்கின படியினாலே யூதர்கள் அவரைக் கொலை செய்யும் படிக்கு அதிகமாய் வகை தேடினார்கள் [யோவான் 5:17,18].

இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன். அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார். யூதர்கள் அவருக்குப் பிரிதியுத்தரமாக நற்கிரியைகளினிமித்தம் நாங்கள் உன் மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி இவ்விதமாகத் தேவ தூஷணஞ் சொல்லுகிற படியினால் உன் மேல் கல்லெறிகிறோம் என்றார்கள் [யோவான் 10:32,33] யூதர்கள் பிலாத்துவுக்கு பிரதியுத்தமாக; எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னைத் தேவனுடைய குமார னென்று சொன்னபடியினால் அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாக வேண்டும் என்றார்கள் [யோவான் 19:7]. அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார். மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா? என்று கேட்டான். அதற்கு இயேசு: நான் அவர் தான். மனுஷ குமாரன் சர்வவல்லவரின் வலது பரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார் [மாற்கு 14:61,62].

இயேசு கிறிஸ்துவின் வார்த்தையிலிருந்து வந்த இரண்டு வாக்கியங்களை கவனியுங்கள். யோவான் 10:30 ல் நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார். எந்த யூதராலும் இயேசு சொன்னது போல் சொல்ல முடியாது. இயேசு கிறிஸ்து தேவனாக இருக்கிற படியால் தான் இந்த வாக்கியத்தை அமைக்க முடிந்தது. மேலும், இயேசு கிறிஸ்து என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றும் சொன்னார் [யோவான் 14:9]. இங்கே, இயேசு தாம் பிதாவின் சரிரத் தோற்றத்தைப் பெற்றிருக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தி யிருக்கிறார். தேவன் ஆவியாயிருக்கிறார் என்பது பல வேத வசனங் களில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இங்கே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிதா பெற்றிருந்த எல்லா தெய்வீக குணாதிசயங் களையும் தாமும் பெற்றிருப்பதை உறுதிபடுத்துகிறார்.

இருந்தாலும் நாம் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மை எனும் சிக்கலான பாடத்தை முடிந்தவரை சுருக்கமாக விவாதித்திருக்கிறோம். கிறிஸ்துவின் பூரணமான தெய்வீகத்தன்மையை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனைப் போலவே தேவனாயிருக்கிறார் இது வேதாகமத்தின் மாபெரும் உபதேசங்களுள் ஒன்றாக இருக்கிறது. நம் பாவங்களி லிருந்து நம்மை இரட்சிக்க மாம்சத்தில் இயேசு கிறிஸ்து வந்தார் [I யோவான் 4:3] ✞

# பரலோகம் எப்படி இருக்கும்?
# What Will Heaven Be Like?

J.C. Choate

**வே**தாகமம் நாம் எல்லோரும் மரிப்போம் என்றும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது உயிரோடிருந்தால் இந்த அழிவுள்ள சரீரம் களைந்துப் போடப்படும் என்றும் போதிக்கிறது (I தெசலோனிக்கேயர் 4:16,17) மேலும், அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக் கிறபடியே என்றும் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது (எபிரெயர் 9:27).

அப்போஸ்தலனாகிய பவுல், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். (II கொரிந்தியர் 5:10) என்று அறிவித்தார்.

அநேகமாக இப்படிப்பட்ட சூழ்நிலையில் மிக முக்கியமான கேள்வி இவைகளாகத்தான் இருக்கும். ஒருவர் மரித்ததிலிருந்து நியாயத்தீர்ப்பு வரையிலான காலக்கட்டத்தில் என்ன நடக்கும்? வேறுவிதமாகச் சொன்னால் இக்காலகட்டத்தில் ஒருவர் எங்கே வசிக்கிறார்? அவர் இன்னும் உயிரோடு தான் இருக்கிறாரா? அருக்கு உணர்வு இருக்குமா? அவர் கல்லறையிலோ அல்லது மரித்த இடத்திலோ உணர்வற்ற நிலையில் இருக்கிறாரா?

லூக்கா 16: 19–31 வசனங்களில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஐசுவரியவான், லாசரு உவமையை சொல்லியிருக்கிறார். இவ்விருவரும் மரித்துப் போவதாக இயேசு சொல்கிறார். மரித்த லாசருவின் ஆத்துமா தேவ தூதர்களால் ஆபிரகாமின் மடியில் அல்லது மரித்த நீதிமான்கள் வசிக்கும், இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனால், அந்த ஐசுவரியவானின் ஆத்துமா தீ பற்றி எரியும் வேதனை இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அந்த ஐசுவரியவான் ஆபிரகாமை நோக்கி நீர் எனக்கு இரங்கி, லாசுரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவை குளிரப் பண்ணும்படி அனுப்ப வேண்டும் என்று கதறினான். அதற்கு ஆபிரகாம் மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய். லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான். அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவன் தேற்றப்படுகிறேன், நீயா வேதனைப்படுயிறாய் என்றார்

மேலும், ஆபிரகாம், அதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்கு கடந்து போகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத் திற்கு கடந்து வரவும், மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களு க்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளவு

உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றார். அப்பொழுது அந்த ஐசுவரியவான். அப்படியானால், தகப்பனே எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு, அவர்களுக்கு சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி அவர்களுக்கு மேசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றார். இங்கே போதிக்கப்பட்டிருக்கும் வெளிப்படையான உண்மை என்னவென்றால், மரித்துப் போனவர்கள் தங்கள் வசிப்பிடங்களை மாற்றவும் முடியாது, பூமியில் உயிரோடிருக்கிறவர்களை சந்திப்பதற்கு வரவும் முடியாது.

### உயிர்த்தெழுதலும் நியாயத்தீர்ப்பும் எப்போது நடைபெறும்?

சிலர் இயேசு சொன்ன இந்த உவமையில் அந்த ஐசுவரியவான் ஏற்கனவே பாதாளத்தில் இருக்கிறான். லாசரு பரதீசியில் இருக்கிறார். அப்படியென்றால், பொதுவான உயிர்த்தெழுதலும், எல்லோருக்குமான நியாயத்தீர்ப்பும் எப்படி இருக்கும்? இங்கே ஒன்றும் பிரச்சனை இல்லை. இந்த வாழ்க்கையில் கூட ஒரு கொலைகாரன் பிடிபடும்போது, அவனுடைய தண்டனை நாளான இறுதித்தீர்ப்பு நாள் வரை சிறைச்சாலையில் தான் அடைக்கப்படுகிறான். அதே போல் தான் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவன் மரிக்கும் போது மரித்த நீதிமான்கள் வாசம் செய்யும் இடமான பரதீசுக்கு உடனே போகிறார். அதேபோல் ஒரு துன்மார்க்கன் மரிக்கும்போது அவர்கள் வேதனை அனுபவிக்கும் இடமான பாதாளத்திற்கு போகிறார்கள்.

ஆயினும், கிறிஸ்து மறுபடியும் வரும் போது (I தெசலோனிக்கேயர் 4:16) எல்லோரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்துன. ஏற்கனவே, பரதீசு அல்லது பாதாளத்தில் இருக்கும் ஆத்துமாக்களோடு ஐக்கியப்பட்டு நாம் கர்த்தரால் நியாயந்தீர்க்கப்படுவதற்கு அழிவில்லாத சரீரத்தை தரித்துக் கொள் வார்கள் (அப்போஸ்தலர் 17:31 மத்தேயு 25:31-46). கடைசியாக, நம் கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகளின்படி அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் (மத்தேயு 25:46).

### இது ஓர் உவமையா?

சிலர் லூக்கா 16 ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள இந்த சம்பவம் ஓர் உவமை தான். அதுமாத்திரமல்ல, உவமைகளில் நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். இச்சம்பவம் உவமையாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி

இங்கே போதிக்கப்பட்டிருக்கும் உண்மை மாறுவதில்லை அதாவது, மரித்தவர்கள் தாங்கள் யார் என்பதைக் குறித்த உணர்வுள்ளவர்களாக இருந்து இவ்வுலகில் தாங்கள் செய்த காரியங்களையும் தாங்கள் அறிந்த ஜனங்கள் செய்த காரியங்களை குறித்த உணர்வுள்ளவர் களாகவும் இருக்கிறார்கள்.

ஆத்துமாக்கள் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் அல்லது இழந்து போனார்கள் என்பதை பொறுத்து பரதீசு அல்லது பாதாளத்திற்குச் செல்வார்கள் நியாயத்தீர்ப்பு நாளில் ஜீவ புத்தகம் திறக்கப்படும். அப்புத்தகத்தில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைவார்கள் [வெளி. 20:12; மத்தேயு 25:31-46] மரணமும், நியாயத்தீர்ப்பும் இறுதியானது, அதேபோல் ஒருவருடைய போய் சேருமிடமும் நித்தியமானது, இரண்டாம் வாய்ப்பு என்பது யாருக்கும் கொடுக்கப்படமாட்டாது.

**பரலோகத்தை வேதவாக்கியங்கள் எப்படி விவரிக்கின்றன?**

கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்: அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்று போம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதா யிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உடையவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடு காத்திருங்கள்.

அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம் அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம் [II பேதுரு 3:10-12]. அதென்னவென்றால், சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலை யாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயா தீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தின வரா லேயே மாயைக்கு கீழ்பட்டிருக்கிறது. ஆகையால், நமக்குத் தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாயத் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது.

# உங்களை ஒப்புக்கொடுங்கள்

## Give Yourselves

Bro. அர்ஜுணன்

புதிய ஏற்பாட்டு காலத்தில் கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் தங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்த ஒரு சில சகோதரர்களையும் சகோதரிகளையும் பற்றி இவ்வேளையிலே தியானிக்கவுள்ளோம். லேவி என்ற மத்தேயு, இவன் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்தை எழுதியவன். இந்த லேவி என்பவன் கர்த்தருடைய ஊழியத்திற்காக தான் தெரிந்து கொள்ளப்பட்ட போது, அதை பெரும் பாக்கியமாக கருதினான். அவன் வரி வசூலிப்பவனாக இருந்தான். இயேசு அவனை அழைக்கும் போது அவன் தனக்குள்ள எல்லா வற்றையும் விட்டு அவருக்குப்பின் சென்றான். இந்த நற்செய்தியின் நிமித்தமாக '' அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்து பண்ணினான். அநேக ஆயக்காரரும் மற்றவர்களும் அவர்களோடே கூடப் பந்தியிருந்தார்கள்'' [லூக். 5:29]. இவன் எவ்வளவு சந்தோஷமுள்ளவனாயிருந்தால் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செயதிருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள்.

நம்மில் எத்தனைபேர் கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுத்தவுடன் இந்த விதமாக சந்தோஷத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுகிறோம்? நம்முடைய வீட்டில் புதிதாக ஒரு குழந்தை பிறந்துவிட்டால் மகிழ்ச்சியில் சாக்லெட் வாங்கிக் கொடுக்கிறோம். நாம் பரீட்சையில் பாஸ் பண்ணிவிட்டால் ஏதோ ஒரு இனிப்பு வாங்கிக்கொடுக்கின்றோம். ஆனால் ஞானஸ்நானம் பெற்றவர்களும், கர்த்தருடைய ஊழியத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களும் இந்த மத்தேயுவைப்போல ஒரு பெரிய விருந்தை ஏற்பாடு செய்கிறார்களா? செய்வதில்லை. ஆனால் தனிப்பட்ட விதத்தில் இந்த விதமாக சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்வதில்லை. ஒரு பள்ளியில் ஆசிரியருக்கு பதவி உயர்வு கிடைத்துவிட்டால் அன்று அவர் எல்லா ஆசிரியர்களுக்கும் பிரியாணி வாங்கி கொடுக்கிறார். இதில் ஆசிரியர்களுடைய தகுதிக்கு ஏற்ப சந்தோஷத்தை பகிர்ந்துகொள்ளுகிறார்கள். கர்த்தருடைய வேலை என்பது உலகத்தில் உள்ள எல்லா வேலைகளைக்காட்டிலும் சிறப்பானது அதற்கு நிகரான வேலை இந்த உலகத்தில் எதுவுமில்லை என்பதை அறிந்த லேவி என்ற மத்தேயு அவனோடு உள்ள அனைவரையும் அழைத்து ஆண்டவர் இயேசுவுக்கு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தினான். இதைப்போல பழைய ஏற்பாட்டு காலத்தில் எலிசா என்பவன் தன் ஏர்மாடுகளை அடித்து விருந்து செய்து எலியாவின் பின்னே ஊழியத்திற்கு சென்றான் எனக் காண்கிறோம்.

மேலும், புதிய ஏற்பாட்டு காலத்தில் குறிப்பாக இயேசுவின் நாட்களில் ''ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்'' (லூக். 8:3). ஆண்டவர் இயேசு அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்துகொண்டு வந்த நாட்களில் அவருடைய ஊழியத்திற்கு பணம் தேவையாக இருந்திருக்கும். அந்த தேவைகளை அவருடைய உபதேசத்தினால் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களில் யோவான்னாள், சூசன்னாள் போன்றவர்கள் தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்தார்கள். ஊழியத்திற்கு வேண்டிய பணத்தை ஆண்டவர் இயேசு , தேவனுடைய உபதேசத்தின் மூலமாகவே பெற்றுவந்தார். இன்றைய நாட்களில் ஊழியத்திற்கு பணம் மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது. அதை யார் கொடுப்பார்? எங்கே கிடைக்கும் என்று அங்கும் இங்கும் அலையும் ஒரு கூட்டம் ஒருபுறம் இருக்கிறது. கர்த்தருடைய ஊழியத்தில் அந்த ஊழியத்திற்கு தேவையானதை அவரோடு கூட இருந்த சீஷர்களும் சீஷிகளும் கொடுத்து தாங்கியிருக்கிறதை நாம் வசனங்களின் வாயிலாக அறிகிறோம். இப்படி ஆண்டவருக்கும் அவருடைய உபதேசங்களுக்கும் தங்ளை ஒப்புக்கொடுக்கக்கூடிய சகோதர, சகோதரிகள் சபைகளில் எழும்பவேண்டும்.

அதைப்போல தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்த ஒரு பாவியாகிய ஸ்திரீயைக் குறித்துப்படிக்கிறோம். '' அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமள தைலத்தைப் பூசினாள் '' (லூக்.7:38). இவள் தான் ஒரு பாவி என்பதை அறிந்து தன்னை முழுவதுமாக தாழ்த்தி இயேசுவின் முன்பு நிற்பதற்கு தான் தகுதியற்றவள் என்பதை எண்ணி இயேசுவின் பின்பாக நின்றுகொண்டு அழுது, தன்னுடைய பாவத்தை கண்ணீரால் அவருடைய பாதங்களில் ஊற்றி பரிமள தைலத்தினால் நனைத்து தன்னுடைய கூந்தலினால் அவைகளை துடைத்தாள். அவளுடைய கீழ்ப்படிதலையும், மனமாறுதலையும் கண்டு கர்த்தர் அவளை மன்னித்து இனி பாவம் செய்யாதே என்று அனுப்பிவிட்டார். அழைத்த பரிசேயன்; அவருக்கு , கால்களை கழுவ தண்ணீர் தரவில்லை, ஆனால் இவளோ இயேசுவின் மீது கொண்ட அன்பினால் அவருடைய பாதங்களை பரிமளதைலங்கொண்டு பூசினாள். இவள் ஆண்டவருக்கு செலுத்தின பரிமளதைலம் மிகவும் விலையேறப்பெற்றது. ஒரு சாதாரண தைலத்தை கொண்டு வந்து இயேசுவுக்கு பூசும்படியாக இவள்

நினைக்கவில்லை. மிகவும் விலையேறப்பெற்ற தைலத்தை அவருக்கு பூசவேண்டும் என்று எண்ணினவளாக பரிசேயனுடைய வீட்டிற்கு வந்து இயேசுவை சந்தித்தாள். அவளுடைய ஒப்புக்கொடுத் தலைப்பார்த்தீர்களா? உங்களுடைய ஒப்புக்கொடுத்தல் எப்படிப் பட்டதாக இருக்கிறது? உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட நீங்கள் அவருக்குச் செலுத்தப்போகும் காரியம் எப்படிப்பட்டது? முதலாவது உங்களையே அவருக்கு ஒப்புக்கொடுங்கள், பின்பு உங்க ளுடைய உடைமைகளை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். வானமும் பூமியும் கர்த்தருடையது.

இயேசுவின் நாட்களில் திரளான ஜனங்கள் தம்மை பின்பற்றுவதை அறிந்த கர்த்தர் அவர்கள் சாப்பிடாமல் அவருடைய உபதேசங்களை கேட்பதை அறிந்து, அவர்களுக்கு உணவு கொடுக்கும்படி சீஷர்களை கேட்டுக்கொண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் இத்தனை திரளான ஜனங்களுக்கு வேண்டிய உணவு எங்கே கிடைக்கும் என்று சொல்ல ஆரம்பித்தனர். உங்களிடம் என்ன இருக்கிறது என்று கேட்கும் போது, ''இங்கே ஒரு சிறுபையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்'' (யோவா. 6:9). அதை வாங்கி ஆசீர்வதித்து கொடுத்தார். ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்களும் ஸ்திரீகளும் சாப்பிட்டு மீதமானதை பன்னிரெண்டு கூடைகள் நிறைய எடுத்தனர். அந்த ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் ஆண்டவர் இயேசு கேட்டவுடன் அந்த சிறுபையன் அதை சீஷர்களிடம் கொடுத்தான் அல்லவா அதை நினைக்கும்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அதினால் தான் ஆண்டவர் இயேசு சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வர இடங் கொடுங்கள் என்றாரோ! என்று எண்ணத்தோன்றுகிறது. பாருங்கள் சிறுபிள்ளைகளுக்குக்கூட கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் அந்த பையன் கொடுத்தபடியினாலே அங்கே அநேகர் சாப்பிட்டு திருப்தி யடைந்தனர். புதிய ஏற்பாட்டு காலத்தில் இந்த சிறுபையனும் தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறான் என்றால் அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உங்களுடைய பிள்ளைகளை இந்த விதமாக கொடுக்கும் விஷயத்தில் பழக்கப்படுத்துகிறீர்களா? மேலை நாடுகளில் உள்ள சபைகளில் பிள்ளைகளும் அதிகமாக கொடுக்கும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் உள்ள கர்த்தருடைய சபைகளிலும் கொடுக்கும் பழக்கம் உருவாக வேண்டும்.

இயேசுவின் உபதேசங்களை அதிகமாகக் கேட்ட குடும்பங்களில் மார்த்தாளின் குடும்பமும் ஒன்று. ஒருநாள் ''அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனே கூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்'' (யோவா. 12:2). தேவ ஊழியர்களை உபசரிப்பதில் ஒரு தனி கவனத்தை மார்த்தாள் பெற்றிருந்தாள். அதுவும் ஆண்டவர் இயேசுவுக்கு உபசரிப்பதில் அவளுடைய பங்கு அதிகமாயிருந்தது. இப்படி பணிசெய்யும்படியாக ஒப்புக்கொடுத்தவர்களைப்பற்றி நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். மேலும், யோசேப்பு என்று சொல்லக்கூடிய ஒரு சீஷன் இயேசுவின் சரீரத்தை எடுத்து துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி ''தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப்போனான்'' என்று மத்.27:60 வசனங்களில் படிக்கிறோம்.

இந்த காலத்திலும் கல்லறை பெரிய பிரச்சனையாகவே இருக்கிறது. இதனால் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொள்ளக்கூட தயங்குகின்றனர். இயேசுவை ஏற்றுக்கொண்டால் ஊரைவிட்டு ஒதுக்கிவைத்துவிடுவோம் என்று பயமுறுத்துகிறவர்களும் இருக்கிறார்கள். அப்படி ஏற்றுக்கொண்டால் எங்களுடைய அடக்க ஸ்தலத்தில் நீங்கள் அடக்கம் செய்யக்கூடாது என்று சொல்லுகிறவர்களும் உண்டு. இதே சூழ்நிலை இயேசுவின் நாட்களில் இருந்திருக்கக் கூடும். மேலும் மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. ஆகையால் யோசேப்பு தான் வெட்டிய கல்லறையிலே இயேசுவின் சரீரத்தை கொண்டுபோய் வைத்தான் எனக் காண்கிறோம். இவர்களெல்லாரும் இயேசுவின் உபதேசத்தினாலே தங்களையும், தங்களுடைய உடைமைகளையும் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுத்தார்கள். உங்களுடைய ஒப்புக்கொடுத்தல் எப்படிப்பட்டது?

✝

## தேவனுக்கு முதலிடம்

1. நாளில் முதல்மணிநேரத்தை தேவனுக்குக் கொடுங்கள்.
2. வாரத்தின் முதல் நாளை தேவனுக்குக் கொடுங்கள்.
3. வருமானத்தின் முதல் பகுதியை தேவனுக்குக் கொடுங்கள்.
4. முடிவுகள் எடுக்கும்போது, முதலாவது முன்னுரிமை தேவனுக்குக் கொடுங்கள்.
5. உங்கள் இருதயத்தில் முதல் இடத்தை தேவனுக்குக் கொடுங்கள்.

# அப்போஸ்தலர் நடபடிகள்

## Acts fo The Apastles

Bro. P.C. **பிலேமோன் ராஜா**

இந்த புத்தகம், புதிய ஏற்பாட்டில் ஐந்தாவது புத்தகமாக வருகின்றது. இதை எழுதியவர் மருத்துவராகிய லூக்கா (அப் 1:1–2), 'மகா கனம் பொருந்திய தெயோப்பிலு' என்பவருக்கு எழுதுகின்றார். இந்த புத்தகம் லூக்கா நற்செய்தி நூலின் தொடர்ச்சியாக உள்ளது. லூக்கா, நற்செய்தி நூலை ஆண்டவர் இயேசு பரமேறி சென்றதுடன் முடித்திருப்பார் (லூக் 24:51–53): இந்த நூலை, ஆண்டவர் பரமேறி செல்வதிலிருந்து ஆரம்பித்திருப்பார் (அப் 1:3–11).

இந்த புத்தகம் அப்போஸ்தலருடைய நடபடிகள் என்று அழைக்கப்பட்டாலும் , 12 அப்போஸ்தலர்களின் ஊழியங்களைப் பற்றியும் பேசுவதில்லை . 1 முதல் 12 அதிகாரங்கள் பெரும்பாலும் அப்போஸ்தலனாகிய பேதுருவின் ஊழியமும், 13 முதல் 28 அதிகாரங்கள் பெரும்பாலும் சிறப்பு அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தினை பற்றியும் பேசுகின்றன. ஏறக்குறைய 35 ஆண்டு கால வரலாற்றை இப்புத்தகத்தில் பதிவு செய்துள்ளனர் (கி.பி. 33 – 67). கிறிஸ்துவின் சபையானது பலத்தோடே நிறுவப்பட்டதிலிருந்து, எவ்வளவு வீரியமாக உலகமெங்கும் வளர்ந்து பெருகினது என்பதை இப்புத்தகம் நமக்கு தெளிவுப்படுத்துகின்றது.

இந்த புத்தகத்தில், மனமாற்ற நிகழ்வுகள் நிறைய பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதைக் குறித்து படிப்பது மிகவும் ஆழமான பாடம், சுருக்கமாக சொல்வதென்றால், ஒருவர் முதலாவது சத்தியத்தினை கேட்க வேண்டும்! ஏன் முதலாவது சத்தியத்தினை கேட்க வேண்டும்? ஏனெனில், ஏவாள் பாவம் செய்ய காரணம், முதன் முதலில் சாத்தான் சொன்ன 'பொய்யை' காது கொடுத்து கேட்டாள்.

அடுத்ததாக, நாம் கேட்ட சத்தியத்தினை மனதார விசுவாசிக்க வேண்டும், மாறாக, ஏவாள் பொய்யை மனதார நம்பினாள். அடுத்ததாக, செய்த பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். அடுத்து, தனது விசுவாசத்தினை வாயினால் அறிக்கை செய்ய வேண்டும். பிறகு, பாவ மன்னிப்பிற்கென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளைபடி (மத் 28:1–20), பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவரின் பெயராலே திருமுழுக்கு பெற வேண்டும்.

இந்த புத்தகத்தில், அநேகரால் பெரிதாக கவனிக்கப்படாத, ஆனால், கற்றுக்கொள்ள வேண்டிய சில நபர்கள் இருக்கின்றனர். அவர்களை பற்றி படிப்பதும், அவர்களிடமிருந்து எச்சரிக்கையின் செய்தியையும், உற்சாக பாடத்தினையும் கற்றுக் கொள்வதும், நமது ஆன்மீக வாழ்வை கர்த்தருக்குள் வளர்க்க உதவியாக இருக்கும். அவர்களில் சிலரிடமிருந்து...

**I. முதல் நூற்றாண்டுசபையார் அ) உறுதியான விசுவாசம்**

(அப் 2:42) அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

முதல் நூற்றாண்டு சபையார் உறுதியான விசுவாசம் உடையவர்களாக இருந்தனர். அவர்களது விசுவாச உறுதியை பல்வேறுபட்ட நிகழ்ச்சியின் வாயிலாக நாம் அறிந்துகொள்ள முடியும். எவ்வளவோ துன்பங்களையும், உபத்திரவங்களையும், போராட்டங்களையும் சந்தித்த போதும், தங்களது விசுவாசத்தில், தாங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்தில் உறுதியாக இருந்தனர்.

**ஆ) கொடுப்பதில் உற்சாகம்**

(அப் 2:44, 45) விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.

காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொரு வனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்.

அவர்கள் கொடுக்கின்ற காரியத்தில் மிகவும் உற்சாகமாக இருந்தனர். தங்களையே கர்த்தருக்கு கொடுத்தவர்களுக்கு, தங்களுடையதை கொடுப்பது ஒன்றும் பெரிய காரியம் இல்லை. சபையின் தேவைக்குதக்கதாக, நற்செய்தி பரவ தேவையான எல்லாவற்றையும் சந்திக்க, தங்களை தாங்களே கர்த்தருக்குள் உற்சாகப்படுத்திக் கொண்டதால் தான், அவர்களால் அவ்வாறு செய்ய முடிந்தது என்பதை நாம் அறிய முடிகின்றது. ஆண்டவருக்கு கொடுப்பதில் ஒருவர் நேர்மையாக இல்லாதவராக இருந்தால், அவர் ஆண்டவருக்கு தன்னை கொடுப்பதிலும் நேர்மையற்றவராகவே இருக்கின்றார். அப்படிப்பட்டவர்களை விட்டு விலகி நிற்பது நம் விசுவாசத்தினை காக்க உதவியாக இருக்கும்.

**இ) கர்த்தரோடு நெருக்கம்**

(அப் 2:46-47) அவர்கள் ஒருமைப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்.

அனுதினமும் கர்த்தரை தேடுவதிலும், துதிப்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தனர். கர்த்தரோடு தங்கள் வாழ்வை நெருக்கமாக்கி கொள்ள தேவையானவற்றை எல்லாம் தேடி, விரும்பி செய்தனர். ஒரு பாடல் வரி தான் ஞாபகத்திற்கு வருகின்றது....

**முழங்காலில் நிற்க வேதத்தை அறிய**
**தினந்தோறும் தேவா உணர்த்தும்**
**உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்**
**என்றுமே வராமல் காத்திடும்**

இது பாடல் மாத்திரமல்ல, ஆண்டவரை நேசிக்கின்ற அநேகரின் ஜெபமாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## ஈ) நற்செய்தியை பரப்புவதில் பேராவல்

(அப் 8:3-4) சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான். சிதறிப்போனவர்கள் எங்குதிரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.

சிதறிப்போனவர்கள், அடிபட்டு, காயப்பட்டு ஓடினபோது, தாங்கள் போய் சந்தித்த மக்களிடத்தில் தங்களது காயங்களையும், போராட்டங்களையும், உபத்திரவத்தினையும், வலிகளையும் பற்றி பேசாமல், எங்கும் திரிந்து நற்செய்தியை சொன்னார்கள் என்பதிலிருந்து அவர்களது பேராவலை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. நற்செய்தியை நானிலமெங்கும் பரவ செய்வது நம் ஒவ்வொருவரின் பிரதான கடமை. ஏனெனில் கிறிஸ்து நமக்கு கொடுத்த பிரதான கட்டளை இதுவாகும் (மாற்கு 16:15; 1 கொரி 9:16). தினந்தோறும் நமது அன்றாட செயல்களில் நற்செய்தி சொல்வதும் ஒன்றாக இருக்க வேண்டும். அதற்காக ஜெபிக்க வேண்டும் மற்றும் முயற்சிக்க வேண்டும்.

### 2. ஆத்தும தூக்கம் கொண்ட ஐத்திகு

(அப் 20:9) அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயகத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.

பவுல் நெடுநேரம் பிரசங்கம் செய்தார்; அதனால் அல்லது, உடல் சோர்வினால் ஐத்திகு தூங்கியிருக்கலாம், இது போய் பெரிய

பிரச்சனையா? என நாம் நினைக்கலாம். அதுவல்ல, கர்த்தருடைய வசனம் காதில் கேட்காதபடி, நம்மில் அநேகர் ஆவிக்குரிய வகையில் தூங்கிகொண்டு தான் இருக்கின்றோம். அதெல்லாம் கிடையாது! நாங்கள் தினமும் பைபிள் படிக்கிறோம், சபைக்கூட்டங்களில் தவறாது பங்கு பெறுகின்றோமே என நீங்கள் சொல்வது எனக்கு கேட்கின்றது. சரி? அப்படி கேட்ட வசனங்களால் நம் குணம், நாம் வாழும் முறை மாறியிருக்கின்றதா? இல்லையெனில், நாமும் காதில் நுழைந்த வசனம் இருதயத்தில் நுழையாதபடி ஆவிக்குரிய தூக்கம் தூங்கிக்கொண்டிருக்கின்றோம். இது ஆபத்தானது! சத்துரு களைகளை விதைக்க' ஏதுவாகும் [மத் 13:25]. வேத வசனங்கள் உள்ளே செல்லவில்லை எனில், இந்த உலகத்தின் பாவங்கள் உள்ளே சென்றுவிடும் அபாயம் இருக்கின்றது. வசனங்களை நாம் வாசிப்பதற்கும் , தியானிப்பதற்கும் மாத்திரமல்ல, நம்மை திருத்துவதற்கும் பயன்படுத்துவோம். [எபே 5:14] ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.

# நவீன விக்கிரகாராதனை

## New Age Jdolatuy

Bro. **பென்னி மார்ட்டின்**

**அ**வசரமும், பரபரப்பும் நிறைந்த இந்த யுகத்தில் எல்லாமே நவீனமயமாகி நம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன. ஆனால், பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவனால் அருவருக்கப்பட்ட விக்கிரகாராதனை நாளுக்கு நாள் நவீன அவதாரம் எடுத்து, ஒவ்வொரு மனித இருதயத்தையும் விக்கிரக தொழிற் சாலையாக மாற்றி வருகிறது. தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த பத்து கட்டளைகளில் முதல் கட்டளையே விக்கிரகாரதனை வேண்டாம் என்பதாயிருக்கிறது. **என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்** (யாத்திராகமம் 20:3–5). புதிய ஏற்பாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எந்த விக்கிரகத்தையும் ஆராதிப்பதில்லையே அதற்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் இல்லையே என்று தப்பாக தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உள்ளப் பூர்வமான உண்மை என்னவென்றால் தேவனுக்கு இரண்டாம் இடத்தைக் கொடுத்து ஒரு பொருளின் மீதோ அல்லது ஒரு நபரின் மீதோ அதிகமாக கவனத்தை செலுத்தும் போதோ அல்லது அவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதோ விக்கிரக ஆராதனையாக மாறிவிடுகிறது. விக்கிரகம் என்பது மனிதனால் பக்தியின் அடிப்படையில் படைக்கப்பட்ட ஒரு பொருளாகும். பழங்கால விக்கிரகாராதனையாக இருந்தாலும் சரி, நவீன விக்கிரகாராதனையாக இருந்தாலும் சரி, அது தேவனை விட்டு விலகி தேவனுக்கு மாற்றாக ஒன்றைத் தழுவிக் கொள்வதாகும். சிலருக்கு உலக ஆஸ்திகள் அவர்களின் ஆஸ்தான விக்கிரகமாக மாறிவிடுகிறது. அவர்கள் சதா எப்போதும் அதையே சிந்தித்துக் கொண்டு, அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் விக்கிரகாராதனை செய்பவர்களாகி விடுகிறார்கள். சிலருக்கு பொழுது போக்கு நிகழ்ச்சிகள் விக்கிரகமாக மாறி பொழுதெல்லாம் அவர்களுடைய சிந்தையை ஆக்கிரமித்து ஆத்துமாக்களுக்கு உளை வைத்து விடுகிறது.

இவைகளைக் குறித்து சற்று விரிவாகவும், விவரமாகவும் வேதத்தின் வெளிச்சத்தில் பார்த்து இத்தகைய நவீன விக்கிர காராதனையிலிருந்து நம்மை நாம் விலக்கிக் காத்துக் கொள்வோம்.

## I பொருளாசை எனும் விக்கிரகாராதனை

நம்மில் பலர் விக்கிரகாராதனை என்றால் விக்கிரகங்களை உண்டாக்கி அதை வணங்க வேண்டும் அல்லது பிற மதகோயில் களுக்குப் போய் அவைகளை வணங்க வேண்டும், அதை நாம் செய்வதில்லை. எனவே, விக்கிரகாரதனையிலிருந்துநாம் வெகுதூரத்தில் இருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, ஆகையால் விபசாரம், அசுத்தம், மோகம், துர்ச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள் என்று எழுதுகிறார் [ கொலோசெயர் 3:5]. பணப்பசி நிறைந்த இவ்வுலகில் பலர் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பயணங்கள் மேற்கொண்டு பொருள் ஈட்டுகிறார்கள். இவ்வுலகில் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ பொருள் ஈட்டுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், போட்டி போட்டுக் கொண்டு பொருள் ஈட்டி ஆத்துமாவை நஷ்டப்படுத்துவதைத் தான் வேதாகமம் தவறு என்று சுட்டிக்காட்டுகிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார் [லூக்கா 12:15]. ஆவிக்குரிய காரியங்களில் ஆவலில்லாமல் சதா உலகப் பொருள்களையே சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் தங்கள் சமாதான த்துக்கு சமாதி கட்டுவது மட்டுமல்லாமல் தங்கள் ஆத்துமாக்களை அதலப் பாதாளத் திற்கு அழைத்துச் செல்கின்றனர். தேவனுடைய பிள்ளை களாகிய நாம் இந்த விபரீத விளையாட்டில் விழுந்து விடாத படி விக்கிரகார தனைக்கு விலகியிருந்து விண்ணுலகிற்கு மகிமையை ஏறெடுப்போம்.

## II சரீரம் எனும் விக்கிரகாராதனை

இன்றைய நாட்களில் உலகெங்கும் மனிதர்கள் முன்னெப்போது மில்லாத அளவுக்கு தங்கள் சரீரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. அழகு நிலையங்களும், உடற்பயிற்சி மையங்களும் காளான்களைப் போல் காணும் இடங்களிளெல்லாம் காட்சி அளிக்கின்றன. ஆண்களும், பெண்களும் ஆயிரக்கணக்கான பணத்தை தங்கள் சரீரங்களுக்காக கொட்டித் தீர்க்கிறார்கள். தேவன் நமக்கு கொடுத்த சரீரத்தை பேணிக்காப்பது நம் கடமைதான். ஆனால், அதற்கென அதீத அக்கறை காட்ட வேண்டிய அவசியமில்லை. சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குதத்தமுள்ளதாகையால் எல்லா வற்றிலும் பிரயோஜனமுள்ளது. என்று வேதாகமும் நம்மை எச்சரிக்கிறது [I தீமோத்தேயு 4:8].

இன்றைய நாட்களில் பெரும்பாலான மக்கள் தங்கள் சரீரத்தைக் குறித்து சதா சிந்தித்து, அதைப் பேணுவதற்கு பெரும்பொருளை செலவு செய்ய தயாராக இருப்பதனால் அழகுக்கலை மையங்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்கள் உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. இந்த சரீர முயற்சிகளினால் எந்த நன்மையும் இல்லை என்று வேதாகமம் சொல்லவில்லை. இவைகளில் அற்ப பிரயோஜனம் உண்டு என்றுதான் வேதாகமம் சொல்கிறது. பல பயிற்சிகள் செய்து. உணவுக் கட்டுப் பாட்டுடன் இருந்து சரீரத்தை கட்டுக்கோப்புடன் வைத்திருந்தால் நம்மை விரக்தியடையச் செய்யும் வியாதிகளிடமிருந்தும் விடுபடலாம். நம்மை மண்ணை கவ்வச் செய்யும் மருத்துவ செலவுகளிலிருந்தும் விடுபடலாம். இப்படி சில சொற்ப அற்ப நன்மைகள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இவைகளெல்லாம் குறுகிய கால அளவு கொண்ட இவ்வுலக வாழ்க்கையோடு முடிந்து விடுகிறது. ஆனால், தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. எனவே, அற்ப நன்மைகளுள்ள சரீர முயற்சி அவசியமா அல்லது அதீத நன்மைகளுள்ள தேவபக்தி அவசியமா என்பதைப் பற்றி முடிவெடுக்கும் முழுப்பொறுப்பு நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஜனங்கள் தேவனுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் முதலிடத்தையும் விட்டுவிட்டு சதா சரீரத்தைப் பற்றி சிந்திக்கும்போது அது அவர்கள் சிந்தையை அதிகமாக ஆக்கிரமித்து, ஆதிக்கம் செலுத்தி அது விக்கிரகாராதனையாக மாறிவிடுகிறது.

எனவே, பிரியமான தேவனுடைய பிள்ளைகளே, விக்கிர காராதனை என்பது ஒன்றுமறியாமல் குறும்புத்தனமாகச் செய்யும் செயலோ அல்லது மாற்றுப் பாதையோ அல்ல. அது எல்லா வடிவத்திலும் தேவனுக்கு விரோதமானதும் தேவனை நிராகரிக்கும் ஒரு செயலாகும். பழைய ஏற்பாட்டின் நாட்களில் விக்கிரகாராதனை தேவனுக்கு அருவருப்பாயிருந்தது இக்காலத்திலும் விக்கிரகாரா தனை தேவனுக்கு அருவருப்பாகத்தான் இருக்கிறது. இன்றைய நாட்களிலும் பல கிறிஸ்தவர்கள் தேவனுக்கு கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தையும், முதலிடத்தையும் விட்டுவிட்டு பணம் பட்டம் பதவி என்று இவைகள்மீது இதயத்தைப் பதிக்கும்போது உலகப் பொருள்களிலும், உறவுகளிலும் உள்ளப்பூர்வமாக தங்கள் உற்சாகத்தைக்காட்டும்போது மறைமுகமாக விக்கிரகாராதனையில் ஈடுபட்டு விடுகிறார்கள் இது நவீன விக்கிரகாரதனையாகும். இது நம்மை நலிவடையச் செய்து விடும். நற்பிதாவிடமிருந்து வெகுதூரத்திற்கு அழைத்துச் சென்று விடும். ✝

# தேவன்
# நான் உங்களை நேசிக்கிறேன்
## *I Love You*
### *Betty Burton Choate*

ஒரு மிகப்பெரிய சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தி தன்னுடைய குடிமக்களினிடத்திலிருந்து அன்பின் வார்த்தைகளோ அல்லது அன்பின் வெளிப்பாடோ ஒரு துளி கூட காட்டப்படாத காலகட்டத்தில் தன்னை முற்றிலுமாக தாழ்த்தி தன் குடிகளைப் பார்த்து தன்னுடைய அன்பை எத்தனை முறை தான் வெளிப்படுத்துவார்? உபாகமம் 7 ஆம் அதிகாரத்தை நான் மறுபடியும் வாசித்த போது தெரிந்து கொள்ளப்பட்ட தேசமாகிய இஸ்ரவேல் தேசத்தின் மீது தேவன் கொண்டிருந்த அன்பை மறுபடியும் மறுபடியும் வெளிப்படுத்தும் விதத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்தேன். தேவன் தம்முடைய அன்பு நிராகரிக்கப்படும் என்பதை அறிந்தும் தம்முடைய அன்பை ஜனங்களிடம் வெளிப்படுத்தினது ஆச்சரியமாயிருக்கிறது. நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும் படி தெரிந்து கொண்டார். சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்பு வைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்ச மாயிருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினால், உங்கள் பேரில் அன்பு வைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்க வேண்டும். என்பதினாலும், கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்று அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக் கொண்டார். ஆகையால், உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும் தம்மில் அன்பு கூர்ந்து, தமது கற்பனை களைக் கைக்கொள்ளுகிறவர் களுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன் படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும் தம்மைப் பகைக்கிறவர்களுக்குப் பிரத்தியட்சமாய்ப் பதிலளித்து அவர்களை அழிப்பார் என்றும் தம்மைப் பகைக் கிறவனுக்கு அவர் தாமதியாமல் பிரத்தியட்சமாய் பதிலளிப்பார் என்றும் நீ அறியக்கடவாய். ஆகையால் நீ செய்யும்படி நான் இன்று உனக்குக் கட்டளையிடுகிற கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங் களையும் கைக்கொள்வாயாக. இந்த நியாயங்களை நீங்கள் கேட்டு

கைக் கொண்ட அவைகளின் படி செய்வீர்களானால் அப்பொழுது உன் தேவனாகிய கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையையும் கிருபையையும் உனக்காகக் காத்து, உன் மேல் அன்பு வைத்து, உன்னை ஆசீர்வதித்து, உனக்குக் கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் உன்னைப் பெருகபண்ணி, உன் கர்ப்பக்கனியையும், உன் நிலத்தின் கனிகளாகிய உன் தானியத்தையும், உன் திராட்சரசத்தையும், உன் எண்ணெயையும் உன் மாடுகளின் பலனையும், உன் ஆட்டு மந்தைகளையும் ஆசீர்வதிப்பார் [ உபாகமம் 7:6 to 13]

அதன் பின்பு பின்வரும் வார்த்தைகளில் பரஸ்பர அன்பு தேவனால் எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி அவர்கள் எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்.

இன்றைய நாட்களில் சபையானது தேவனால் தெரிந்து கொண்ட ஜனமாகவும், அவருடைய ஆவிக்குரிய இஸ்ரவேலராகவும், அவரால் நேசிக்கப்படுகிற ஜனங்களையும் உள்ளடக்கிய ஒன்றாகவும் இருக்கிறது. தேவனுடைய இந்த அன்பிற்கான காரணம் நாம் பெரியவர்கள் என்பதாலோ அல்லது இவ்வுலகில் சக்தி வாய்ந்தவர்கள் என்பதாலோ அல்ல. தேவன் நம்மையும் பொருட்டென்று எண்ணி, அவருடையவர்களாக நம்மை உண்டாக்கின படியால் இது சாத்திய மாகிறது. [I யோவான் 4:10]. இஸ்ரவேலுக்கு அறிவிக்கப்பட்டவை களை நமக்கு வெளிப்படுத்துகிறது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து ; நம் முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக நம் முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. இருந்த போதிலும், இஸ்ரவேலர்கள் தேவனைப் பார்த்த விதத்திற்கும் நாம் தேவனை பார்க்கிற விதத்திற்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு மிகப்பெரிய இடிச்சத்தங்களையும், கண்ணைக் கூசும் மின்னல்களையும், மிகப்பிரமாண்டமான வெடிச் சத்தங்களையும் வானில் கேட்டோம், அதிகமாக திகிலடைந்தோம். அந்த ஆபத்துகளில் இருந்தெல்லாம் தேவன் நம்மை பத்திரமாக பாதுகாத்தார். நம் பிதாவாகிய தேவன் சீனாய் பர்வதத்தில் தோன்றிய போது அடுக்கடுக்காக நடத்தேறிய சம்பவங்னளை என்றைக்காவது கவனித்துப் பார்த்ததுண்டா? தேவன் தம்முடைய மகத்துவத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்குக் காண்பித்தார். இச்சம்பவம் யாத்திராகமம் 19:16 –19] வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின் மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காசத்தமும் உண்டாயிற்று; பாளையத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள். அப்பொழுது ஜனங்கள் தேவனுக்கு எதிர் கொண்டு போக, மோசே அவர்களைப் பாளையத்திலிருந்து புறப்பட பண்ணினான்; அவர்கள் மலையின் அடிவாரத்தில் நின்றார்கள். கர்த்தர் சீனாய் மலையின் மேல் அக்கினியில் இறங்கினபடியால், அது முழுவதும் மிகவும் மிகவும் அதிர்ந்தது. எக்காள சத்தம் வரவர மிகவும் பலமாய் தொனித்தது. மோசே பேசினான்: தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார்.

நாமும் கூட ஏதாவது ஒரு மலை அடிவாரத்தில் நின்று கொண்டிருக்கும் போது இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின் மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காள சத்தமும் உண்டானால், அந்த மலை முழுவதும் புகைக்கடாய்க் காட்சியளித்தால், எக்காளசத்தம் தொனித்தால் நிச்சயமாக பயந்து நடுங்கிவிடுவோம்.

இந்த கிறிஸ்துவின் காலத்தில் தேவன் தம்மை எப்படி வெளிப்படுத்தியிருக்கிறார்? இரக்கமுள்ள தேவனாக நம் பாவங்களுக்கான பலியாக தம்முடைய ஒரே பேறான குமாரனை சிலுவைக்கு அனுப்பிக் கொடுத்த அன்புள்ள தகப்பனாக பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை பிதாவே என்று சர்வ சாதாரணமாக அழைக்க வில்லை என்பதை கவனித்தார்களா? சிலுவையில் கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதன் மூலமாக பரலோகத்தின் தேவனுடைய பிள்ளைகளாக நாம் தத்தெடுக்கப் பட்டிருக்கிறோம் (கலாத்தியர் 4:47). நம் சகோதரராகிய கிறிஸ்து நமக்காக தொடர்ந்து பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பரிசத்தில் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே (ரோமர் 8:34).

✝

**சிறந்த நாள்**

இவ்வுலகில் பெரும்பாலானோர் மனிதன் முதல் முதலாக சந்திரனில் கால் பதித்த அந்த நாள் தான் சிறந்த நாள் என்று நினைக்கிறார்கள். மனித இனம் சந்திரனுக்கு சுற்றுலாத்தான் சென்றுவர முடியுமே தவிர, அங்கேபோய் ஒரேயடியாக குடியேற முடியாது. உண்மையாகவே மனித இனத்துக்கு சிறந்த நாள் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த அந்த நாள்தான்.

# தேவன்

# இயேசு சொல்லாத சில காரியங்கள்

## *Some Things Jesus Did Not Say*

### *Bill Dillon*

பெரும்பாலும் ஜனங்கள் இயேசு சொன்ன வார்த்தைகளைப் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். ஆனால், இயேசு சொல்லாத பல காரியங்களை அவர் சொன்னதாக நினைத்து பேசுகிறார்கள்.

1. இயேசு சொல்லாத வார்த்தைகள், நீங்கள் உங்கள் நம்பிக்கையில் நேர்மையாயிருங்கள் உங்கள் நேர்மை உங்களை விடுதலை யாக்கும். ஆனால், இயேசு சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று சொன்னார் (யோவான் 8:32). நல்லவர்கள் தங்கள் மத உறுதிப்பாட்டில் நேர்மையாயிருந்து கொண்டு, நேர்மையாக தவறாயிருக்க வாய்ப்புண்டு.

2. இயேசு சொல்லாத வார்த்தைகள், அந்தக் கல்லின் மேல் என் சபைகளைக் கட்டுவேன், மனிதர்கள் தாங்கள் விரும்பிய ஏதாவது சபையில் ஆராதிக்கலாம். ஆனால் இயேசு இவ்விதமாகச் சொன்னார். இந்தக் கல்லின்மேல் என் சபைகளைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்தேயு 16:18). ஜனங்களால் தாங்கள் விரும்பிய சபையில் ஆராதிக்க முடியுமென்றால், தாங்கள் விரும்பிய கிறிஸ்துவை அவர்களால் ஆராதிக்க முடியும். இயேசு ஒரே ஒரு சபையைத்தான் காட்டினார். அவரே அந்த சபைக்கு தலையாகவும் இருக்கிறார். ஒருவர் தன் மனைவியை ஏதோ ஒரு காரணத்திற்காக விவாகரத்து செய்து விட்டு இன்னொரு பெண்ணை விவாகம் செய்பவன். விபச்சாரக்குற்றத்தை செய்யாதவனாயிருப்பான் என்று இயேசு சொல்லவில்லை. ஆனால், இயேசு எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான். தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்றுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் என்று தான் சொன்னார் (மத்தேயு 19:9). இந்த நாட்களில் விவாக உடன்படிக்கைகள் எந்த அளவுக்கு தம்பதிகளால் நிர்விசாரமாக பார்க்கப்பட்டு, உறவுகள் முறிக்கப்படுகிறன்றன என்பதை எல்லோரும் அறிவார்கள். இவைகள் தேவனுக்கு அளவிட முடியாத அவமனத்தைக் கொண்டு வருகின்றன.

3. இயேசு சொல்லாத வார்த்தைகள், விசுவாசிக்கிறவன் இரட்சிக்கப் படுவான், பின்னர் அவன் விரும்பினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள முடியும். மாறாக, இயேசு விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாத வனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று தான் சொன்னார் [மாற்கு 16:16]. இயேசு கொடுத்த ஒழுங்கு விசுவாசம், ஞானஸ்நானம் அதன் பின்பு இரட்சிப்பு. விசுவாசம் ஞானஸ்நானமல்ல இதைக் குறித்து சிந்தியுங்கள்.

4. இயேசு சொல்லாத வார்த்தைகள், ஒரு மனிதன் தேவனை தன் விருப்பப்படி தன்னால் எவ்வளவு சிறந்த முறை வெளிப்படுத்த முடியுமோ அவ்வளவு சிறப்பாக தேவனை ஆராதிக்க முடியும்.

ஆனால் இயேசு, தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும். யோவான் 4:24] என்று தான் சொன்னார். தேவனுடைய வார்த்தை சத்தியமாயிருக்கிற படியால் [யோவான் 17:17]. நம் ஆராதனை இந்நாட்களில் மனிதனுக்கான தேவனுடைய சித்தத்தை உள்ளடக்கிய புதிய ஏற்பாட்டின்படி இருக்க வேண்டும். தேவனை ஆராதிப்பதற்கு நீங்கள் ஈடுபடுத்தும் காரியங்களுக்கு புதிய ஏற்பாட்டு அதி காரத்தை காட்ட முடியுமா?

5. இயேசு கிறிஸ்து மத சம்பந்தமான தவறுகளை பொறுத்துக் கொள்ளுங்கள், எல்லோருக்கும் மத சம்பந்தமான காரியங்களில் தவறிழைக்க உரிமை உண்டு. பெரிய அளவில் சேதங்கள் ஒன்றும் ஏற்படவில்லை என்று சொல்லவில்லை.

இயேசு கிறிஸ்து மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ என்றும் சர்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்? என்று தான் சொன்னார் [ மத்தேயு 23:13-33]. மேலும், கிறிஸ்து பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை [ மத்தேயு 7:21]. வாசகரே, மேற் சொல்லப்பட்டவைகளில் நீங்கள் எதில் கவனம் செலுத்துவீர்கள்? இயேசு சொன்னவைகளுக்கா? சொல்லாதவை களுக்கா?

முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய் அங்கே கிறிஸ்துவை அறிவித்து மிகப்பெரிய ஊழியங்களைச் செய்தார். இந்த சம்பவங்களெல்லாம். அப்போஸ் தலருடைய நடபடிகள் 17 ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. தர்க்க ரீதியாக காரியங்களை எடுத்துரைப்பதில் வல்லவரான பவுல் அதே பாணியை பயன்படுத்தி தன் வாதத்தை முன் வைத்தார். மேலும், பவுல் பழைய ஏற்பாட்டு வாக்கியங்களை எடுத்துக்காட்டி, அதின் பாணியை பயன்படுத்தி தன் வாதத்தை முன் வைத்தார். மேலும், பவுல் பழைய ஏற்பாட்டு வாக்கியங்களை எடுத்துகாட்டி, அதில் குறிப்பிடப் பட்டிருக்கும் கிறிஸ்துவைப் பற்றி தீர்க்கதரிசனங்களை வைத்து காரணகாரியங்களை அவர்களுக்கு முன்வைத்தார். கிறிஸ்து பாடுபடவும் மரத்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும் இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினார். அதாவது, பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் கிறிஸ்துவின் பாடுகளையும் உயிர்த் தெழுதலையும் முன்னறிவித்தன. நசரேயனாகிய இயேசு எல்லா வேத வாக்கியங்களையும் நிறை வேற்றினார். அது அன்றைய தெசலோனிக்கேய பட்டணத்தாருக்கு புதிய வேத வாக்கியங்களையும், மறுபக்கத்தில் உண்மைகளையும் காட்டி அவைகளை ஒப்பிட்டுப் பார்த்து காரியங்களை நிரூபித்தார். வழக்கம் போல் சிலர் விசுவாசித்தார்கள். சிலர் கோபப்பட்டார்கள். சில காரியங்கள் ஒரு போதும் மாறுவதில்லை.

### சத்தியத்திற்கு கீழ்ப்படிய ஏன் தாமதம் ?

1. சத்தியத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததால் (அப்போஸ்தலர் 17:32)
2. சத்தியத்திற்கு கீழ்ப்படிய தேவையியை என்று நினைப்பதால் (அப்போஸ்தலர் 24:25)
3. உலகத்தை அதிகம் சிநேகிப்பதால் போவான் (22:42)
4. சத்தியத்தில் நினைக்க முடியாதென்று நினைப்பதால் (மத்தேயு 10:22)
5. கொடுக்க வேண்டிய விலை அதிகமென்று எண்ணுவதால் (மாற்கு 8:34)

# தேவன்
# காணவில்லை ஆனால் அறியாமலில்லை
# *Unseen But Not Unknown*
## *David R. Pharr*

அப்போஸ்தலனாகிய பேதுரு ஆசிய மைனர் மாகாணங்களில் வாழ்ந்து கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு நிரூபங்களை எழுதின போது பற்றி எரிகிற சோதனைகளின் மத்தியிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் உண்மைத் தன்மையில் உறுதியாய்த் தரித்திருக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்தினார் [I பேதுரு 1:7;4:12]. அவர்கள் இரட்சகராகிய இயேசுவினிடத்தில் கொண்டிருந்த அன்பு மற்றும் விசவாசத்தின் காரணமாக அவர்களிடம் பேதுருவால் இவைகள் எதிர்பார்க்கப்பட்டது. பேதுரு அதைப் பற்றி அவரை நீங்கள் காணாம லிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும். மகிமையால் நிறைந்தததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்நு என்று எழுதுகிறார் [I பேதுரு 1:8] ,அந்த ஜனங்கள் இயேசுவைக் கண்டதே இல்லை. இருந்த போதிலும், அவரை நேசித்து, அவரை விசுவாசித்திருக்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்தில் கிறிஸ்துவை அவர்கள் காணாவிட்டாலும் கூட அவரை அறியாமலில்லை!

இன்று சிலர் புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்தவர்கள் விசுவாசி களாயிருப்பது எளிதானது. ஏனென்றால், இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த காலகட்டத்திற்கு அருகில் வாழ்ந்திருக்கிறார்கள் என்று கற்பனை செய்யலாம். ஆனால், உண்மை ஆதிச்சபையில் பெரும் பாலான கிறிஸ்தவர்கள் இயேசுவை நேரில் கண்டதில்லை. இயேசுவின் ஊழியம் உலகின் ஒரு சிறுபகுதியில்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இஸ்ரவேல் தேசத்தில் அவர் பலரால் காணப்பட்டி ருந்தாலும் கூட மனித இனத்தில் அது ஒரு சிறுபகுதியாகத்தான் இருந்தது. இங்கே கிறிஸ்துவின் உயிர்தெழுதல் தான் நம் விசுவாசத்தின் ஆதாரமாயிருக்கிறது. ஏனென்றால், கிறிஸ்து உயிர்த் தெழுந்ததை கண்டது ஒரு சிலர் தான். (I கொரிந்தியர் 15:4-8] வசனங்களில் பவுல் கிறிஸ்துவைக் கண்டவர்களில் பாதிப்பெயரை பட்டியலிடுகிறார். அதாவது, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு அகாலப்பிறவி போன்ற தனக்கும் தரிசனமானதாகச் சொல்கிறார். இங்கே கிறிஸ்து பாடுபட்ட பின்பு , நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளை அவர்களுடனே பேசி அநேகம் தெளிவான

திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்கு தம்மை உயிரோடிருக் கிறவராக காண்பித்தார் என்பது வலியுறுத்தப்படுகிறது.

இங்கே இயற்கையாக எழும் கேள்வி என்னவென்றால், உயிர்த் தெழுந்த கிறிஸ்துவை பலர் பார்க்காமலேயே எப்படி விசுவாசித் தார்கள்? இதற்கான பதில் கிறிஸ்துவை நேரில் கண்ட அப்போஸ் தலர்களின் சாட்சிகளை அப்படியே விசுவாசித்தது தான். அதுமாத்திர மல்ல, அப்போஸ்தலருடைய நடபடிகள் 10:41 ல், ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரதியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு அவரோடே புசித்துக் குடித்தவர் களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார். நமக்கு ஒரு தெளிவைக் கொடுக்கிறது. தெய்வீகத் திட்டம் என்னவென்றால், கிறிஸ்துவைப் பற்றிய சத்தியம் அப்போஸ்தலர்களுக்கு இக்கட்டளையைக் கொடுத்த போது நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று சொன்னார் [லூக்கா 24:49]. எனவே தான், அப்போஸ்தலர்களுடைய பிரசங்கம் இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம் போன்ற வார்த்தை வலியுறுத்தப்பட்டது .[அப்போஸ்தலர்கள் 2:32].

இருந்தபோதிலும், இங்கே எழும் மற்றொரு கேள்வி இந்த அப்போஸ்தலர்களின் சாட்சிகளை ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? எது அவர்களை நம்பத்தகுந்தவர்களாக மாற்றுகிறது? அப்போஸ்தலர் களின் சாட்சி பரிசுத்த ஆவியானவருடைய சாட்சியோடு இணைந்து விடும் என்று இயேசு விளக்கினார்.[யோவான் 15:26,27; அப்போஸ்தலர் 5:32]. பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்திகிறபடியால் [ யோவான் 16:13] புதிய ஏற்பாட்டில் ஆவியானவர் அவர்களுடைய சாட்சிகளில் வழி நடத்தினார். இருந்த போதிலும், அவர்களுடைய சாட்சிகள் உண்மையானவைகள் என்பதை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும். ஒவ்வொரு கண்கண்ட சாட்சியும் கீழ்க்கண்ட அளவு கோல்களால் அளக்கப்பட வேண்டும்.

**சாட்சிகள் திறமைமிக்கவர்களாக இருந்தார்களா?**

அப்போஸ்தலர்கள் அறிவுப்பூர்வமாக உண்மைகளைக் கொடுக்க திறமைமிக்கவர்களாக இருந்தார்களா? புதிய ஏற்பாடே அவர் களுடைய புத்திக் கூர்மையையும், திறமையையும் நிரூபிக்கிறது.

**அவர்கள் உண்மைகளை அறியும் நிலையில் இருந்தார்களா?**

ஒருவர் தான் காணாத காரியத்தைக் குறித்து சாட்சி சொல்லக் கூடாது. இயேசு அப்போஸ்தலர்களுக்கு புதியவர் ஒன்றுமல்ல. இயேசு அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, அநேகம் தெளிவான

திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்த போது (அப்போஸ்தலர் 1:3) அவர் இயேசு தான் என்பதை எவ்வித சந்தேகமும் இல்லாமல் அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

**சாட்சிகள் மத்தியில் ஒருமித்த கருத்து காணப்பட்டதா?**

இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் சேர்ந்தால் ஒரு காரியத்தை உறுதிச் செய்ய முடியும். சில வேளைகளில் சாட்சிகள் மத்தியில் ஒருமித்த கருத்து உண்டாகாத நிலைமை ஏற்படுமானால் அப்போஸ்தருடைய சாட்சியங்களைப் பொறுத்தவரை எந்த முரண்பாடுகளும் அவர்களிடத்தில் இல்லை. அவர்களுடைய சாட்சிகள் 100% இசைவாக இருந்தது.

நாம் இயேசுவைக் கண்டதில்லை. ஆனால், சுவிசேஷ செய்தியினால் அவரை அறிந்திருக்கிறோம் (யோவான் 20:30–31). சீமோன் பேதுருவின் வார்த்தைகளின்படியே நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம். (யோவான் 6:69). அவரை நாம் கண்டதில்லை. ஆனால், அவரை அறியாமலுமில்லை.

---

## அநேக அழைப்புகள்

1. **தேவன் நம்மை அழைக்கிறார் (எபிரெயர் 11:29)**

2. **கிறிஸ்து நம்மை அழைக்கிறார் (மத்தேயு 11:28)**

3. **நற்செய்தி நம்மை அழைக்கிறது (ஐ தெசலோனிக்கேயர் 2:14)**

4. **சபை நம்மை அழைக்கிறது (வெளிபடுத்தின விசேகும் 22:17)**

5. **தேவனுடைய வார்த்தை நம்மை அழைக்கிறது (ஐ தீமோத்தேயு 3:16,17)**

## தேவனுடைய வார்த்தை
## வேதாகமத்தின் 66 புத்தகங்களில் இயேசு
## *Jesus in the 66 Books Of The Bible*
### *Dave Hast*

**ஆதியாகமத்தில்** ஸ்திரீயின் வித்து

**யாத்திராகமத்தில்** பஸ்கா ஆட்டுக்குட்டி

**லேவியாராகமத்தில்** பிரதான ஆசாரியர்

**எண்ணாகமத்தில்** மேகமும் அக்கினியும்

**உபாகமத்தில்** மோசேயைப் போல் ஒரு தீர்க்கதரிசி

**யோசுவாவில்** நம் இரட்சிப்பின் அதிபதி

**நியாயாதிபதிகளில்** நியாயாதி மற்றும் நியாயப் பிரமாணத்தை கொடுப்பவர்

**ரூத்தில்** உறவில் முறையிலான மீட்பர்

I, II **சாமுவேலின்** கர்த்தருடைய தீர்க்கதரிசி

I, II **இராஜாக்கள்,** I, II **நாளாகமத்தில்** ஆளுகின்ற ராஜா

**எஸ்றாவில்** உண்மையுள்ள வேதபாரகர்

**நெகேமியாவில்** உடைந்த மதில்களை மறுபடியும் கட்டுகிறவர்

**யோபுவில்** உன்னத்திலிருந்து தோன்றிய அருணோதயம்

**சங்கீதத்தில்** நம் மேய்ப்பராகிய கர்த்தர்

**நீதிமொழிகள் மற்றும் பிபிரசங்கியில்** ஞானம்

**உன்னதப்பாட்டில்** நேசர் மற்றும் மணவாளன்

**ஏசாயாவில்** சமாதான பிரபு

**ஏரேமியா** மற்றும் புலம்பலில் தீர்க்கதரிசி

**எசேக்கியேலில்** திரும்பும் சக்கரம்

**தானியேலில்** அக்கினி சூளையிலே நான்காவது மனிதனாக

**ஓசியாவில் ஒரு சோர ஸ்தீரீயை திருமணம் செய்த** மண வாளனாக

**ஆமோஸில்** சுமை தாங்கி

**யோவேலில்** பரிசுத்த ஆவி மற்றும் அக்கினி ஞானஸ் பெற்றவாய்

**ஒபதியாவில்** வல்லமையான இரட்சகர்

**யோனாவில்** மன்னிக்கும் தேவன்

**மீகாவில்** அழகான பாதங்களை உடைய தூதுவன்

**நாகூமில் தேவனால்** தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு பதில் செய்பவர்

**ஆபகூக்கில் எழுச்சிக்காக கூக் குரலிடும்** மாபெரும் சுவிசேஷகர்

**செப்பனியாவில்** தேவனுடைய இழந்து போன சுதந்திரத்தின் மீட்பர்

**ஆகாயில்** சுத்திகரிக்கும் நீரூற்று

**சகரியாவில்** இரக்கமுள்ள பிதா

**மல்கியாவில்** தம்முடைய சிறகுகளில் சுகத்துடன் எழுந்தருளும் நீதியின் குமரன்.

**மத்தேயுவில்** மேசியா

**மாற்குவில்** அற்புதமான ஊழியக்காரன்

**லூக்ணீாவில்** மனுஷக்குமாரன்

**யோவானில்** தேவனுடைய குமாரன்

**அப்போஸ்தலருடைய** நடபடிகளில் பரமேறிய கர்த்தர்

**ரோமரில்** நீதிமானாக்குபவர்

I, II **கொரிந்தியரில்** ஆவியின் வரங்களானவர்

**கலாத்தியரில்** விடுவிப்பாளர்

**எபேசியரில்** ஐசுவரியத்தின் கிறிஸ்து

**பிலிப்பியரில்** நம் ஒவ்வொரு தேவையையும் சந்திக்கும் தேவன்

**கொலோசெயரில்** தேவத் துவத்தின் பூரணம்

I, II **தெசலோனிக்கேயரில்** சீக்கிரமாக வரும் ராஜா

I, II **தீமோத்தேயுவில்** தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தர்

**தீத்துவில்** உண்மையுள்ள மேய்ப்பர்

**பிலேமோனில்** சகோதரனை விட நெருக்கமான நண்பன்

**எபிரெயரில்** நம் பாவங்களை கழுவி சுத்திகரிக்கும் இரத்தத்தைக் கொண்டவர்.

**யாக்கோபுவில்** மகா வைத்தியன்

I, II **பேதுருவில்** பிரதான மேய்ப்பன்

I, II, III **யோவான்** நித்திய அன்பு

**யூதாவில்** பதினாயிரம் பரிசுத்தவான்களோடு இறங்கி வந்த கர்த்தர்

**வெளிப்படுத்தின விசேஷத்தில்** ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா!

## தேவனுடைய வார்த்தை

தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் [II பேதுரு 1:21].

அவைகளை தாங்கள் மனுஷர் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் [I கொரிந்தியர் 2:13]

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது [சங்கீதம் 119:105].

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது [எபிரெயர் 4:12].

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது [சங்கீதம் 19:7]. ✝

## தேவனுடைய வார்த்தை

### அதிகமாக அலட்சியபடுத்தப்பட்ட புத்தகம்

### A Most Neglected Book

**Dalton Key**

**ஒ**ட்டுமொத்த உலகத்திலும் வேதாகமம் மிகச் சிறந்த புத்தனமாக வேதாகமம் இருந்தாலும் அதிகம் அலட்சியபடுத்தப்படும் புஸ்தக மாகவும் இருந்து வருகிறது. அது சிறந்த புத்தகமாக இருக்கிறபடியால் அது அதிகமாக அலட்சியபடுத்தபடுவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

வேதாகம் ஓர் விதையாக வேலை செய்து தேவனுடைய குடும்பத்தில் அநேக பிள்ளைகளைப் பிறப்பிக்கிறது. விதைக்கிற வனுடைய உவமையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விதை தேவனுடைய வசனம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார் (லூக்கா 8:11). அதுமாத்திரமல்ல விதைக்கப்படுகிறவர்கள். தேவனுடைய வார்த்தையால் மட்டுமே ஜெநிப்பிக்கப்படுகிறார்கள் (I பேதுரு 1:23). ஒருவர் இந்த விதையை தவிர்த்துவிட்டு அல்லது கண்டு கொள்ளாமல் இருந்து கொண்டு தேவனுடைய குடும்பத்துக்குள் வர முடியாது. இருந்தபோதிலும் நம் நாட்களில் வாழும் அதிகமான அக் கறையற்ற ஆத்துமாக்கள் தேவனுடைய வார்த்தை தங்கள் இருதயங் களில் வேர்கொள்ள அனுமதிக்கதவறுவது வேதனை அளிக்கிறது.

வேதாகமம் ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்க உருவக் குத்துகிறதாயும் இருக்கிறது (எபிரெயர் 4:12)அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரத்தில் தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தையை கேட்ட ஜனங்கள் இருதயத்தில் குத்தப்பட்டார்கள். கட்டளையிடப்பட்டார்கள் (38) தேவ செய்திக்கு அவர்கள் கீழ்படிந்தபடியால் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்றார்கள். தேவனுடைய வார்த்தையைக் கேட்ட இந்த ஞானமுள்ள மக்களைப்போல் அல்லாமல் பலர் தங்கள் ஆத்துமாக்களைக் குறித்து அக்கறைப்படாமல் மனிதனின் மிகப் பெரிய பிரச்சனையாகிய பாவ பிரச்சனைக்கு தீர்வாக இருக்கும் வேத புத்தகத்தை முட்டாள்தனமாக கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள்.

வேதாகமம் ஆவியின்பட்டயம் என்றழைக்கப்டுகிறது [எபேசியர் 6:17] ஒரு கிறிஸ்தவ போர்ச்சேவகன் பிசாசின் தந்திரங்களுக்கு எதிராக போராடும் போது ஆவியின் பட்டயமானது அவரைப் பாதுகாக்கிறது [எபேசியர் 6:11]. ஏனெனில், நம் எதிராளியாகிய பிசாசானவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. [II கொரிந்தியர் 2:11].

கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைத்தேடிச் சுற்றித்திரிகிறான் [I பேதுரு 5:8] பரலோகம் தரும் எல்லா ஆயுதங்களும் நமக்கு அவசியமானவை. ஆயுதங்கள் இல்லாமலேயே எதிர்கொள்வதில் திருப்தியாயிருக்கிறார்கள் பிசாசின் தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே [Iகொரிந்தியர் 2:11]. நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற இவ்வளவு பிரயோஜனமான வேத புத்தகம் அலட்சியபடுத்தப்படுவது எவ்வளவு வேதனையானது என்பதை எண்ணிப்பாருங்கள்! உங்கள்வேத புத்தகம் அலட்சியபடுத்தப்படுகிறதா ?

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு [எபேசியர் 6:12].

---

**பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான பாவங்கள்**

1. **பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பேசுதல் [மத்தேயு 12:32]**
2. **பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பொய் சொல்லுதல் [அப்போஸ்தலர் 5:3]**
3. **பரிசுத்த ஆவியானவரை எதிர்த்தல் [அப்போஸ்தலர் 7:51]**
4. **பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துதல் [எபேசியர் 4:30]**
5. **ஆவியை அவித்துப் போடாதிருங்கள் [ஐ தெசலோனிக்கேயர் 5:19].**

## வசன ஆராய்ச்சி
## I கொரிந்தியர் 10-1-3
## *Jerry Bates*

1. வனாந்தரத்திலே எல்லா யூத முற்பிதாக்களுக்கும் நடந்ததாக பவுல் பட்டியலிடும் நான்கு காரியங்களை பட்டியலிடுக? (வசனம் 1 – 4)

2. யார் அந்த ஞானக் கன்மலை ? (வசனம் 4)

3. வனாந்தரத்தில் பெரும்பாலானோருக்கு என்ன நடந்தது ? ஏன் அப்படி நடந்தது (வசனம் 5)

4. அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு இவைகள் நமக்கு ................

5. அவர்களில் சிலர்.................ஆனதுபோல நீங்களும் ஆகாதிருங்கள் (வசனம் 7)

6. அவர்களில் சிலர்....................ஓரே நாளில் ............ .......விழுந்துபோனார்கள்; அதுபோல நாமும் வேசித் தனம் பண்ணாதிருப்போமாக (வசனம் 8)

7. எத்தனைபேர் ஒரே நாளில் பாவத்திற்கு மரித்தார்கள் ? (வசனம் 8)

8. அவர்களில் சிலர்................பரீட்சைப்பார்த்து,பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல..................கிறிஸ்துவைப் பரீட்சைப் பாராதிருப்போமாக (வசனம் 9)

9. இவைகளெல்லாம் ஏன் எழுதப்பட்டது ? (வசனம் 11)

10. தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் என்ன செய்ய வேண்டும் ? (வசனம் 12)

11. யாராவது மனுஷனுக்கு நேரிடுகிற சோதனையினின்று வித்தியாசமாக சோதிக்கப்படுகிறாரா ? (வசனம் 13)

12. பவுல் தேவன் உண்மையுள்ளவர் என்று சொல்வதின் பொருள் என்ன ? (வசனம் 13)

13. தேவனுடைய ஜனங்கள் சோதிக்கப்படும்போது தேவன் அவர்களுக்கு என்ன செய்வதாக பவுல் சொன்னார் ? (வசனம் 13)

## வசன ஆராய்ச்சி

இப்படியிருக்க,சகோதரரே,நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்க ளெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்தின் ரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள்,எல்லாரும் மோசேக் குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப் பட்டார்கள், எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே பாணத்தைக் குடித்தார்கள், எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன் மலையின் தண்ணிரைக் குடித்தார்கள்;அந்தக் கன்மலை கிறிஸ்துவே அப்படியிருந்தும், அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்த தில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள் அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாத படிக்கு இவைகள் நமக்கு திருஷ்டாந்தங்களாயிருக்கிறது, ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும், உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் வேசித்தனம் பண்ணி, ஒரே நாளில் இருபத்து மூவாயிரம் பேர் விழுந்து போனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப் பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள் இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப் பட்டும் இருக்கிறது இப்படியிருக்க, தன்னை நிற்கிறவ னென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையா யிருக்கக்கடவன், மனுஷனுக்கு நேரிடுகிற சோதனை யேயல்லாமல், வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை, தேவன் உண்மை யுள்ளவராயிருக்கிறார், உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்பகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் [I கொரிந்தியர் 10:1-13]

**குறிப்பு:** இந்த வசனப் பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியர்கள் விழிப்புடனும்,விடா முயற்சியுடனும் கர்த்தருடைய காரியங்களில் இருக்க வேண்டுமென்று அவர்களை உற்சாகப் படுத்துகிறார், பவுல் இங்கே இவர்களுடைய முன்னோர்கள் வனாந் தரத்தில் பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய ஆசிர்வாதங்களை நினைப் பூட்டுகிறார்,இருந்தபோதிலும்,பலர் அவர்களுடைய பாவத்தின் காரணமாக வனாந்திரத்திலேயே மரித்துபோனார்கள், அவை களெல்லாம் நமக்கு திருஷ்டாந்தங்களாக நமக்கு

எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பவுல் சொல்கிறார்,நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டதே நாம் இறுதியில் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வோம் என்பதற்கான உத்திரவாதம் அல்ல, இதுதான் இவ்வசனப்பகுதியில் பவுலின் முக்கிய கருத்தாக இருக்கிறது.

**நம் முற்பிதாக்களில் பலர் தேவனைப் பிரியப்படுத்த தவறியதால்**

வனாந்தரத்தில் விழுந்துபோனார்கள், நாம் கிறிஸ்துவுக்காக தொடர்ச்சியாக வாழும் வாழ்க்கையில் ஜாக்கிரதையாயிருந்து, அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். அதுமட்டுல்லாமல் இவ்வசனப்பகுதியில் நம்மில் பலர் திராணிக்கு மேலாக சோதிக்கப் படுகிறதாகவும்,நமக்குத்தான் புதுமையான சோதனைகள் வருவ தாகவும்,அப்படிப்பட்ட வேளைகளில் தேவன் நம்மை கண்டு கொள்வதில்லை என்றும் எண்ணுகிறோம். ஆனால், தேவன் உண்மையுள்ளவராக இருந்து நம் திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்பட அவர் அனுமதிக்கமாட்டார் என்று பவுல் சொல்கிறார். ✝

---

## பாடுகளைக் குறித்த நம் பார்வை எப்படி இருக்க வேண்டும்

1. நாம் பாடுகளை புதுமையென்று எண்ணக்கூடாது (I பேதுரு 4:12 ; I தீமோத்தேயு 3:12).
2. எவ்வளவு அதிகமாக பாடுபடுகிறோமோ அவ்வளவு அதிகமாக மகிழ்ச்சியையும், மகிமையையும் பெற்றுக்கொள்வோம் (I பேதுரு 4:13 ; ரோமர் 8:17,18).
3. பாடுகளுக்கு நாம் சரியான முறையில் பதிலளித்தால் பாடுகளே அருமருந்தாகிவிடும் (எபிரெயர் 12: 6–11).
4. பாடுகள் எப்போதுமே பாவத்தின் விளைவுகளாயிருப்பதில்லை (மத்தேயு 5:10 ; மாற்கு 10:30 ; யோவான் 15:20).
5. தேவன் நம்மை பொல்லாங்கினால் சோதிக்கிரவருமல்ல (யாக்கோபு 1:13)
6. நாம் சிறந்தவைகளை இனிமேல் தான் பெற்றுக்கொள்ளப் போகிறோம் (வெளி 21:4 ; பிலிப்பியர் 3:20).

# இரட்சிப்பு
# தாழ்வான வாழ்க்கை முறைக்கான உயரிய விலை
## *The High - Cost of Low - Living*
## *Michael L.King*

எண்ணற்ற வேதாகம கதாபாத்திரங்களும் இத்தலைமுறையில் சமகாலத்தில் நம்மோடு வாழ்கிறவர்களும் பாவத்தின் சம்பளம் மரணம் என்னும் உண்மையை விளக்கும் பிரிவாகும். ஒருவர் பாவத்திற்கான சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் போது, அது அவரை எல்லாவற்றி லிருந்தும் பிரித்துவிடுகிறது. பாவம் குடும்ப அங்கத்தினர்களைப் பிரிக்கிறது. மணமுறிவுகளை ஏற்படுத்துகிறது. சபை அங்கத்தினர் களைப் பிரிக்கிறது. சபை அங்கத்தினர்களை தேவனிடத்திலிருந்து மாத்திரமல்ல, கிறிஸ்து வுக்குள் இருக்கும். ஆவிக்குரிய சகோதர சகோதரிகளையும் பிரித்துவிடுகிறது. இழிவான வாழ்க்கை முறை தீயபழக்க வழக்கங் களை உள்ளடக்கியதாக இருக்கிறபடியால் அது ஆரோக்கியத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தி மரணத்தை உண்டா க்குகிறது. பெரும்பாலான மக்கள் நித்தியத்திற்கு இசைவான வாழ்க்கையை விட்டுவிட்டு, நித்தியத்தோடு போகாத போக்கை கடைப்பிடிக்கிறார்கள்.


நம்முடைய உலகம் தவறான உறவுகளினால் உண்டான எய்ட்ஸ், மேகப்புண், மனநோய், பிறப்பு குறைபாடுகள் போன்றவைகளால் பீடிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஆனந்தத்தை அளித்த இந்த தவறான உறவுகள் பின்பு சொல்லொண்ணா துயரங்களை அதில் ஈடுபட்டவர்களுக்கு கொடுக்கிறது. இவ்வுலகில் இழிவான வாழ்க்கை முறைக்கான அது நியாயத்தீர்ப்பில் நிச்சயமாக வெளிப்படும். ஒருவர் பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு இது பெருந்தடையாக அமையும். நம் ஆண்டவர் நியாயத்தீர்ப்பு நாளில் இடப்பக்கத்தில் நிற்பவர்களை பார்த்து சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காவும் அவன் தூதர் களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்னும் வார்த்தைகள் எப்போதுமே நம் மனதை வாட்டிக் கொண்டிருக்க வேண்டும் (மத்தேயு 25:41).

அதேபோல் ஜீவனுள்ள தேவனுக்குப் பதிலாக உலகப்பொருள் என்னும் இவ்வுலக தேவனை வைப்பதற்கு நாம் அதிக விலை கொடுக்க வேண்டும். உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும்

அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் என்று நாம் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் [I யோவான் 2:1517]. இவ்வசனத்தில் மற்றுமொரு பிரிவு ஏற்படுவதை கவனித்தீர்களா? ஒருவர் உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூரும் போது அவர் பிதாவின் மீது கொள்ளும் அன்பு மரித்துவிடுகிறது [வசனம் 15]. நாம் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்துவையுங்கள் என்னும் ஆண்டவருடைய வார்த்தைகளை அசட்டை பண்ணி சுயநலமான காரியங்களில் ஈடுபட்டு சுகபோகமாக வாழ்ந்து வாழ்க்கையை வீணடித்ததை அல்லாமல் நாம் காட்டும்படியாக நம்மிடம் ஒன்றுமில்லை. முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும். என்று நமக்கு வாக்குதத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. [மத்தேயு 6:33]. சிந்தனையைத் தூண்டும் மற்றொரு வசனப்பகுதி உண்டு. அது முரண்பாடு போல் தோன்றினாலும் உண்மையான கூற்றாக இருக்கிறது. தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாக தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை கண்டடைவான்[மத்தேயு6:25].

கெட்ட குமாரன் சம்பவம் ஒருவர் தரக்குறைவான வாழ்க்கை முறையால் அதிக விலை கொடுக்கும் படி நிர்பந்திக்கப்பட்டதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும் [லூக்கா 15:2–14]. தகப்பனிடமிருந்து பிரிந்து போக அவனை யாரும் கட்டாயப்படுத்தவில்லை, அவனுடைய விருப்பப்படி **அவனாகவே பிரிந்து போக அவனை யாரும் கட்டாயப் படுத்தவில்லை, அவனுடைய விருப்பப்படி அவனாகவே பிரிந்து சென்றான். கலக்கமடைந்த அவன் இருதயமே அவனை** நிர்பந்தித்திருக்கிறது. இந்த உண்மைக்கான விளக்கத்தில் தகப்பன் பிதாவாக இருக்கிறார். கெட்ட குமாரன் என்பவன். உலகில் உல்லாசமாக வாழ நினைத்து அதற்கு தகப்பன் தடையாக இருப்பார் என்று எண்ணி தானாகவே தகப்பனிடமிருந்து பிரிந்து சென்ற ஒருவனாக அடையாளப்படுத்தப்படுகிறான். ஒரு தனிப்பட்ட நபருக்கு இப்படி நடக்கக்கூடும் என்று யாக்கோபு ஆசிரியர் அறிவுறுத்துகிறார். அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும் [யாக்கோபு 1:14,15]. இங்கே பாவம் எப்படி வளைந்து

கொடுக்காமல் இரக்கமற்ற முறையில் நடந்து கொள்கிறது என்று பாருங்கள். பாவமானது ஒருவரை தூர இடத்திற்கு அழைத்துச் செல்கிறது. நீண்ட நாட்கள் அலைக்கழித்து, கற்பனை செய்ய முடியாத அளவுக்கு அவருக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்துகிறது.



ஒட்டு மொத்த மனித இனமும் ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் தடை செய்யப்பட்ட கனியை புசிக்க எடுத்த மோசமான தீர்மானத்திற்கு பலியாகி இருக்கிறார்கள். இங்கே மறுபடியும் ஒரு **பிரிவு** ஏற்படுவதை ஒருவரால் காண முடியும், அவர்கள் தேவனால் தடை செய்யப் பட்ட பகுதிக்கு அத்து மீறிநுழைந்த பிறகு, பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகின்ற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள் அப்பொழுது ஆதாமும், அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளிந்துக் கொண்டார்கள் (ஆதியாகமம் 3:8) தேவ சமூகத்திலிருந்து அவர்களாகவே விலகிக் கொண்டார்கள். ஏனென்றால், தேவன் விரும்பியதற்கும், அவர்கள் செய்த செயலுக்கும் இடையே இசைவு ஏற்படவில்லை (ஆதியாகமம் 3;23-24). அவர்கள் அந்த அழகான தோட்டத்தில் மகிழ்ச்சியாக வாழ்வதற்குப் பதிலாக நிலத்தை பண்படுத்தி, வியர்வை சிந்தி வாழ்வதை அவர்களாகவே தெரிந்த கொண்டார்கள். கூடுதலாக, ஸ்தீரிகளுக்கு பிரசவ வேதனை சாபமாக கொடுக்கப்பட்டது. ஆண்களுக்கு வியர்வை சிந்தி, ஆகாரம் புசிக்கும் சாபம் கொடுக்கப்பட்டது. பூமியானது முள்ளையும், குருக்கையும்

முளைப்பித்தது, ஒட்டுமொத்த மனித இனத்தின் மீதும் மரணம் வந்தது (ஆதியாகமம் 3:14–18). அந்த சர்ப்பமும் தப்பவில்லை, ஆதாமையும், ஏவாளையும் மிக இழிவான தம் தாழ்த்தும் செயலை செய்ய தூண்டிய படியால் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்னும் படியாகவும் சபிக்கப்பட்டது (வசனம் 14).

பாவப் பிரச்சனைக்கும், தரக்குறைவான வாழ்க்கை முறைக்கும் தீர்வு ஒன்று இருக்கிறது. அதற்கு செலவு செய்ய வேண்டியதில்லை. ஆனால், தேவ பயம் அதிக நன்மைகளைத் தரும். ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் பாவிகளே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்; நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள், உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும் உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது. கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங் கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் (யாக்கோபு 4:7–10).

## பேராசை

- பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்; பரிதானங்களை வெறுக்கிறவனோ பிழைப்பான்.
- தேவன் எப்போதுமே ஆவியல் எளிமையுள்ளவர்களைத்தான் ஆசீர்வதிக்கிறார் (மத்தேயு 5:1–2 ; நீதிமொழிகள் 16:19)
- பெரிய காரியங்களைத் தேடுவதில் எப்போதுமே ஆபத்து உண்டு நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? தேடாதே (எரேமியா 45:5).
- நம்மை நாம் உயர்த்திக் கொண்டால் பெரும் வீழ்ச்சியை நோக்கி போய்க் கொண்டிரு (ஒபதியா 4).
- அழியாத காரியங்களுக்காக அதாவது நித்தியமான காரியங் களுக்காக நாம் பிரயாசப்பட வேண்டும் (யோவான் 6:27).

# இரட்சிப்பு

# இரயில் வண்டியை நிறுத்த மிகுந்த தாமதமாகிவிட்டது

## *Too Late to Stop The Train*

*Bobby Dockesy*

எல்லா தொலைக்காட்சிகளிலும் ஒரு விளம்பரம் ஒளிபரப்பானது. அதில் ரயில்வே கிராசிங்கை நெருங்கும் போது வாகன ஓட்டிகள் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி எச்சரிக்கப்பட்டது. அந்த விளம்பரத்தின்படி மணிக்கு 30 மைல் வேகத்தில் செல்லும் ஒரு இரயில் முழுமையாக நிற்பதற்கு அரை மைல் தூரத்தை எடுத்துக் கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டது. பல வாகன ஓட்டிகள் அஜாக்கிரதையாக, கண்மூடித்தனமாக வாகனத்தை ஓட்டி இரயில் வந்து கொண்டிருக்கும்போதே ரயில்வே கிராஸிங்கை கடந்து விடலாம் என நினைத்து ஏமாந்து மிகக்கோர விபத்துகளில் சிக்கிக் கொள்ளுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் ரயிலின் வேகத்தை கணிக்க முடியாமல் அதற்குள் ரயில் பாதையை கடந்துவிடலாம் என்னும் ஓட்டுநர்களின் எண்ணமும், வேகமாக ஓடும் ரயிலை நிறுத்த ஆகும் காலதாமதமும் காரணங்களாக சொல்லப் படுகின்றன.

மேற் சொல்லப்பட்ட சம்பவத்திற்கு ஒப்பாக வேதாகமத்தில் யோசியா ராஜாவின் சம்பவம் அமைந்துள்ளது. யூதாவின் ராஜாக்களில் யோசியா ராணுவ ரீதியாக வலிமை வாய்ந்தவராகவோ, புத்திசாலி யாகவோ, ஐசுவரியவானாகவோ இல்லாவிட்டாலும் கூட கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்த சிறந்த இராஜாவாக இருந்தார். தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதில் எந்த யூத ராஜாவும் இவருக்கு இணையாக இல்லை. யோசியா ராஜா தன் அரசாட்சியைத் தொடங்கிய போது தேசத்தில் தலைவிரித்தாடிய விக்கிரக ஆராத னையும், கர்த்தரை விட்டு விலகிச் செல்லும் போக்கை நிறுத்துவதற்கு சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். பாழாக்கப் பட்ட எருசலேம் தேவாலயத்தைப் பழுதுபார்க்கும் வேலையை மிக விரிவாக செய்தார். அந்த வேலைகள் முழுவீச்சில் நடந்துகொண்டிருந்தபோது, அந்த இடிபாடுகளுக்குள் ஆசாரியனாகிய இல்க்கிய தேவனுடைய பிரமாணத்தை உள்ளடக்கிய புத்தகத்தை கண்டெடுத்தான். யோசியா ராஜாவுக்கு முன்பாக தேவனுடைய வார்த்தை வாசிக்கப்பட்ட போது அவன் பயத்தில் தன் வஸ்திரங்களை கிழித்தான். ராஜா தன் தேசத்தது ஜனங்கள் தேவனுடைய வார்த்தையில் பழக்கமில்லாததால் தேவனுடைய சித்தத்திலிருந்து விலகிப் போய் விட்டதை அறிந்த போது அதிகமாக பயந்து நடுங்கினான்.

யோசியா ஒரு பெண் தீர்க்கதரிசிக்கு ஆள் அனுப்பி தேசத்தின் தலைவிதி என்னவாகும் என்பதை அறிய விரும்பினான். தேவனுடைய வார்த்தையை ஜனங்கள் அசட்டை பண்ணின படியால் தேவன் தம்முடைய கோபத்தை எருசலேமின் மீதும் யூதாவின் மீதும் ஊற்றப்போகிறார் என்னும் எச்சரிப்புத்தான் வந்தது. யோசியா ராஜா தப்புவிக்கப்பட்டாலும் வீறுநடைபோட்டு வரும் அழிவை யாராலும் தடுக்க முடியாது. யோசியா ராஜாவால் தேசத்தில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள் மிகவும் தாமதமாக முன்னெடுக்கப்பட்டன. தேவன் ஏற்கனவே எருசலேம் பட்டணத்தின் முடிவை தீர்மானித்துவிட்டார். இரயில் வண்டியை நிறுத்த தாமதமாகிவிட்டது.




இங்கே பாடம் மிகவும் தெளிவாக இருக்கிறது. தேவன் மனிதனோடு இடைப்படும் காரியத்தில் அவர் எடுத்த தீர்மானங்களிலிருந்து பின் வாங்குவதில்லை என்பதை கற்றுக் கொள்கிறோம்.

**இது தேசங்களுக்கும் உண்மையாயிருக்கிறது.**

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் மனிதன் தேவனை வரலாற்றிலிருந்து அகற்றிப்போட முயற்சித்தான். நாம் பெரும்பாலும், தேவன் சபை காரியங்களில் தான் அவர் தலையிடுகிறார். நாட்டு விவ காரியங்களில் அவர் தலையிடுவதில்லை என்று நாம் யூகித்துக் கொள்கிறோம். தேசத்தை தேவனிடத்திலிருந்து தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது. ஏனென்றால், எல்லா அரசாங்கங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் தேவனாலே அமைகிறது. அப்போஸ்தலர் 17:26 ல் மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித் திருக்கிறார் என்று வாசிக்கிறோம். வரலாறு என்பது தேசங்கள் மத்தியில் தேவன் தம்முடைய கிரியைகளை வெளிப்படுத்துகிறார் அல்லவா, அவைகளின் பதிவேடு தான் என்பதை மறந்துவிட வேண்டாம். தேசங்களின் அக்கிரமங்கள் பெருகும் போது தேவன் அத்தேசங்களை கவிழ்த்துப் போடுவதை வேதாகமம் உறுதிப் படுத்துகிறது (ரோமர் 1:18). இந்திய தேசத்தின் நிலைமை எப்படி இருக்கிறது. இரயில் வண்டியை நிறுத்த மிகுந்த தாமதமாகிவிட்டது என்னும் நிலைமை ஏற்படாதபடி ஜெபிப்போம்.

**இது குடும்பங்களுக்கும் உண்மையாயிருக்கிறது.**

பலரிடம் தங்கள் குழந்தைகளுக்கான ஆவிக்குரிய பயிற்சியின் அவசியத்தை பற்றி கேட்கும் போது அதன் அவசியத்தை உணர்ந்திருப்பதை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். இருந்த போதிலும், சபை காரியங்களில் பங்கெடுக்க அவர்கள் எந்த முயற்சி யையும் எடுப்பதில்லை வாழ்க்கையின் ஆவிக்குரிய பரிமாணம் ஒட்டு மொத்தமாக உதாசினபடுத்தப்படுகிறது. அவர்கள் தங்களுக்குத் தாமே வாக்குறுதியை அளித்து திருப்திபட்டுக் கொள்கிறார்கள். ஏதோ ஒரு நாள் பிள்ளைகளை ஞாயிறு வகுப்புக்கு அல்லது சபைக்கு கூட்டிக் கொண்டு போவோம். ஏதோ ஒரு நாள் தேவனுக்காக நேரத்தை கண்டுபிடிப்போம். ஆனால் சாலொமோன் ஞானி நம்மால் நீண்ட நாட்கள் காத்திருக்க முடியாது என்று எச்சரிக்கிறார். நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் (பிரசங்கி 12:1) என்று.

**இது தனி நபர்களுக்கும் உண்மையாயிருக்கிறது.**

பாவத்தின் விளைவுகளிலிருந்து தப்பிக்க இப்போது நமக்கு நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் நமக்கு இயற்கை விதிகளையும், ஆவிக்கரிய விதிகளையும் தந்திருக்கிறார், இரண்டிலும் நாம் எதை விதைக்கிறோமோ அதைத்தான் அறுப்போம். மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்.மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலாத்தியர் 6:7) கிறிஸ்து வுக்கு வெளியே அதிக காலம் இருந்து விட்டு பின்பு மனந்திரும்பு தலுக்கு வாய்ப்பு இல்லாத நிலையும் ஏற்படலாம் (எபிரெயர் 12:17). நம் அலட்சியத்தினால் இருதயங்கள் கடினமாக்கப்பட்டு, நாம் பாவத்தில் சிக்கி வெளியேற முடியாத ஒரு நிலைமை கூட ஏற்படலாம்! ஆத்தும மீட்சி அடையாத ஒரு சூழ்நிலையும் ஏற்படலாம்!

இவ்வுலகில் பெரும்பாலான ஜனங்கள் இதைக் குறித்து சிந்தியாமலிருக்க முயற்சிக்கலாம். ஆனால் நாமெல்லாரும் தேவனை சந்திக்கும் ஒரு நாள் வரும். அந்த நியாயத்தீர்ப்பின் நாளுக்காக ஆயத்தமாகும் நேரம் இப்போது நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிக தாமதமாகிவிட்டது என்று ஒரு நிலைமை வராதபடி பார்த்துக் கொள்வோம். ✝

# கர்த்தருடைய விருப்பத்தின்படியான சபையாக ஏன் இல்லை?

## *Why Not The Church of The Lord's Choie?*

## *Maxie B. Boren*

**எ**னக்கு நினைவு தெரிந்தவரை நீங்கள் விரும்புகின்ற சபையில் சேர்ந்து கொள்ளுங்கள் போன்ற வார்த்தைகளை நான் பல முறை கேட்டிருக்கிறேன். மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தாரின் கண்ணோட்டத்தில் இது தான் கிறிஸ்தவம். மேலும், அவர்கள் சொல்லும் போது இன்று பல சபைகள் இருக்கின்றன எல்லா சபைகளுமே தேவனுக்குப் பிரியமான சபைகள் தான். எனவே உங்களுக்கு விருப்பமான சபையில் சேர்ந்து கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுடைய கூற்றுப்படி ஜனங்கள் ஒரு குறிப்பிட்ட சபையைத் தெரிந்து கொண்டு, அதில் சேர்ந்து கொள்ள முடியும். ஒரு உயர்நிலைப்பள்ளி மாணவன் தான் விரும்பிய கல்லூரியைத் தெரிந்து கொண்டு எப்படி அதில் சேருகிறானோ அதேபோல்தான் இருக்கிறது மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தார் சொல்வது.

பெரும்பாலான ஜனங்கள் இவ்வகையான மத அணுகுமுறையை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால், சிறுவயது முதல் அவர்கள் இவ்விதமாகவே கேள்விப்பட்டும், போதிக்கப்பட்டும் வருகிறார்கள். மேலும், பெரும்பாலான மக்களுக்கு சபையைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதைக் குறித்து எந்த சிந்தனையுமில்லை அக்கறையுமில்லை.

சபையின் முக்கியத்துவத்தைக் குறித்து ஜனங்களுக்கு அறிவில்லாவிட்டாலும் கூட ஜனங்கள் சத்தியத்தைக் கேட்டே ஆக வேண்டும்! சத்தியம் என்னவென்றால், கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்து அதற்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் [எபேசியர் 5:25]. அவர் தமது சுயரத்தத்தினாலே சபையை வாங்கினார் [ அப்போஸ்தலர் 20:28]. தேவன் கிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் முதல்வராயிருக்கும்படி செய்து சபைக்கு தலைவராக்கினார் [எபேசியர் 1:20-23] கொலோசெயர் 1:18].

இயேசுவின் தனிப்பட்ட ஊழியத்தில், இயேசு தம்முடைய சபையைக் கட்டுவதாக வெளிப்படையாகவே சொன்னார் (மத்தேயு 16:18). நிச்சயமாகவே இங்கே நம் கர்த்தர் சரீரப்பிரகாரமான ஓர் அமைப்பைப்பற்றி பேசவில்லை. ஜீவனுள்ள கற்களாக இசைவாக இணைக்கப்பட்டு ஆவிக்குரிய மாளிகையாக கட்டப்படுகிறது. I பேதுரு 2:5, எபேசியர் 2:19-22, I கொரிந்தியர் 3:16,17 (I தீமோத்தேயு 3:15. இந்த ஜீவனுள்ள கற்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கேட்டு, விசுவாசித்து கீழ்ப்படிந்தவர்கள் தான் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம்தான் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது ( ரோம 1:16) சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிதல் என்பது அதில் சொல்லப்பட்டிருக்கும் கட்டளைகளுக்கு ஒருவர் முழுமையாக கீழ்ப்படிவதைக் குறிக்கிறது. விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள்ளாக வருவதற்கும், கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்கள் கழுவப் படுவதற்கும் மனந்திரும்பி கிறிஸ்து இயேசுவின் பேரிலுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற வேண்டும். மாற்கு 16:15-16;

அப்போஸ்தலர் 2:37,38, அப்போஸ்தலர் 3:19; 17:30; 8:12, 35-39; 10:48; 22:16; I யோவான் 4:15, ரோமர்; 10:9-10, கலாத்தியர் 3:26-27; ரோமர் 6 :17,18 போன்ற வசனங்களை வாசித்துப் பாருங்கள். இத்தகைய கீழ்ப்படிதலுள்ள விசுவாசிகள் சபையில் சேர்க்கப் படுகிறார்கள். (அப்போஸ்தலர் 2:47). சபை இரட்சிக்கப்பட்டவர்களின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது (எபேசியர் 5:23) ஒப்புரவாக்கப்பட்டவர் களின் சரீரமாகவும் (எபேசியர் 2:16) மீட்கப்பட்டவர்களின் ஆவிக்குரிய ராஜ்யமாகவும் இருக்கிறது (கொலோசெயர் 1:13,14, 18,24).

சபையைப் பற்றிய மற்றுமொரு விவரிப்பில் வேதாகமம் வெளிப் படையாகவே கிறிஸ்துவின் மணவாட்டி என்று சபையை அடையாளப் படுத்துகிறது. எபேசியர் 5:22-38 மற்றும் II கொரிந்தியர் 11:2 வசனங்களை வாசிக்கவும். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறபடியால் (II தீமோத்தேயு 3:16; II பேதுரு 1:21) பரிசுத்த ஆவியானவர் சபையை ஏன் கிறிஸ்து தம் மண வாட்டியாக தெரிந்தெடுத்து சபைக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். சபைக்கு ஏன் கிறிஸ்து இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதற்கான விளக்கம் மிகத்தெள்ளத் தெளிவாக இருக்கிறது. இதை ஒரு சிறு குழந்தை கூட புரிந்து கொள்ள முடியும்.

மார்க்கப்பிரிவினை உலகம், அதன் பல சபைகள் கொள்கை மற்றும் எல்லா சபைகளும் ஒன்று தான் என்னும் கொள்கையை உறுதிப்படுத்த பல முயற்சிகளை எடுக்கும். அவர்களுடைய உபதேசம் பெலவீன மாயிருக்கிறபடியால், முயற்சிகள் தவறானதாயிருக்கிற படியால், அப்படி நடக்கிறது. ஆனாலும், எழுதப்பட்டவைகளுக்கு மிஞ்சி எண்ணும்போது வழி விலகிச் செல்லுதல் நடைப்பெறத்தான் செய்கிறது. [I கொரிந்தியர் 4:6]. அதனால் தான், எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாம் என்று தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. எபேசு சபை மூப்பர்கள் இப்படிப்பட்ட எச்சரிப்பை பெற்றுக் கொண்டார்கள். உங்களிலும் சிலர் எழும்பி, சிஷர்களை தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளை போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். [அப்போஸ்தலர் 20:30]. இதே காரியம் தான் இன்று நம் மத்தியிலும் நடந்து கொண்டிருக்கிறது!

இன்றைய நாட்களில் நம் அடிப்படை உபதேசத்திற்கு திரும்புவது முக்கியமாகவும், அவசரமாகவும் இருக்கிறது. நாம் நம் கர்த்தரின் விருப்பத்தின்படியான சபையைக் குறித்து பிரசங்கிப்பதும், போதிப்பதும் அவசியமாக இருக்கிறது

**உங்களுக்குத் தெரியுமா?** யோர்தான் நதி அது தொடங்கும் இடமான வடக்கு பாலஸ்தீனத்திலிருந்து அது வெறுமை யாகும் சவக்கடல் வரை 200 மைல் நீளத்தைக் கொண்டுள்ளது. இது சராசரியாக ஒரு மைலுக்கு 22 கனஅடி தண்ணீரை வெளியேற்றி உலகிலேயே மிகவும் தாழ்வான நீர் நிலைக்கு தண்ணீரைக் கொடுக்கிறது.

## தேவனோடு பேசும் நேரம்

ஒரு நாளின் மிக இனிமையான நேரம் தேவனோடு பேசும் நேரந்தான். ஏனெனில் அந்த நேரத்தில்தான் இவ்வுலகிலேயே தம்மை அதிகமாக நேசிக்கும் ஒருவரோடு பேசுகிறோம். அது மாத்திரமல்ல அண்ட சராசரங்களை உண்டாக்கின தேவனோடு பேசும் சிலாக்கியம் இந்த இனிமையான நேரத்தில்தான் கிடைக்கிறது (எரேமியா 33:3).

## வாழ்வதற்கான உபதேசம்

# எரேமியா 37-39 அதிகாரங்களிடமிருந்து பாடம்

# *Lessons From jeremiah 37-39*

**பா**பிலோனின் ராஜவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமைத் தாக்க திட்டங்களை தீட்டிக் கொண்டிருந்தான். அந்நாட்களில் பாபிலோன் உலக வல்லரசாக இருந்தபடியால் , எருசலேம் நகரவாசிகளுக்கு இது மிகுந்த அச்சங்களையும், கவலைகளையும் அளித்தது. அக்காலகட்டத்தில் எருசலேமின் ராஜவாக சிதேக்கியா இருந்தான். சிததேக்கியா தேவனுக்கு கீழ்ப்படியாத ராஜாவாகவே வாழ்ந்து வந்தான். அந்த ராஜாவின் கீழ்ப்படியாமையின் தண்டனையாக தேவன் எருசலேம் பட்டணத்தை தாக்கும்படி பாபிலோனியர்களை அனுப்பினார்.

சிதேக்கியா ராஜா உளவுத்துறை மூலமாக தான் அறிந்த தகவல்களினால் உருக்குலைந்து போனான். உண்மையாகவே பாபிலோன் எருசலேமின் மீது மிகப் பெரிய தாக்குதலை நடத்த திட்டமிட்டுக் கொண்டிருந்தது. சிதேக்கியா ராஜா தன்னால் முடிந்த ஞானமான காரியத்தை செய்தான், அதாவது, ராஜா தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எரேமியாவை அழைத்து தேசத்திற்காக தேவனிடம் விண்ணப்பம் பண்ணும்படி கேட்டுக் கொண்டான். அது ராஜா எடுத்த ஓர் அறிவுப்பூர்வமான தீர்மானம் அல்லது நடவடிக்கையாகும்! இக்காரியத்தைப் பொறுத்தவரை பெரும்பாலான இராஜாக்கள் போர் யுக்திகளை குறித்து ஆலோசிக்கும் படியாக படை தளபதிகளையும் உயர் அதிகாரிகளையும் அமைத்திருப்பார்!

ஆனால், துரதிருஷ்டவசமாக சிதேக்கியாவுக்கு எரேமியா தீர்க்கதரிசியிடமிருந்து மோசமான செய்திதான் வந்தது. எருசலேம் பட்டணத்தின் பாவத்திற்காக தேவன் பாபிலோனியர்களைக் கொண்டு தண்டிக்கும்படியாக உத்தேசித்திருந்தார். எரேமியாவின் விண்ணப்பத் திற்கான பதில் சிதேக்கியா பாபிலோனியர்களிடம் சரண் அடைவதாகத் தான் இருந்தது. இப்போது சிதேக்கியா ராஜாவுக்கு தன்னுடைய கேள்விக்கான பதில் கிடைத்துவிட்டது. ஆனால், ராஜா விரும்பிய பதில் இது அல்ல! ராஜா எதிர் நோக்கிக் கொண்டிருந்த பதிலும் இது அல்ல, சரி இப்போது ராஜா தேவ கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டுமா?

சிதேக்கியா ராஜா தேவனுக்கு கீழ்ப்படிவதற்குப் பதிலாக (ராஜாவுக்கு தேவனுக்கு கீழ்ப்படியும் பழக்கம் இல்லாதிருந்தது) பட்டணத்தின் பிரபுக்களை எரேமியாவைச் சிறையில் போடச் சொன்னான். எரேமியா சிறைச்சாலையில் சில நாட்கள் இருந்த பிறகு, சிதேக்கியா ராஜா எரேமியாவை அழைத்து கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ என்று கேட்டான் அதற்கு எரேமியா உண்டு என்றான்.

பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர் என்று சொன்னார். எரேமியா மறுபடியும் உண்மையைச் சொன்னார். சிதேக்கியா சில நாட்கள் எரேமியாவை நன்றாக நடத்தினான். பின்பு பட்டணத்தின் பிரபுக்களை ஏவி எரேமியாவை மற்றுமொரு சிறைச்சாலையிலே போட்டு அங்கே இருந்த தண்ணீரில்லாத துரவிலே தூக்கி எறியப்பட்டு அமிழ்த்தப்பட்டான்.

அந்த பயங்கரமான இடத்தில் எரேமியா கிட்டத்தட்ட மரிக்கும் தருவாய்க்குச் சென்றுவிட்டார். இதைப் பார்த்த சிதேக்கியாவின் பிரதானிகளில் ஒருவன் எரேமியாவை விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். ராஜா மறுபடியும் ஒரு முறை எரேமியாவை சிறையிலிருந்து விடுவித்து கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ? என்று கேட்டான். அதற்கு எரேமியா நீர் பாபிலோனியர்களிடத்தில் சரண் அடையாவிட்டால், நீர் தண்டிக்கப்பட்டு, இப்பட்டணமும் எரிக்கப்படும் என்று சொன்னார்.

எரேமியாவின் வார்த்தைகளுக்கு சிதேக்கியா கீழ்ப்படியாத படியால் நேபுகாத்நேச்சர் எருசலேம் பட்டணத்தின் மீது தாக்குதலை நடத்தி சிதேக்கியாவின் பிள்ளைகளை அவன் கண்களுக்கு முன்பே கொன்றான். அது மட்டுமல்ல சிதேக்கியாவின் கண்களையும் கெடுத்து போட்டான்! பின்பு, தேவன் சொன்னது போலவே எருசலேம் பட்டணம் எரித்துப் போடப்பட்டது!

காரியங்கள் நமக்கு சாதகமாக இருக்கும் போது மட்டும் நாம் தேவனுக்க கீழ்ப்படிகிறோமா? உங்கள் ஜெபங்களுக்கு விடையைப் பெற்றுக் கொண்ட பிறகு கீழ்ப்படிய மனதில்லாமல் இருக்கிறீர்களா? நாம் எல்லா காரியங்களிலும் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டாமா? ✝

## வாழ்வதற்கான உபதேசம்

# நம் பெலவீனங்களில் உதவி

# *Help In Our Weakness*

## *Wayne Barrie*

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் பாடுபடுவார்கள் என்று அவர்களுக்கு போதிக்கப்பட்டது [ரோமர் 8:17, 18; I பேதுரு 4: 12-13; யாக்கோபு 1:2-3] நம் போராட்டங்களை தேவன் அறிந்திருக்கிறார் உண்மையில் பாடுகளும், உபத்திரவங்களும் இவைகளை உண்மையாக சகிக்கும் ஒருவருக்கு ஆசீர்வாதமாகவும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கான ஒன்றாகவும் அமையும். நாம் நாள்தோறும் பாடுபடுகிற போராடுகிற சகோதர சகோதரிகளை பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். வாழ்க்கை சில வேளைகளில் மிகக் கடினமானதாக இருக்கும். நம் அருமை சகோதர, சகோதரிகளும் அதற்குத் தப்புவதில்லை.

ரோமர் 8:26-39 வசனங்களில் இடம் பெற்றுள்ள வாக்கு தத்தங்களை குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள். முதலில் பவுல் ரோமர் 8:26-28 வசனங்களில் எழுதினதைக் கவனியுங்கள்.

அந்தபடியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிக்ககிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.

நாம் தொடர்ந்து ரோமர் 8:31-35 வசனங்களை வாசிக்கும் போது இவ்வாக்குதத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தகுமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை

நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தார்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பரிசத்திலும் இருக்கிறவர் நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே. உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப் படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும். இப்படிப்பட்ட இக்கட்டான நேரங்களில் நமக்கு ஜெபம் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

ரோமர் 8:37-39 பவுல் இவ்விதமாகச் சொல்கிறார். இவையெல்லாவற்றிலும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கி றோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களா னாலும், வருங்காரியங் களானாலும், உயர்வானாலும், தாழ் வானாலும் வேறெந்த சிருஷ்டியானலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

நாம் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தால் உபத்திரவம் மற்றும் இடர்ப்பாடுகளின் வேளைகளில் நமக்கு தேவையான உதவி அளிக்கப்படும். என்ன ஓர் ஆசீர்வாதம்!

---

## ஒன்றுமில்லாமையிருந்து மிகப்பெரிய உயர்வுக்கு

1. **கிறிஸ்துவுக்குள் நமக்கு சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டுள்ளன [எபேசியர் 1:3].**
2. **தேவன் நம்மை பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறார், நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே [ரோமர் 8:16,17]**
3. **நாம் இருளின் அதகாரத்தினின்று அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறோம் [கொலோசெயர் 1:13].**
4. **பாவத்தில் மரித்துப்போயிருந்த நாம் கிறிஸ்துவுக்குள் உயிர்ப் பிக்கப்பட்டிருக்கிறோம் [எபேசியர் 2:1-5].**
5. **நம் பெயர்கள் எல்லா புஸ்தகங்களைக்காட்டிலும் விலையேறப் பெற்ற ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன [லூாக்கா 10:20].**

# செயலில் கிறிஸ்தவம்

## 1st Century Christian in a 21st century would

## 21ஆம் நூற்றாண்டு உலகில் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவன்

Kevin L. Moore

**நா**ன் வளர்ந்த உலகம் எங்கும் தொழில்நுட்பம் கட்டாயம் என்னும் நிலை உருவாகிவிட்ட ஓர் உலகமாகும். நான் பிறந்தநாள் முதல் இந்த நாள் வரை தொழில்நுட்பம் இல்லாத ஒரு நாளை நான் அறியவில்லை. இதன் பொருள் என் பெற்றோர்கள் என்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பாமல் இணைய வழியிலேயே எல்லா வற்றையும் செய்ய வைத்தார்கள் என்று படாது. உண்மையில், கோடை விடுமுறை நாட்கள் பெரும்பாலும் வெளியே வேலை செய்வதிலும், ஓடுவதிலும், பந்து விளையாடுவதிலும் தான் கழிந்தன. இருந்த போதிலும், தொழில் நுட்பம் இவ்வுலகத்தை ஆட்கொள்வதற்கு முந்தைய நாட்களைப் பற்றிய தகவல்கள் என்னுடையவைகள் அல்ல. அவைகள் என் கால கட்டத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமான காலகட்டத்தில் வாழ்ந்த மக்களால் சொல்லப்பட்ட தகவல்களாகும். என் வாழ்க்கை முறையிலிருந்து முற்றிலும் வித்தியாசப்பட்ட வாழ்க்கை முறையைக் கொண்ட மக்களால் அந்த தகவல்கள் பரிமாறப் பட்டிருக்கின்றன.

நூறு வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த ஒருவரை இன்று வாழும் ஒருவரோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இருவருடைய வாழ்க்கை அனுபவங் களில் மிகப்பெரிய வித்தியாசங்களை காண்பீர்கள். தொழில்துறை, மருத்துவம் மற்றும் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. பல வழிகளில் நவீன யுகத்தின் வளர்ச்சி ஒட்டு மொத்த உலகத்திலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இருந்தபோதிலும் இந்த தொழில் நுட்பத் தினால் எதிர்மறை விளைவுகள் உண்டா?

நம் உலகம் முன்னெப்போதையும் விட தகவல் தொழில் நுட்பத்தால் இணைக்கப்பட்டதாக இருக்கிறது. தொலைபேசிகள், வலைத்தளம், சமூக வளைத்தளம், விமானங்கள் மற்றும் வாகனங்கள் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்திருப்பதன் காரணமாக உலகின் எந்த மூலைகளிலிருந்தும் ஒருவர் எந்த ஒரு வேலையையும் துரிதமாகச் செய்ய முடியும். சொல்லப்பட்ட காரியங்கள் உண்மையாக இருந்தாலும் கூட, எனக்கு இன்னும் சில கேள்விகள் இருக்கின்றன. மனித இனத்தை இணைப்பதற்கு இத்தனை தகவல் தொழில்

நுட்பங்கள் இருந்தாலும் ஏன் நாம் பிரிந்திருக்கிறோம்? கிறிஸ்தவர்களாக நாம் விரல் நுனியில் வைத்திருக்கும் வளங்களை தேவனுடைய மகிமைக்காக பயன்படுத்துகிறோமா?



இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நாம் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவனைப்போல் வாழ்ந்தால் நம்மால் எவைகளையெல்லாம் செய்து முடித்திருக்க முடியும் என்பதை நினைத்துப் பாருங்கள். இந்நாட்களில் தகவல் தொழில் நுட்ப சாதனங்கள் நாம் விரும்பிய போதெல்லாம் பயன்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்திலிருந்து கூட நாம் ஒருவருக்கொருவர் தகவல்களை பறிமாறிக் கொள்ள முடியும்.

விமானங்கள் மற்றும் வாகனங்கள் மூலமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தேவனுடைய வார்த்தையை வேகமாக கொண்டு செல்ல முடியும். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவத்தை பரப்பும் அதே வேகமும் உத்வேகமும் இந்நாட்களில் வாழும் நமக்கிருந்தால் இன்னும் சிறப்பாக சுவிசேஷத்தை உலக முழுவதிற்கும் எடுத்துச் செல்லும் வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட அதே பொறுப்புகள்தான் நமக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் பரப்ப வேண்டிய அளவுக்கு தேவனுடைய வார்த்தையை நாம் பரப்பிக் கொண்டிருக்கிறோமா? தகவல் தொடர்பு சாதனங்களை தேவனுக்காக பயன்படுத்துகிறோமா? இன்று நாம் கிறிஸ்துவைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க தீர்மானம் எடுப்போம் முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் (எபேசியர் 5:8). ✝

## செயலில் கிறிஸ்தவம்

## What did Paul do in Arabia?

## பவுல் அரேபியாவில் என்ன செய்தார்?

Kevin L. Moore

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவனாக மாற்றப்பட்ட பிறகு, அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல் மூன்று வருடங்களை சிறிய பட்டணமான தமஸ்குவிலும், அருகிலுள்ள அரேபிய தேசத்திலும் கழித்தார் (அப்போஸ்தலர் 9:3-19); (கலாத்தியர் 1:15-18). அரேபியா என்பது நபேத்திய ராஜ்யத்தின் ரோம பெயராக இருந்திருக் கிறது. இந்த அரேபியா தேசம் ஏறத்தாழ நாற்பத்தெட்டு வருடங்கள் அதாவது கி.மு 30 விலிருந்து கி.பி 40 வரை அரேத்தா iV என்னும் ராஜாவாலே ஆளப்பட்டது. இந்த அரேத்தா ராஜா II கொரிந்தியர் 11:32 ல் இடம் பெற்றிருக்கிறது. மத்திய நபேத்திய காலத்தின்போது (கி.மு 30-கி.பி 70 வரை ) அரேபியாவின் எல்லைகள் சீராக இருக்கவில்லை ஆனாலும், இன்றைய சீனாய் பகுதியையும், உள்ளடக்கியதாகத்தான் இருந்திருக்க வேண்டும். அதேபோல் அன்றைய அரேபியா இன்றைய யோர்தான் மற்றும் சவுதி அரேபியாவின் பகுதிகளைக் கொண்டிருக்கிறது. அவ்வபோது தெக்கபோலி மற்றும் தமஸ்கு பட்டணங்கள் அரேபியாவோடு இணைக்கப்பட்டன, பவுல் அரேபியாவில் இருந்த நாட்களில் தமஸ்குவை விட்டு தூரமாக எங்கும் செல்லவில்லை.


அப்போஸ்தலனாகிய பவுல் குறைந்தபட்சம் இரண்டு முறை தமஸ்குவில் இருந்தார்.

1. முதல் முறை அவர் கிறிஸ்தவத்திற்கு மாறிய போது (அப்போஸ்தலர் 9:8-19).
2. அவர் அரேபியாவிலிருந்து திரும்பிய போது (கலாத்தியர் 1:15-17).

பவுல் முதல் முறை தமஸ்குவிலிருந்து வெளியேற காரணம் யூதர்கள் அவரைக் கொலை செய்ய துடித்தார்கள் (அப்போஸ்தலர் 9:23 -25)

இரண்டாம் முறை, பவுல் தமஸ்குவின் ராஜாவின் சேனைத் தலைவன் பவுலை கைது செய்ய முயற்சித்தபடியால் அங்கிருந்து தப்பி

போனார் (II கொரி : 11:32,33). இரண்டு சந்தர்ப்பங்களிலும் பவுல் சகோதரர்கள் மூலமாக கூடையிலே வைக்கப்பட்டு, ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கிவிடப்பட்டார்.



அப்போஸ்தலனாகிய பவுல் (ஓர் இளம் கிறிஸ்தவனாக) தனிமை யில் இருந்து தன்னை புதுப்பித்துக் கொள்ள அரேபியா சென்றாரா அல்லது ஊழியத்திற்கென்று சென்றாரா என்பதைப் பற்றி வேதப் பதிவுகள் நமக்கில்லை. அதேபோல் மூன்று வருட கால கட்டத்தில் எத்தனை வருடங்கள் அரேபியா வில் கழிந்தன போன்ற தகவல் களும் நமக்கு தரப்படவில்லை. இருந்தபோதிலும் பவுல் தான் கிறிஸ்தவரான உடனே கிறிஸ்து வைப் பிரசங்கித்ததன் காரண மாகவும் (அப் 9:20-22); அரேத்தா ராஜாவின் கோபத்திற்கு ஆளான தாலும் (II கொரிந்தியர் 11:38) ஊழியத்திற்காக சென்றிருப்பதாக அதிக வாய்ப்பிருக்கிறது.

பவுல் அரேபியாவில் இருந்தபோது அங்கிருந்த கிறிஸ்துவின் ஒரே சீஷனாக இருந்திருக்க முடியாது. பெந்தேகொஸ்தே நாளிலே எருசலேம் பட்டணத்தில் கூடியிருந்த அரேபிய யூதர்களில் ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்தவத்திற்கு மாறி (அப்போஸ்தலர் 2:11,41) வெளிநாடுகளில் சிதறிப்போனார்கள் (அப்போஸ்தலர் 8:4;11:19) எனவே, பவுலோடு அரேபியாவில் வேறு கிறிஸ்தவர்களும் இருந்திருக்க வேண்டும். பவுல் அரேபியாவில் என்ன செய்து கொண்டிருந்தார் என்பது நமக்கு தெளிவாக தெரியாவிட்டாலும் கூட புறஜாதி உலகில் கிறிஸ்துவின் தூதுவராகத்தான் இருந்திருக்கிறார். ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது (I கொரிந்தியர் 15:10). ✝

# செயலில் கிறிஸ்தவம்

## Zeal for god but not According to knowledge

### தேவனைப் பற்றி வைராக்கியம், ஆனால் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல

Sunny David

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய சொந்த யூத ஜனங்களைக் குறித்த விருப்பத்தையும், அக்கறையையும் உறுதிபடுத்திக் கொண்டவராய் அவர் ரோமாபுரியாருக்கு எழுதின இந்நிருபத்தில் இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தன் இருதயத்தின் விருப்பமும், தன் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது என்று சொல்கிறார் [ரோமர் 10:2]. இஸ்ரவேலர்கள் அறிந்தே, தேவனுக்கு விரோதமாக கலகம் செய்யவில்லை, உண்மையில் அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதினால் நீதி உண்டாகும் என்று நம்பி அதைத்தேடும் முயற்சியில் ஈடுபட்டபோது அவர்களுடைய வைராக்கியம் வெளிப்பட்டது [ரோமர் 9:31–32]. ஆயினும், நீதியை விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்ளும் யாவருக்கும் இலவசமாகக் கொடுக்கும் தேவனைப் பற்றிய போதுமான அறிவு இல்லை [ரோமர் 4:16]. நீதி தேவனிடத்திலிருந்து தான் வருகிறது என்பதைப் பற்றிய அறிவு இல்லாததால்தான் அவர்கள் அதை தங்கள் பக்தியுள்ள நற்கிரியைகளினால் அடைந்துவிடலாம் என்று வீணான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அவர்கள் வேண்டுமென்றே தேவ சித்தத்தை எதிர்க்கவில்லை. ஆனால், தேவசித்தம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளுவதில்லை. தேவனைப் பற்றிய வைராக்கியம் அவர்களுக்கு இருந்தது என்பது மெச்சத்தக்கதாக இருந்தாலும்கூட, அது அறிவுக்கேற்ற வைராக்கியமாக இல்லை என்பது அபாயகரமானது. இது விமானத்தைப் பற்றிய அறிவே இல்லாத ஒருவர் விமானத்தை ஓட்டுவது போன்றதாகும். இது விமானத்திற்கும், அதை ஓட்டுபவருக்கும் பெருத்த சேதத்தை ஏற்படுத்தும். இந்த வைராக்கியமும் கண்மூடித்தனமான, தவறாக நடத்துகிற ஒன்றாகத்தான் இருக்கும்.

இன்றைய நாட்களில் மத உலகில், பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அதிகமாக பேசப்படுகிறது. அதிலும், குறிப்பாக பரிசுத்த ஆவியானவரின் நேரடி வழி நடத்துதல் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. எண்ணற்ற ஜனங்கள் பரிசுத்த ஆவியானவர் கடந்த காலங்களில் செயல்பட்டது போலவே இப்போதும் செயல்படுகிறார் என்று பலர் கொண்டிருக்கும் எண்ணம்தான் அவர்களிடத்தில் மிகப்பெரிய உற்சாகத்தையும், பக்தி வைராக்கியத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இது தேவனுடைய வெளிப்பாட்டை அடிப்படையாக வைத்து அமையாமல் அவர்களுடைய உணர்வுகளை அடிப்படையாக வைத்து அமைந்த ஒன்றாகும். அவர்களின் வைராக்கியமானது பரிசுத்த ஆவியானவருடைய வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டதல்ல. இது அவர்களுடைய முரண்பாடான உபதேசங்களிலும், அவர்களால் உண்டாயிருக்கிற மத குழப்பங்களிலும், பிரிவினைகளிலும் வெளிப்படுகிறது. அவர்கள் எல்லாருமே பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதாக சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் வித்தியாசமாக விசுவாசிக்கிறார்கள், போதிக்கிறார்கள். அவர்கள் உண்மையாகவே பரிசுத்த ஆவியானவர் வேத வாக்கியங்கள் மூலமாக போதிக் கிறவைகளுக்கு இசைவாக நடந்து கொள்வதில்லை. தேவன் கலகத்திற்கு தேவன் அல்ல [I கொரிந்தியர் 14:33].

இங்கே கருத்து என்னவென்றால் இன்றைய நாட்களில் பரிசுத்த ஆவியானவரால் நேரடி வழிநடத்துதல் இல்லை. இன்று பரிசுத்த ஆவி யானவரால் எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தை மூலமாகத்தான் செயல்படுகிறார். முதல் நூற்றாண்டைப்போல் நேரடியாக செயல்படுவதில்லை, வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறின வனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளு தலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது [II தீமோத்தேயு 3:16,17].

மனித வரலாற்றின் முன்பொரு காலத்தில் மனிதனுக்கு தேவனுடைய ஆலோசனையான வேதாகமம் இன்று நம்முடைய கைகளில் இருப்பதுபோல் இல்லை. இந்த வேதாகமத்தின் மூலமாகத்தான் தேவன் மனிதர்களிடத்தில் பேசிக் கொண்டிருந்தார்.

எனவேதான், எபிரெய ஆசிரியர் பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார் என்று எழுதினார் [எபிரெயர் 1:1,2]. குமாரனாகிய கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் பன்னிரெண்டு பேரை தன் செய்தித் தொடர்பாளர்களாக தெரிந்து கொண்டார். அவர்களிடம் இயேசு கிறிஸ்து தாம் பிதாவினிடம் போன பிறகு பிதா பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவார் அவர் நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் என்று வாக்குதத்தம் செய்தார் [யோவான் 14:25,26; 16:12-13].

இயேசு கிறிஸ்துவின் இந்த வாக்குத்தத்தம் கிறிஸ்து உயிர்த் தெழுந்து ஐம்பதாவது நாளான பெந்தெகொஸ்தே நாளிலே நிறை வேறியது. [அப்போஸ்தலர் 2:6-11], அவர்கள் அற்புத அடையாளங் களைச் செய்யும்படியாகவும் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது [அப்போஸ்தலர் 2:43], [மாற்கு 16:19:20]. இந்த அற்புத அடையாளங்களெல்லாம் புதிய ஏற்பாடு எழுத்து வடிவத்தில் இல்லாத காலகட்டத்தில் செய்யப்பட்டன. புதிய ஏற்பாடு எழுத்து வடிவத்தில் வந்த பிறகு வசனங்களை உறுதிப்படுத்த அற்புத அடையாளங்களோ, பரிசுத்த ஆவியானவரின் நேரடி வெளிப்பாடோ அவசியமில்லை. எனவேதான், அற்புத அடையாளங்கள் நின்றுபோயின. இங்கே நிறைவானது என்பது பூரணமானது என்று பொருள்படும். அதாவது புதிய ஏற்பாட்டில் தேவனுடைய பூரண சித்தம் வெளிப்பட்டிருக்கிறது. யாக்கோபு ஆசிரியர் இதை சுயதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம் என்று சொல்கிறார் [யாக்கோபு 1:25]

ஆகவே, இன்று தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு அவருடைய புதிய ஏற்பாட்டின் மூலமாக நம்மிடம் பேசிக்கொண்டிருக்கிறார் [மத்தேயு 17:5; எபிரெயர் 1:1]. ரோமர் 10 :17 படி விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் மனித இனத்துக்கான தேவனுடைய சித்தத்தை தன் னகத்தேக் கொண்டிருக்கின்றன. முழு வேதாகமமும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவி யினாலே ஏவப்பட்டு பேசினார்கள் [II பேதுரு 2:21]. தேவன் பழைய ஏற்பாட்டு பிரமாணத்தை மோசே மூலமாக தம்மால் தெரிந்து கொள்ளப் பட்ட இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்தார். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறிய பிறகு வேதாகமத்தின் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது. இது நமக்கான தேவ சட்டமாயிருக்கிறது. அதின்

கீழ்தான் இன்றைய நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நிச்சயமாகவே, ஒரு தேவனுடைய பிள்ளைக்கு தேவனைப் பற்றிய வைராக்கியத்தின் அவசியத்தை யாரும் மறுக்க முடியாது. இந்த ஒரு தன்மைதான் ஒருவரை உத்வேகத்துடனும், உற்சாகத்துடனும் தேவ சித்தத்தை நிறைவேற்ற ஏவுகிறது. இத்தகைய வைராக்கியத்தை நம்மிடையே பரிசுத்த ஆவியானவரின் நேரடி செயல்பாடு அல்ல, தேவனுடைய வார்த்தையின் அறிவுதான் அந்த வைராக்கியத்தை உண்டு பண்ண வேண்டும். இன்றைய நாட்களில் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய பிள்ளைகளுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற வார்த்தைகளினால்தான் வழிநடத்துகிறார், வேறெந்த மார்க்கத்தினாலும் அல்ல. எனவேதான், நாம் வேதாகமத்தை வாசித்து படித்துப் தியானித்து தேவனுடைய வார்த்தையிலிருந்து ஞானத்தை கற்றுக்கொண்டு அவருடைய சித்தத்தின்படி செய்ய வேண்டும்.

இன்றைய நாட்களில் பலர் கிறிஸ்துவை வைராக்கியத்துடன் பிரசங்கித்து அவர்கள் மூலமாக கர்த்தர் அற்புத அடையாளங்களைச் செய்வதாக சொல்லிக்கொள்கிறார்கள். அவர்கள் தொலைக்காட்சி களிலும், வானொலிகளிலும் பேசுகிறார்கள். பெருந்திரளான கூட்டம் அவர்களுடைய பேச்சை கேட்கக் கூடுகிறது. மத்தேயு 7:22–23 வசனங்களில் கிறிஸ்து விவரிக்கும் மக்களைவிட இவர்கள் பக்தி வைராக்கியத்தில் எந்த வகையிலும் குறைந்தவர்களல்ல. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத் தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத் தினாலே பிசாசுகளை துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன் [மத்தேயு 7:22,23].

பலர் ஜாக்கிரதையாக, தன்னலமில்லாமல் வைராக்கியமாக கர்த்தருக்கு சேவை செய்வார்கள், ஆனாலும், நியாயத்தீர்ப்பு நாளிலே நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் எனும் வார்த்தைகளை கர்த்தரிடமிருந்து கேட்பார்கள். அக்கிரமம் என்றால் என்ன? சட்டத்திற்கு விரோதமான காரியங்கள் அக்கிரமங்கள் எனப்படும். இந்த விஷயத்தில் கிறிஸ்துவின் பிரமாணமாகிய புதிய ஏற்பாட்டுக்கு எதிரான செயல்கள் அக்கிரம செய்கைகளாகும். கிறிஸ்துவின் இந்த எச்சரிக்கை எல்லோரையும் பிதாவின் சித்தத்தை செய்யத் தூண்ட வேண்டும். ✝

# செயலில் கிறிஸ்தவம்

## கர்த்தராகிய இயேசுவுக்கு செவி கொடுத்து அவருக்கு கீழ்ப்படியுங்கள்

## Hear and obey the lord Jesus

Tim Childs

மலைப் பிரசங்கத்தை கிட்டத்தட்ட முடிக்கும் தருவாயில் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை என்று அறிவித்தார் (மத்தேயு 7:21) ,இவ்வசனப்பகுதி நம் ஆழ் மனதில் பதிக்கப்பட வேண்டும். இவ்வசனம் நம் வாழ்க்கைக்கும் நம்மை சுற்றி உள்ளவர் களுடைய வாழ்க்கைக்கும் எவ்விதமாகப் பொருள் கொடுக்கிறது. எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதைப் பற்றி சிந்திக்காமல் ஒரு நாளைக் கூட செலவு செய்யக்கூடாது.

**கர்த்தர்** எனும் வார்த்தை கிரேக்க மொழியில் kurios எனும் வார்த்தையிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன் பொருள் உச்ச அதிகாரத்தை உடையவர், சகலவற்றையும் கட்டுப் படுத்துகிறவர் என்பதாயிருக்கிறது. Thayer என்பவருடைய சொல் அகராதியில் kurios என்பதற்கான விளக்கம் வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களை மதிப்புடனும் மரியாதையுடனும் அழைக்க kurios எனும் வார்த்தையைப் பயன்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு தேவ சித்தத்தின் செய்தியை ஒட்டுமொத்த மனித இனத்துக்கும் கொண்டுவரும்படியாக வந்தார், எனவே, இப்பூமியில் யாரும் அறியாமையில் மரிக்கவேண்டிய அவசியமில்லை நம் கர்த்தராகிய இயேசு பிதாவை நோக்கி விண்ணப் பத்தை ஏறெடுக்கும்போது நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக் கொண்டு நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன் என்று நிச்சய மாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார் கள் என்று விண்ணப்பித்தார் (யோவான் 17:8). தேவன் ஒரு போதும் அறியாமையை காணாதவர்போல் இருப்பதில்லை. மாறாக, எங்கு முள்ள மனிதர்கள் மனந்திரும்பவேண்டுமென்று கட்டளையிடுகிறார் (அப்போஸ்தலர் 17:30).

தர்சு பட்டணத்து சவுல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பார்த்து கேட்ட கேள்வி முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிறது. ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் [அப்போஸ்தலர் 9:6]. மிகுந்த ஞானத்தைப் பெற்றிருந்த சவுல் கர்த்தருடைய கட்டளைக்கு அப்படியே கீழ்ப்படிந்தான். சவுல் தமஸ்கு பட்டணத்துக்கு சென்று அங்கே அனனியாவுக்காக காத்துக்கொண்டிருந்தார். பவுல் தேவனுடைய தூதுவராகிய அனனியாவின் சத்தத்திற்கு கீழ்படிந்த போது சவுல் தன்னுடைய கடந்தகால பாவங்களிலிருந்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் முற்றிலுமாக கழுவி சுத்திகரிக்கப் பட்டார் [அப்போஸ்தலர் 22:16]

இயேசு கிறிஸ்து நம்மிடத்திலிருந்து கர்த்தாவே, கர்த்தாவே எனும் வெற்று வார்த்தைகளை விரும்புவதில்லை. இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் சிலரிடம் கேட்ட அதே கேள்வியை நம்மிடம் கேட்டால் எப்படி இருக்கும்? என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? [லூக்கா 6:46] என்று.

## கேட்கிறதற்குத் தீவிரமாயும்

**1. நாம் கேட்கிற விதத்தைக் குறித்து கவனமாயிருக்க வேண்டும் (லூக்கா 8:18)**

**2. நாம் எதைக் கவனிக்கிறோமோ அதைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (மாற்கு 4:24)**

**3. புத்திமான் இவைகளைக் கேட்டு அறிவில் தேறுவான் ; விவேகி நல்லாயோசனைகளை அடைவான் (நீதிமொழிகள் 1:5)**

**4. நாம் காரியங்களை உன்னிப்பாக கவனித்து பதிலளிக்க வேண்டும் காரியத்தைக் கேட்குமுன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு அது புத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும் (நீதிமொழிகள் 18:13).**

# அனுதின கிறிஸ்தவ ஜீவியம்
## Gains and Losses
## லாபங்களும், நட்டங்களும்

J. Randal Matheny

**வா**ழ்க்கை முழுவதிலும் நாம் ஏதோ ஒன்றை இழந்து கொண்டுதான் இருக்கிறோம். அது உறவுகள், நமக்குப் பிரியமானவைகள், வேலை வாய்ப்புகள், ஆரோக்கியம், உடமைகள், கனவுகள் அல்லது பாதுகாப்பு என்று எதுவாக இருந்தாலும் இழப்பு என்னும் அனுபவத்திற்குள்ளாக நாம் கடந்து வருகிறோம். பெரும்பாலான நேரங்களில் நம்மால் விலையேறப் பெற்றதாக கருதப் படுபவைகள் நம்மிடமிருந்து பறிக்கப்படுகின்றன.

நம் இழப்புகள் மூலமாக தேவன் அவருடனான உறவை பலப்படுத்துகிறார். இவ்வுலகில் நாம் வஸ்துக்களை இழந்தாலும் சரி, ஜனங்களை இழந்தாலும் சரி, ஆவிக்குரிய உலகில் நாம் லாபங்களை உண்டாக்குகிறோம். இத்தகைய லாபங்கள் தானாக ஏற்படுவதில்லை. நம் இருதயங்கள் உலக அன்பிலிருந்து விலகி அடுத்த உலகத்திற்கு ஏங்க வேண்டும். சில வேளைகளில் இழப்புகள் கசப்புணர்வையும் ஏற்படுத்தும்.

நாம் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்குள்ளாக கடந்துபோகும் போது (இது வயதாவதற்கான மாற்றுச் சொல்லாகும்) ஒரு கிறிஸ்தவர் அதிக லாபத்தை சம்பாதித்துக் கொள்ள முடியும். ஞானம், பரலோக த்தைப் பற்றிய அதீத ஆசை, உறுதியான விசுவாசம், பரிசுத்தம், மற்றவர்களிடத்தில் ஆழமான அன்பு, அதிகமான ஆவிக்குரிய குடும்பங்கள், தேவனோடு நெருக்கமான நடை, போன்ற சிலவற்றை நாம் பட்டியலிட முடியும். இந்தக் கண்ணோட்டத்துடன் நாம் உண்மை யாகவே கிறிஸ்துவே எல்லாமுமாயிருக்கிறார் என்று சொல்ல முடியும் (கொலோ 3:11). அல்லது தாவீது தன் பாதுகாப்பை இழந்தபோது தேவனே உம்மை நம்பியிருக்கிறேன் என்று சொன்னதுபோல் சொல்ல முடியும் (சங்கீதம் 16:2).



இதுபோன்ற கேள்விகள்தான் நமக்குள் அதிகமாக கேட்கப்பட வேண்டும். இந்த இழப்பின் மூலமாக தேவன் எனக்கு எதை போதிக்கிறார்? இந்த இழப்பின் காரணமாகி என்னால் எப்படி சிறந்த சீடனாக முடியும். இந்த இழப்பின் காரணமாக என்னால் என்ன ஆவிக்குரிய லாபத்தை ஈட்ட முடியு ம்? இந்த இழப்பின் போது என் உணர்வுகளில் நான் எங்கே அடையாளங்காண முடியும்? இந்த இழப்பில் தேவன் எங்கே?

Judith Voirst என்னும் வேத வல்லுநர் வாழ்க்கையை தேவையான இழப்புகளை உள்ளடக்கிய செய்முறை என்றழைக்கிறார். வேதாகமம் அந்த இழப்புகள் எப்படி நித்திய லாபங்களாக முடியும் என்று காட்டுகிறது. அப்போது நாம் எலிப்பாஸ் போல் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார் என்று சொல்ல முடியும். (யோபு 5:9)

✝

## தேவனோடு பேசும் நேரம்

**ஒரு நாளின் மிக இனிமையான நேரம் தேவனோடு பேசும் நேரந்தான். ஏனெனில் அந்த நேரத்தில்தான் இவ்வுலகிலேயே தம்மை அதிகமாக நேசிக்கும் ஒருவரோடு பேசுகிறோம். அதுமாத்திரமல்ல அண்ட சராசரங்களை உண்டாக்கின தேவனோடு பேசும் சிலாக்கியம் இந்த இனிமையான நேரத்தில்தான் கிடைக்கிறது (எரேமியா 33:3).**

# எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்

## *In Everything Give Thanks*

### *Reyncord Ellioti*

I **தெ**சலோனிக்கேயர் 5:18 ல், அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எழுதினார். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது. Martin Rinkhard என்னும் பெயர் கொண்ட பிரசங்கியார் ஒருவர் குடும்பமாக சேர்ந்து அவர்கள் ஆகாரத்தைப் புசிக்கும் போது தேவனுக்கு நன்றியை வெளிப்படுத்த சில பாடல் வரிகளை அதாவது, தேவனே இப்போது நாங்களெல் லோரும் உமக்கு நன்றி செலுத்துகிறோம் எனும் பாடல் வரிகளை எழுதினார். இந்த துதிப்பாடலின் பின்னணி வழக்கத்திற்கு மாறான தாகும். அதாவது, இப்பாடல் முப்பது வருடகால போரின் போது எழுதப் பட்டதாகும். இந்தப் பிரசங்கியார் இப்போரின் போது ஒரு நாளைக்கு தன் சொந்த மனைவி உட்பட நாற்பது அடக்க ஆராதனைகளை நடத்தினார். போர், கொள்ளைநோய் போன்றவைகள் ஒரு பக்கம் இருந்தாலும், தனக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக அவரால் தேவனுக்கு நன்றி செலுத்த முடிந்திருக்கிறது. அவர் எழுதிய பாடலின் முதல் சரணம் கீழ்கண்டவாறு இருக்கும்.

இப்போது தேவனே நாங்களெல்லாரும் மகிழ்ச்சியுள்ள

இருதயத்தோடு கைகளையும் குரல்களையும் உயர்த்தி

நீர் செய்த அற்புதமான காரியங்களுக்காக உள்ளத்தின்

ஆழத்திலிருந்து நன்றிகளை ஏறெடுக்கிறோம்.

தாயின் கருவிலிருந்து எங்களை காப்பாற்றி போஷித்து எண்ணற்ற அன்பின் ஈவினால் எங்களை ஆசீர்வதித்து இன்றும் எங்களுடைய வராயிருக்கிற உமக்கே நன்றிகள் என்னும் இவ்வார்த்தைகள் சுவாரஸ்யமாயிருக்கிறது. ஆனால், இதில் ஆச்சரியம் எதுவுமில்லை. கடுமையான கடினமான சூழ்நிலைகளில் கூட தேவனை விசுவாசிக் கிறவர்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு நன்றிகளை வெளிப்படுத்த நேரத்தை கண்டுபிடிப்பார்கள்.

ஆனால், எதிர்மறையாக ஒரு தேசம் அபரிதமாக ஆசீர்வதிக்கப் படும் போது, அந்த ஆசீர்வாதங்கள் மறக்கும் மனப்பான்மை மனிதனு க்கு உண்டாக்குகிறது. தேவன் நமக்களித்த ஆசீர்வாதங்களுக்காக ந ா ம்

அவருக்கு நன்றிகளை வெளிப்படுத்தத் தவறுவது தரையில் விழுந்து கிடக்கும் வாழைப்பழத்தை உண்ணும் மிருகங்கள் அது எப்படி கிடைத்தது என்று அதன் ஆதாரத்தை உணராமலிப்பது போன்றது என்று ஒருவர் சொன்னார். இங்கே பாடம் இருக்கிறது. பெரும்பாலான தேவனுடைய பிள்ளைகள் தேவனுக்கு நன்றிகளை செலுத்துவதை விட அவரிடம் விண்ணப்பங்களையும், வேண்டுகோள் களையும் சமர்ப்பிப்பதில் தான் அதிக ஆர்வமுள்ளவர்களாயிருக் கிறார்கள். தேவனிடமிருந்து அபரிதமான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளும் தேசங்கள் தான். அந்த ஆசீர்வாதங்களின் ஆதாரத்தை அதிகமாக மறக்கின்றன. யாக்கோபு ஆசிரியர் இவ்விதமாக எழுதுகிறார். நன்மை யான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்ட சங்கீதக்காரன் நம் மனநிலையும் இவ்விதமாக இருக்க வேண்டு மென்று நம்மை உற்சாகப்படுத்துகிறார். கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்க ளெல்லாருக்கு முன் பாகவும் செலுத்துவேன். நான் உமக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத தொழுது கொள்வேன் [சங்கீதம் 116 :12 ,14,17].

பரலோகப் பிதாவின் பிள்ளைகள் கிருபையின் கரங்களிலிருந்து அபரிதமாக அருவிப்போல் நம்மீது பாயும் ஆசீர்வாதங்களையும் அனு தினமும் நினைவில் கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக, அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத் தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் எனும் விழிப்புணர்வு நமக்குள் ஏற்பட வேண்டும். [எபேசியர் 1:3]. மீட்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு நாளுமே நன்றி அறிவிக்கும் நாள்தான் நம்முடைய முன்னோர்களும், அன்பிற்குரியவர்களும் செய்த தியாகத்தினால் தான் இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரங்கள் சாத்தியமாயிருக்கின்றன. அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக [சங்கீதம் 107 :9] கர்த்தரைக் கெம்பீரமாய்ப்பாடி நம்முடைய இரட்சணியக் கன் மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள். துதித்த லுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம் [ சங்கீதம் 9:1,2].

**எல்லா ஆசிர்வாதங்களும் அவரிடமிருந்து ஊற்றெடுக்கிற படியால்**
**கீழே இப்பூமியிலுள்ள எல்லா சிருஷ்டிகளும் அவரைத் துதியுங்கள்**
**மேலே வானசேனைகளே, அவரை ஏகோபித்து துதியுங்கள்**
**பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவரைத் துதியுங்கள்.**

### கிறிஸ்தவ இல்லம்

# நல்ல திருமணங்களைக் கட்டுதல்


## *Building Good Marrages*

இயேசு கிறிஸ்து சபைக்காக தம் ஜீவனையே விட்டார் என்று பார்க்கிறோம். சபை ஒரு மிகப்பெரிய தெய்வீக அமைப்பு அதற்கு அடுத்தபடியாக இவ்வுலகிலேயே மிகப்பெரிய தெய்வீக அமைப்பு எதுவென்றால் அது நிச்சயமாக குடும்பம்தான். திருமணம் என்பது மனித சமுதாயத்திற்காக தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும் அதுமாத்திரமல்ல, திருமணம் என்பது சிருஷ்டிப்பைப் போல பழமையானதாகும். தேவன் திட்டமிட்டபடியே திருமணம் என்பது மனித சமுதாயத்தின் அஸ்திபாரமாகும். எனவே தான். சபையானது நல்ல திருமணங்கள் கட்டப்பட ஜனங்களுக்கு உதவ வேண்டும். அதற்கான முயற்சிகளை தீவிரமாக எடுக்க வேண்டும். ஒரு நல்ல திருமணத்தைக் கட்ட பல முக்கியமான காரியங்கள் அவசியப் படுகின்றன. கீழ்காணும் காரியங்களை குறித்து சிந்தியுங்கள்.

**முதலாவது நல்ல திருமணங்களை கட்டுவதற்கு உடன்படிக்கை அர்ப்பணிப்பு அவசியப்படுகிறது.**

தேவன் மல்கியா தீர்க்கதரிசி மூலமாக விவாக இணைப்பில் தாம் மத்தியஸ்தராக இருப்பதாக சொன்னது மட்டுமல்லாமல் விவாகம் என்பது ஒரு தூய்மையான உடன்படிக்கை என்றும் சொன்னார். உடன்படிக்கை, அர்ப்பணிப்பு என்பது ஒரு திருமண பந்தத்தில் இணைக்கப்பட்டிருக்கும் தம்பதிகள் இடையே செய்யப்படும் ஓர் ஒழுக்கப்பிரகாரமான உடன்படிக்கை அர்ப்பணப்பாகும். உண்மை யான ஒழுக்கப்பிரகாரமான அர்ப்பணிப்பு வேனிடத்திலிருந்து ஊற்றெடுத்து வருகிறபடியால், விவாகத்தில் உடன்படிக்கை அர்ப்பணிப்பு என்பது தேவனுடைய அர்ப்பணிப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வகையான அர்ப்பணிப்பை உடையவர்கள் நல்ல திருமணத்தை கட்டுவதற்கு என்ன அவசியப்படுகிறதோ அதைச் செய்வார்கள். ஏனென்றால், அப்படிச் செய்வது தேவனுடைய சித்தமாயிருப்பது மாத்திரமல்லாமல் தேவனுடனான உறவு மேம்படவும் உதவுகிறது. திருமண அர்ப்பணிப்பில் நம் பொறுப்பை தட்டிக்கழிப்பது நம் ஆத்தும இரட்சிப்பில் பாதிப்பை ஏற்படுத்துவதால் தனிப்பட்ட ரீதியில் அதற்கு அழுத்தம் அவசியப்படுகிறது. உடன்படிக்கை அர்ப்பணிப்பு என்பது ஒரு நல்ல திருமணத்தின் அஸ்திபாரமாயிருக்கிறது.

அடுத்ததாக, ஒரு நல்ல திருமணத்தை கட்ட அன்பு அவசியப் படுகிறது. இவ்வகையான அன்பை ஒருவர் தற்செயலாக பெற்றுக்கொள்ள முடியாது. இவ்வகையான அன்பு ஒருவருடைய விருப்பமாயிருக்கிறது. இவ்வகையான அன்பை ஒருவர் மற்றொரு வரிடமிருந்து பெற்றுக் கொள்ளாமலேயே பகிர்ந்து கொள்ள முடியும். இவ்வகையான அன்பு வெளிப்படுத்தப்படுவதற்கு, ஒருவர் தனக்கு கொடுக்கப்பட்ட நாளில் எப்படிப்பட்ட மனநிலையில் இருக்கிறார் என்பது ஒரு பொருட்டல்ல. இவ்வகையான அன்பு நாம் பாவிகளாக இருந்த போது கூட நம்மீது அன்பு செலுத்திய கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கிறது. இவ்வகையான அன்பு பொறுமையுள்ளது. மன்னிக்கக்கூடியது, மற்றவர்களுடைய நலனை நாடுகிறது.



ஒரு நல்ல திருமணத்தை கட்ட நோக்கமுள்ள முயற்சி அவசியப் படுகிறது. ஒரு நல்ல திருமணம் கட்டப்பட தம்பதிகள் தகவல் பரிமாற்றத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதன் விளைவாக தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த கற்றுக்கொள்ளவேண்டும். அதேபோல் தம்பதிகள் ஒருவருக்கொருவர் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். இணைந்து செயலாற்றும் தம்பதிகள், சில செயல்திட்டங்களை தீட்டி, அதை நிறைவேற்ற இணைந்து செயல்படுவார்கள். இவர்கள் வாழ்க்கையில் பொதுவான விஷயம் என்று ஒன்றிருக்கும். அதேபோல் தம்பதிகள் தங்கள் இல்லற வாழ்க்கையில் நெருக்கமாக இருந்து பிசாசு நெருங்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு நல்ல திருமணம் கட்டப்பட அதிகமான ஜெபம் அவசியப் படுகிறது. தொடர்ச்சியான ஜெபம் தேவன் மீதான நம் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்கிறது. இது திருமணத்தில் இணைந்த தம்பதி களுக்கும், தேவனுக்கும் இடையிலான தனிப்பட்ட உறவை மேம்படுத்துகிறது. அதுமாத்திரமல்ல, இது ஒவ்வொருவருடைய பங்கிலும் வெளிப்படுத்தப்பட வேண்டிய அர்ப்பணிப்பை பலப் படுத்துகிறது. ஜெபம் தம்பதியினருடைய வாழ்க்கையில் அவசியமான ஆசீர்வாதங்களை அள்ளித்தருகிறது. இந்த ஆசீர்வாதங்கள் விவாகத்தில் மிக முக்கியமான வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

ஒரு நல்ல திருமணத்தை கட்டி எழுப்ப நீங்கள் அர்ப்பணிப்புள்ள வராக இருந்தால் அதற்கு உடன்படிக்கை பொறுப்பு, அகப்பே அன்பு எனும் தெய்வீக அன்பு தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்துவதற்கான தொடர் முயற்சி, அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல், இல்லற வாழ்க்கையில் நெருக்கம் போன்றவைகள் மிகவும் அவசியமான வைகளாகும். ஜெபத்தோடு கூட மேற்சொல்லப்பட்ட காரியங்களில் கவனம் செலத்தினால் தேவன் திருமணங்களை எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தினாரோ அந்த நோக்கங்கள் நிறைவேறும்.

விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக! வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் (எபிரெயர் 13:4).

கடைசியாக, என் சகோதரரே கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள் (எபேசியர் 6:10).

## காலத்தைப் பிரயோஜன படுத்திக்கொள்ளுதல்


**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோசனப் படுத்திக் கொள்ளுங்கள் என்று தேவன் சொல்கிறார் (எபேசியர் 5:16) நம்மெல்லாருக்கும் ஒரேவிதமாத்தான் நேரம் அதாவது 24 மணிநேரம் உலகத்தை உண்டாக்கின தேவனால் தரப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் இவ்வுலகிலுள்ள எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அல்லது சமமாக கிடைக்கும் ஒன்றுதான் சமயம். அதை தேவனுக்காக பயன்படுத்துவதா அல்லது உலகத்திற்காக பயன்படுத்துவதா என்பது நம் கையில்தான் இருக்கிறது.**

கிறிஸ்தவ இல்லம்

# தேவ பக்தியுள்ள பெற்றோரின் பாதுகாப்பு

## *Godly Parental Protection*

***Darrell Surrett***



**வா**ழ்க்கையின் ஏதோ ஒரு கட்டத்தில் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தாலும் கூட தேவ சித்தத்திற்கும், நோக்கத்திற்கும் மாறாக, சில முடிவுகளை எடுத்து விடுகிறோம். நம் பாவங்களிலிருந்தும் நம்மை மன்னிக்க ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உண்டு, நம் பிள்ளைகளும் நம்மைப்போலவே சில வேளைகளில் தவறான முடிவுகளை எடுத்து விடுகிறார்கள். அவர்கள் எடுக்கும் தீர்மானங்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் போது பெற்றோர் என்னும் நிலையில் அது நமக்கு மிகுந்த வேதனையை உண்டாக்குகிறது. மேலும், நாம் அப்பிரச்சனைகளின் தன்மையையும், மாதிரிகளையும் உள்ளாகப் புதைந்திருக்கும் பிரச்சனைகளையும் கவனிப்போம்.

ஆரோனைப் பொறுத்தவரை பிள்ளைகளின் நிலைமையை கவனித்து எவ்வித சந்தேகமுமின்றி கடினமானதாகவும், வேதனையான ஒன்றாகவும், தான் இருந்திருக்க வேண்டும். லேவியராகமம் 10:1–3 வசனங்களில் நாதாபும், அபியூவும் எடுத்த தீர்மானங்கள் அவர்கள் உயிரைப் பறித்து கொண்டன. இங்கே ஆரோன் தன் இருகுமாரர்களை மாத்திரம் இழக்கவில்லை, அந்த இழப்பு அவருடைய குமாரர்கள் வெளிப்படையாகச் செய்த பாவத்தின் விளைவாகும். இப்படி ஒரு சம்பவம் உங்கள் வாழ்க்கையில் நடந்திருந்தால் பெற்றோர் என்னும் நிலையில் தேவனுடைய கட்டளைகளை நீங்கள் எப்படி ஏற்றுக்கொள்வீர்கள்? ஆரோன் தேவனால் தன்

பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட நியாயத்தீர்ப்பை குறித்து மௌனமாகத் தான் இருந்தார். அவர் தேவனுக்கு கீழ்ப்படிந்தார். பெற்றோர்களைப் பொறுத்தவரை தங்களுடை பிள்ளைகளுடைய காரியம் என்று வரும்போது நியாயமான, பாராபட்சமற்ற தீர்ப்பு செய்வதை விட உடனே அவர்களுக்காக வக்காலத்து வாங்குவது தான் எளிதாயிருக்கும். இது மிகவும் அபாயகரமான போக்காகும். நம்பிக்கையிருக்கு மட்டும் உன் மகனைச் சிட்சைசெய்; ஆனாலும் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்பவொட்டாதே (நீதிமொழிகள் 19:18)

பெரும்பலான பெற்றோர்கள் சரியானவைகளைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால், அப்பலனை அடைய பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவதற்குப் பதிலாக அதிலிருந்து பிள்ளை களை விடுவிக்க பேரம் பேசுவதற்கு முயற்சிக்கிறார்கள். அதன் விளைவு பிள்ளைகளை நாதாப், அபியுவைப்போல கீழ்ப்படியாமையின் முடிவை எடுப்பார்கள். இருந்தபோதிலும் சில பெற்றோர் பிள்ளை யானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து எனும் பிரசங்கம் அவர்களுக்கு செய்யப்பட்ட வேண்டுமென்று விரும்பு கிறார்கள் (நீதிமொழிகள் 22:6)

உங்கள் பிள்ளைகள் உங்கள் அறிவுரைகள் பழமையானதாக இருந்தால் இதை அற்பமாக நினைப்பார்கள். பிள்ளைகள் சில வேளைகளில் அவர்களுடைய நோக்கத்தைக் குறித்த ஆழமான விவாதங்களை தவிர்க்க அப்பா எனக்குத் தெரியும், அம்மா எனக்குத் தெரியும் என்று சொல்லி உங்கள் எச்சரிப்புகளைத் தடுப்பார்கள். நாம் பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவையும் நம்மால் கண்காணிக்க முடியாது. அவர்களுக்காக நாம் முடிவுகளை எடுக்கவும் முடியாது. அதே போல் அவர்களை இருபத்தி நான்கு மணிநேரமும் பாதுகாக்கவும் முடியாது. அவர்களை நம் நேரடி கண்காணிப்பிலிருந்து தூரமாக போகும் நாட்கள் வரும். எனவே, நாம் என்ன செய்யலாம்? நீங்கள் திரையில் பிரசங்கி 12:1 யை எழுதி அவர்கள் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ செல்லும் போது அவர்களோடு அனுப்பி வைக்கலாம். நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும் , எனக்குப் பரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் (பிரசங்கி 12:1) நம் பிள்ளைகள் மீது நமக்கு முழுக்கட்டுப்பாடு இல்லாவிட்டாலும் கூட அவர்களை பாதுகாக்கவும், போதிக்கவும், ஆயத்தப்படுத்தவும் தேவன்

கொடுத்திருக்கும் வல்லமையான ஆயுதம் நாம் அவர்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம்தான் தேவபக்தியுள்ளதாகவும் பெற்றோர் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். நாம் அவர்களுக்கு எல்லாவிதத்திலும் முன்னுதாரணமாக இருந்து அந்த நினைவுகளை அவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். பிள்ளைகளிடம் எப்போதும் மிகவும் கடினமாகவும் இருக்க வேண்டாம். அதேநேரத்தில் மிகவும் மென்மையாகவும் இருக்க வேண்டாம். அப்படி நடந்து கொண்டால் பிள்ளைகள் தான் அதற்கு அதிகவிலை கொடுக்க வேண்டும். அந்தத் தவறை ஒரு போதும் செய்ய வேண்டாம்.

ஜீவனுள்ள தேவனுக்கு சேவை செய்யும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மோசமான விளைவுகளை அனுபவிக்கக்கூடாது என நினைக்கிறார்கள். அதேநேரத்தில் பிள்ளைகள் தேவனிடத்தில் கிட்டிச் சேர வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். அவர்களை கடினமாக நடத்தி, அச்சுறுத்தி, கீழ்ப்படிய வைப்பது நாம் விரும்பிய விளைவை ஏற்படுத்தாது. தேவனுடைய வார்த்தைகளின்படி அவர்களுக்கு அறிவுரை வழங்கி, சிறந்த முன்னுதாரணமாக விளங்கி தேவனுக்கு கீழ்ப்படியச் செய்யுங்கள்

தேவனுடைய வார்த்தை பிள்ளைகளை நாம் கோபமூட்டக் கூடாது என்ற எச்சரிக்கிறது (கொலோ 3:21' எபேசியர் 6:4). உலகமும் மற்றவர்களும் அவர்களை விட்டு விடும் போது அவர்கள் திரும்பும் இடம் நீங்களாகத்தான் இருக்க வேண்டும். அப்படி அவர்கள் உங்களிடத்தில் வரும்போது உங்கள் கடினமான வேளைகளில் உங்களை கரை சேர்த்த பரலோகத்தின் ஜீவனுள்ள தேவனிடத்தில் அவர்களை வழி நடத்த வேண்டும்.

---

### நெகேமியாவின் நாட்களில் எருசலேமின் அலங்கங்கள் கட்டப்பட இஸ்ரவேலர் செய்தவைகள்

- *அவர்கள் ஜெபித்தார்கள்*
- *அவர்கள் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தினார்கள்*
- *அவர்கள் குறைசொல்பவர்களைக் கண்டுகொள்ளவில்லை*
- *அவர்கள் ஒவ்வொருவரையும் வேலையில் ஈடுபடுத்தினார்கள்*
- *அவர்கள் கவனம் சிதறாமல் வேலையில் மாத்திரம் சிந்தை வைத்தார்கள்*

# அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது

## *Holy and Reverend is thy Name*

### *Dennis Gulledge*

மத உலகில் ரெவரென்ட் என்னும் பட்டத்தை கனம் மற்றும் கௌரவத்தின் அடையாளமாகவும், ஒரு ஊழியக்காரன் அல்லது பிரசங்கியார் ரெவரென்ட் என்னும் பதவியை உடையவராக இருந்தால் தான் மதிப்பும், மரியாதையும் கிடைக்கும் என்று எண்ணுகிறார்கள். இன்னும் சிலர் பெயர்ப் பலகையில் தங்கள் பெயரை அலங்கரிக்கும் படியாக ரெவரென்ட் போன்ற பட்டங்களை போட்டுக் கொள்கிறார்கள். அவர்கள் இப்படிச் செய்வதினால் வேத வாக்கியங்களுக்கு அப்பால் வெகு தூரம் சென்று விட்டார்கள். ஏனென்றால், எந்த ஒரு பிரசங்கியாருக்கோ அல்லது பாதிரியாருக்கோ ரெவரென்ட் என்னும் பட்டங்களைத் தரித்துக் கொள்ளும்படி வேதாகமம் அதிகாரம் அளிக்க வில்லை. எனவே தான், எந்த ஒரு பிரசங்கியாரும் மற்றவர்களால் ரெவரென்ட் என்று தன்னை அழைக்க அனுமதிக்கவும் கூடாது. இந்த நாட்களில் பரிசுத்த அல்லது தூய என்னும் வார்த்தைகளும் பட்டம் அல்லது பதவியாக கருதப்பட்டு மத உலகில் தவறாக பயன்படுத்தப் படுகிறது. இது போன்ற வேறுபாடுகள் பட்டம் பதவியெல்லாம் தவறானது என்று சொல்லப்படுவதற்கான காரணம் கிறிஸ்துவின் சபையில் மதகுரு, சாதாரண விசுவாசி போன்ற எல்லாம் இல்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இது போன்ற பதவி பட்டங்களை எல்லாம் குறித்து கடுமையாக கண்டித்திருக்கிறார் (மத்தேயு 23:8,9).

ஒரு கூட்டத்தார் ரெவரென்ட் என்னும் பட்டத்தை மனிதர்களுக்கு பயன்படுத்தக்கூடாது என்று சொல்லி சங்கீதம் 111:9 யை மேற்கோள் காட்டி வேதாகமத்தில் ரெவரென்ட் என்னும் வார்த்தை இந்த இடத்தில் மட்டும் தான் இடம் பெற்றிருக்கிறதென்றும் இது தேவனை மாத்திரம் தான் குறிக்கிறதென்றும் உறுதியாக சொல்கிறார்கள். Reverend என்னும் வார்த்தை King James ஆங்கில வேதாகமத்தில் ஒருமுறை தான் இடம் பெற்றிருக்கிறது. எந்த எபிரெய வார்த்தைகளிலிருந்து Reverend என்னும் ஆங்கில வார்த்தை மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிதோ அந்த எபிரெய பதம் பழைய ஏற்பாட்டில் 300 க்கும் மேற்பட்ட முறை இடம் பெற்றிருக்கிறது.

Reverend எனும் ஆங்கில வார்த்தை Yare எனும் எபிரெய வார்த்தையிலிருந்து வந்தது என்பது உண்மைதான். இந்த வார்த்தை பாழைய ஏற்பாட்டில் 373 முறைகள் வருகிறது. இது **பயந்திருப்பது** (76 முறைகள்) **பயங்கரம்** (1முறை) **பயம்** (242 முறைகள்) **மரியாதை** (2 முறைகள்) **பயங்கரமான** (5 முறைகள்) **பயங்கரமான செயல்கள்** (1முறை) **பயங்கரத்தன்மை** (1முறை) இடம் பெற்றிருக்கின்றன.

ஆதியாகமம் 19:30 ல் பின்பு லோத்து சோவாரிலே குடியிருக்கப் பயந்து என்றுள்ளது. இங்கே பயந்து என்பது Yare என்னும் எபிரெய பதம் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இதே எபிரெய வார்த்தை (உபாகமம் 28:58) ல் இருமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ... உன் தேவ னாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும் படிக்கு. அதேபோல் ஏசாயா 18:2ல் எத்தியோப்பியர்கள் பயங் கரமானவர்கள் என்பதை விவரிப்பதற்காக Yare எனும் எபிரெய வார்த்தையின் ஒரு வகை பயன்படுத்தப்பட்டடிருக்கிறது. சங்கீதக்கார னாகிய தாவீது 139:14ல் நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப் பட்டபடியால், உம்மைத் துதிப்பேன் என்று சொன்னாலும் கூட இங்கே Yare எனும் எபிரெய வார்த்தையின் ஒரு வகை பயன்படுத்தப்படுகிறது.

பரிசுத்தம் பயங்கரம் போன்ற வார்த்தைகள் தேவனுக்கு பட்டப் பெயராக பயன்படுத்தப்படவில்லை. மாறாக, தேவனுடைய குணா திசயங்களை அல்லது பண்புகளை விவரிக்கும் வார்த்தைகளாக பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. சங்கீதம் 111:9 தேவனுடைய நாமத்தை உயர்த்தும்படியான ஓர் வசனமாகும். தேவனுடைய நாமம் மரியாதை தேவபயம் மற்றும் மரியாதை கலந்த பயம் போன்றவைகளுக்குப் பாத்திரமாயிருக்கிறது. சர்வ வல்ல தேவனுடைய நாமம் என்று வரும்போது, அந்த நாமத்தின் பால் நாம் செலுத்த வேண்டிய மரியாதை எங்கே? தேவனுடைய நாமத்தைப் பற்றிப் பேசும் போது அவரை ஆராதனையில் அணுகும் போது, அவருக்கு முன்பாக வாழும் போது அவருக்கான பயம் கலந்த மரியாதை வெளிப்படுகிறதா?

**கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும் படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபிரெயர் 9:28).**

**மேற்சொல்லப்பட்ட வசனத்தின்படி கிறிஸ்து இப்பூமிக்கு வருவார், ஆனால், முதல் முறை அவர் இப்பூமிக்கு வந்தபோது நம் பாவங்களுக்காக தம்மைத் தாமே பலியாக ஒப்புக் கொடுக்க வந்தது போல் வரமாட்டார். மாறாக, தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்த வான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்த படியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர் களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும் போது அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.**

# கிறிஸ்தவத்தின் நான்கு முக்கியமான விதிகள்

# FOUR IMPORTANT PRINCIPLES OF CHRISTIANITY

mark n. posey

**முன்னுரை:**

1. ஒரு கிறிஸ்தவனாயிருப்பது எனக்கு அலாதிப் பிரியம், அது உலகிலேயே மிக அருமையான காரியமாகும். எது கிறிஸ்தவத்தை கவர்ச்சிகரமானதாகவும் அனுபவிக்கத்தக்க ஒன்றாகவும் மாற்றுகிறது ?

2. *பதில்:* கிறிஸ்தவத்தின் நான்கு முக்கியமான விதிகள். கீழ்க்காணும் அந்த விதிகளைப் பற்றித் தெரிந்த பரவசமடையுங்கள்.

**I**. மன்னிப்பு [மத்தேயு 1:21 ;லூாக்கா 19:10 யோவான் 1:29]

**A**.நமக்கு ஏன் மன்னிப்புத்தேவை?

1. பதில் :பாவம் நம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது[ரோமர் 3:23; 6:23 ;ஏசாயா 59: 1–2]

2. நீங்கள் நீண்ட காலத்திற்கு உங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்கிறீர்களா? அப்படிப் பிரிந்திருந்தால் சோகம், தனிமை, நம்பிக்கையின்மை போன்றவைகள் நம்மை வாட்டி வதைக்கும் பாவத்தின் காரணமாக தேவனிடமிருந்து நாம் பிரிவதாக கற்பனை செய்துகொள்ளுங்கள். அதைக் குறித்து சிந்திப்பதற்கே பயமாயிருக்கிறது.

**B**.இருந்தபோதிலும் இயேசு கிறிஸ்து மனிதனை தேவனிடம் ஒப்புர வாக்கவும் [I கொரிந்தியர் 5:18–21], மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கு பாவ மன்னிப்பை வழங்குவதற்கும் மரித்தார் [அப்போஸ்தலர் 2:38]. பாவமன்னிப்புக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

II. **பிதா**

இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களுக்கு பரமண்டலங்களி லிருக்கிற எங்கள் பிதாவே என்று ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார் [மத்தேயு 6:9]

1. நம் பரலோக தகப்பன் நமக்காக அக்கறைப்படுகிறார், நம்மை நேசிக்கிறார். நம்மை ஆசீர்வதிக்கிறார்[எபேசியர் 1:3]

2. எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார் அவருடைய தகப்பனார் மரித்துப்போனார். ஒரு நாள் நண்பன் என்னிடம் நான் என் அப்பாவிடம் பேச விரும்புகிறேன் என்று சொன்னார்

B கிறிஸ்தவர்கள் தங்கள் பரம தகப்பனிடம் இயேசு கிறிஸ்து மூலமாக ஒரு நாளின் எந்த நேரத்திலும் பேசமுடியும். நம் தகப்பனாக தேவன் இருக்கிறபடியால் அவருக்கு ஸ்தோத்திரம்.



III **குடும்பம்**

A கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய குடும்பத்தால் ஆசீர்வதிக்க பட்டிருக்கிறார்கள்

1 அன்பு, அக்கறை, மற்றும் கரிசனை போன்றவைகள் ஆவிக்குரிய குடும்பத்தாரிடமிருந்து கிடைக்கும் விலையேறப்பெற்ற ஆசீர்வாதங்களாகும்.

2. இப்பூமியில் தேவனுடைய குடும்பம் நமக்கு மிகப்பெரிய ஆதரவாக இருக்கிறது.

B ஒரு நாள் பரலோகத்திலே இந்த ஆவிக்குரிய குடும்பம் மறுபடியும் ஒன்றிணைவதை நாம் அனுபவிப்போம். அந்த நாள் வர நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

IV **எதிர்காலம்**

A. வேத வாக்கியங்களில் பரலோகம் பலனாகவும், சுதந்தரமாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

1. அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாகக கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயுத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது[1:45]

**B** .நாம் இங்கே இருந்து நித்தியம் வரை கர்த்தருக்கு உண்மையாக வாழ்ந்தால் பரலோகம் நம் வருங்காலமாக இருக்கமுடியும்.

1. மரணம் எல்லாவற்றையும் முடிவுக்கு கொண்டு வருகிறது.

2. உங்கள் வருங்காலம் மகிழ்ச்சிகரமான ஒன்றதாக இருக்கிறதா அல்லது சோகமான ஒன்றாக இருக்கிறதா?

## மார்க்கம் என்பது என்ன?

மார்க்கம் என்பது கிறிஸ்தவ முறைமையாயிருக்கிறது;அது உண்மையான ஆராதனை முறையாயிருக்கிறது;அது வாழ்க்கை முறையாயிருக்கிறது. ஒரு வேத அறிஞர் அப்போஸ்தலர் 9:2 யை இவ்விதமாக வியாக்கியானம் செய்கிறார். கர்த்தருடைய மார்க்கம் அவருக்குரிய ஒரு ஆராதனை முறையைக் குறிக்கிறது இம்மார்க்கம் அவராலேயே பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது; இம்மார் க்கத்தில் மனிதர்கள் நடக்கும்படி தேவன் சித்தங் கொண்டிருக்கிறார். மனிதர்கள் அப்படிச் செய்யும் போது வாழ்க்கையில் அவர்கள் பாதுகாப்பாக நடந்து கடைசியில் அந்த நித்திய மகிழ்ச்சியை அடைவார்கள். யூத எழுத்தாளர்கள் கிறிஸ்தவத்தின் முழுமையான உபதேசத்தையும் நடைமுறையையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவம் ஜீவமார்க்கமாக, இரட்சிப்பின் மார்க்கமாக, சேவையின் மார்க்கமாக நம்பிக்கையின் மார்க்கமாக இருக்கிறது. இம்மார்க்கத்தின் மூலமாகத்தான் நாம் இந்த வாழ்க்கையை அனுபவிக்கிறோம். வரவிருக்கும் அல்லது இனிவரும் உலகில் நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வோம் (I பேதுரு 3:18; யோவான் 10:10; லூாக்கா 19:10;I யோவான் 2:25)

சோசலிசக் கொள்கையும் இன்னும் வேறு சிலக் கொள்கைகளும் லட்சக்கணக்கான மக்களால் வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட எல்லோரும் நடக்க வேண்டிய மார்க்கம் கிறிஸ்தவ மார்க்கம்தான். கிறிஸ்தவம் நம் வாழ்கையின் எல்லா நிலைகளிலும் நம்மை ஆளுகின்ற, நம்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக மாற்றப்பட வேண்டும். ✝

## வேதாகம கேள்விகள்

## What about the Thief on the cross?

## சிலுவையில் தொங்கிய அக்கள்ளனைப் பற்றி என்ன?

Brain R. Kenyon

மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தாரோடு ஞானஸ்நானத்தின் அவசியத்தைப்படிக்கும்போது பொதுவாக அவர்கள் எழுப்பும் கேள்வி சிலுவையின் மீது தொங்கிய கள்ளனைப் பற்றித்தான். அதாவது அவர்கள் அடிக்கடி கேட்கும் கேள்வி சிலுவையின் மீது தொங்கிய கள்ளன் எப்படி இரட்சிக்கப்பட்டான்? அவன் ஞானஸ்நானம் பெறவில்லையே'' என்பவைகளாக இருக்கின்றன. அக்கேள்வியின் உட்பொருள் என்னவென்றால் சிலுவையில் தொங்கிய கள்ளன் ஞானஸ்நானம் பெறாவிட்டாலும் இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று இயேசு கிறிஸ்துவால் வாக்குத்தத்தம் செய்திருக்கிறபடியால், நாமும் ஞானஸ்நானம் பெறத் தேவையில்லை என்பதாகும். சிலுவையில் தொங்கிய கள்வன் சம்பவம் இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் தேவையில்லை என்று நிரூபிக்கிறதா? இச்சம்பவம் இரட்சிப்போடு தொடர்புடையதாயிருக்கிறபடியால் நாம் இதைக் குறித்து ஆழமாக சிந்திப்போம்.

### பின்னணி

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், அக்கள்வனுக்கும் இடையே ஏற்தபட்ட அந்த உரையாடலானது இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது நடந்தது (லுக்கா 23:39-43). அந்த பயங்கரமான நாளிலே நம் ஆண்டவரோடு கூட வேறு இரண்டு பெருங்குற்றவாளி களையும் சிலுவையில் அறைந்தார்கள் (யோவான் 19 : 16-18). முதலில் அவ்விரண்டு கள்வரும் கிறிஸ்துவை நிந்தித்தார்கள் (மத்தேயு 27:44; மாற்கு 15:32). இருந்தபோதிலும் ஒருவன் தன் மனதை மாற்றிக் கொண்டான். அந்த நபரைப் பற்றி சிந்திப்பதற்கு முன்பாக லூக்கா ஆசிரியர் சொல்வதைக் கவனிப்போம். அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன்; நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான் (லூக்கா 23:39). நீ கிறிஸ்துவானால் என்னும் சொற்றொடர் சிலுவை அருகே நடந்து போகிறவர்கள் கிண்டலாகச் சொன்ன சொற்றொடராகும். ஆனால், மற்றொரு குற்றவாளி சற்று வித்தியாசமாக நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்.

நாம் நடப்பித்தவைகளுக்கு தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லை என்று அவனைக் கடிந்து கொண்டு [லூக்கா 23:40,41]. இக்குற்றவாளி மனமாற்றத்தைக் காட்டினான். நீ தேவனுக்கு பயப்படுகிறதில்லையா? என்று இக் கள்வன் சொன்ன வார்த்தைகளிலிருந்து தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை இவன் உணர்ந்து கொண்டான். இயேசு கிறிஸ்து தேவன் என்பதை இவன் அடையாளங்கொண்டு விட்ட தையும் நாம் புரிந்து கொள்ளலாம் [யோவான் 1:1-3]. மனந்திரும்பிய இக்கள்வன் தானும் மற்ற கள்வனும் நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம் என்பதை ஒத்துக் கொண்டான் [அப்போஸ்தலர் 25:11]. மேலும், அவன் இயேசு கிறிஸ்துவின் கள்ளங்கபடமற்ற நிலையை அடையாளங் கண்டு கொண்டான்.

மனமாற்றமடைந்த இக்கள்வன் சிலுவையில் தொங்கிய மற்ற கள்வனைப்பார்த்து கடிந்து கொண்ட பிறகு, இயேசுவை நோக்கி ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்று சொன்னான் [லூக்கா 23:42]. இங்கே நினைத் தருளும் எனும் வார்த்தை நன்மைக்காக என்னை நினைத்தருளும் எனும் எண்ணத்தைக் கொண்டு வருகிறது. நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது என்னும் சொற்றொடர் இக்கள்வன் இயேசு தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்பதை இவன் அறிந்திருந்தான் என்பதையே காட்டுகிறது [மத்தேயு 16:18:19]. மேலும், இது இவன் ஒரு யூதனாக இருக்கக்கூடும். யோவான் ஸ்நானனின் சீஷனாக இருந்திருக்கக் கூடும் அல்லது இயேசுவின் பிரசங்கத்தை அல்லது போதகத்தை எங்கோ கேட்டிருக்க வேண்டும் என்பதைத்தான் காட்டுகிறது [மாற்கு 1:15]. அல்லது இவன் ஒரு புற ஜாதியானாக இருந்து இயேசுவுக்கு விரோதமாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை அறிந்திருக்கக்கூடும் [லூக்கா 23:10-11]. எப்படிப் பார்த்தாலும் இக்கள்வன் மரணம் முடிவல்ல. இவ்வாழ்க்கைக்குப் பிறகும் அவன் நினைவுகூறப்பட விரும்பியிருக்கிறான்.

மனம் மாறிய கள்வனைப்பார்த்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் [லூக்கா 23:43]. இன்றைக்கு என்பதன் பொருள் இப்பொழுதே என்பதாகும். மேலும், ராஜ்ஜியம் வரும் வரை காத்திருக்க வேண்டாம் என்று சொல்வது போன்றதாகும். பரதீசு என்பது பாரசீக பின்னணியைச் சார்ந்த ஓர் வார்த்தையாகும் அதன் பொருள் பூங்கா அல்லது தோட்டம் என்பவைகளாகும். இவ்வார்த்தை [II கொரிந்தியர் 12:3; வெளிப்படுத்தின விசேஷம் 2:7] போன்ற வசனங்களில் இடம் பெற்றிருக்கின்றன.

## தீர்வு

சிலுவையில் தொங்கிய கள்வன் சம்பவம்இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் தேவையில்லை என்று நிரூபிக்குமா? இக்கேள்விக்கு பதிலளிக்கும்போது மூன்று காரணிகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். முதலாவது, காலக்கிரமத்தை கருத்தில் கொள்ள வேண்டும். இச்சம்பவம் இயேசு சிலுவையில் மரித்துக் கொண்டிருந்த போது நடந்தது. கிறிஸ்து தாம் உயிர்த்தெழும்வரை ஞானஸ்நானத்தை எல்லோருக்கும் கட்டாயமாக்கவில்லை (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15-16). இயேசு கிறிஸ்து பழைய பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தார் மரித்தார் (கலாத்தியர் 4:4-5). அவருடைய புதிய ஏற்பாடு அவருடைய மரணத்திற்குப் பிறகுதான் நடைமுறைக்கு வந்தது. ஏனென்றால், எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும். அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே (எபிரெயர் 9:16,17).

இரண்டாவது, அக்கள்வனை எடுத்துக் கொள்ளுங்கள். ஏற்கனவே குறிப்பிட்டபடி இவன் ஒருவேளை யோவான் ஸ்நானனின் சீஷனாக இருந்திருக்கலாம். அதனால் யோவானின் ஞானஸ்நானத்தை பெற்றிருக்கலாம் (மத்தேயு 3:1-6). ஒரு தேவனுடைய பிள்ளை வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் பாவம் செய்கிறார்கள் (I பேதுரு 4:15). இக்கள்ளன் யோவானின் சீஷனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவன் மனந்திரும்புதலை வெளிப்படுத்தினான். அது எப்போதுமே இரட்சிப்புக்கானக்கான நிபந்தனையாயிருக்கிறது (ஏசாயா 55: 7; சங்கீதம் 34:8). எசேக் 18:21.

மூன்றாவது, இங்கே இயேசு கிறிஸ்துவின் பாரபட்சமற்ற நிலையை கருத்தில் கொள்ள வேண்டும். ஜனங்கள் இச்சம்பவத்தை எடுத்துக் கொண்டு இயேசு கிறிஸ்துவால் யாரை வேண்டுமானாலும் அவர் விரும்புகிறபடி தன்னிச்சையாக மன்னிக்க முடியும் ஏனென்றால் அவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறார் என்று சொல்கிறார்கள்.

இப்படிப்பட்ட எண்ணத்தில் உண்மை எதுவுமில்லை. இது கால்வின் கொள்கைக்கு துணைபோகிறது. இயேசு கிறிஸ்துவால் தன்னிச்சையாக செயல்பட முடியாது பிதாவின் சித்தத்தின்படி தான் செய்ய முடியும். யோவான் 5:19; 7:16; 8:28; 12:49. அப்படியிருக்கும் போது, இயேசு கிறிஸ்து தன்னிச்சையாக தன் விருப்பத்தின்படி அக்கள்வனை மன்னித்திருந்தால் அவரை அது பட்சபாதமுள்ளவராக்கியிருக்கும் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல (அப்போஸ்தலர் 10:34).

# வேதாகம கேள்விகள்
# அவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக எதை அறிந்து கொள்ள வேண்டும்?
# what do they need to know before they are Baptized?

**Wes MC Adams**

**பெ**ரும்பாலும் நாம் ஜனங்களுக்கு சரியாக போதிக்காமலேயே ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக எதை அறிந்து கொள்ள வேண்டுமென்பதை தீர்மானிப்பது கடினமான ஒன்றாகும். ஞானஸ்நானம் என்பது தொடக்கப்புள்ளியாக இருக்கிறபடியால் ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் கிறிஸ்தவ இறையியலைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும், கிறிஸ்தவ நடைமுறை காரியங்களைக் குறித்தும் அடிப்படை அறிவைப் பெற்றிருப்பது சாலச் சிறந்ததாகும். அடிப்படைப் புரிந்து கொள்ளுதல் என்பதன் உண்மையான பொருள் என்ன? ஜனங்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக முழுமையாக எதை அறிந்துகொள்ள வேண்டும்? இக்கேள்விக்கு விரிவான பதிலை என்னால் அளிக்க முடியாது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும் ஆனாலும், இக்கேள்வியைக் குறித்து நீங்கள் ஆழமாக சிந்தித்துக் கொண்டிருக்கும்போது கீழ்க்கண்டவாறு நான் சொல்லும் காரியங்கள் ஓரளவு உதவும் என்று நினைக்கிறேன்.

## ஆட்சேபணையை எதிர்பார்த்தல்

முதலாவது, யாரோ ஒருவர் பெந்தேகொஸ்தே நாளிலே ஞானஸ் நானம் பெற்ற ஜனங்கள் இன்னும் அந்த எத்தியோப்பிய மந்திரி அல்லது கொர்நேலியு போன்றோர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக இவர்களுக்கு அதிகமாகப் போதிக்கவில்லையே என்று கேள்வியை எழுப்புவர். இக்கேள்வி மிகப் பொருத்தமான கேள்விதான். ஆகவே, இக்கேள்வி கேட்கப்படுமென்று எண்ணி இக்கேள்விக்கான பதிலை முன்பாகத் தருகிறேன்.

இதற்கான பதில் மிக எளிதானது. முதல் நூற்றாண்டு யூதர்கள் தேவனுக்குப் பயந்தவர்கள் யூதர்களாக யூதமார்க்கத்தமைந்தவர்களும் தேவனைப் பற்றியும், பாவத்தைப் பற்றியும், வரவிருந்த மேசியாவைப் பற்றியும் அவருடைய ராஜ்யத்தைப் பற்றியும் மிகவும் அறிவுள்ளவர் களாயிருந்தார்கள். உண்மையில் பெந்தேகொஸ்தே நாளில் கூடியிருந்த யூதர்கள் இன்றைய முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களை விட வேதாகமத்தின் தேவனைப்பற்றி அதிக அறிவுள்ளவர்களா யிருந்திருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 2).

அப்போஸ்தலனாகிய பேதுரு தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே நடந்தேறுகிறது என்று சொல்லி தாங்கள் அந்நிய பாஷையில் பேசினதற்கான காரணங்களை அறிவித்தபோது அவர் சொன்ன காரியங்கள் ஜனங்களுக்கு புரிந்திருக்கிறது. அந்த ஜனங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொலை செய்தபடியால் தங்கள் மீது மிகப்பெரிய நியாயத் தீர்ப்பு வரப்போகிறது என்பதை ஜனங்கள் புரிந்து கொண்டார்கள். மேலும், மாறுபாடுள்ள அந்த சந்ததியித்திலிருந்து தங்களை இரட்சித்துக் கொள்வதன் அவசியத்தைப் புரிந்து கொண்டார்கள் (அப்போஸ்தலர் 2:40) அதனால்தான் சகோதரரே **நாங்கள் என்னச் செய்ய வேண்டுமென்று** கேட்டார்கள் (அப்போஸ்தலர் 2:37). எனவேதான், பேதுரு நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று பிரசங்கித்தபோது ஏறக்குறைய மூவாயிரம்பேர் அதற்கு பதிலளித்தார்கள் (அப்போஸ்தலர் 2:38).

இந்த இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் வாழும் ஒரு சாதாரண நபருக்கு போதிப்பதற்கும் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு யூதருக்கு போதிப்பதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இதன் பொருள் ஒருவரை ஞானஸ்நானப்படுத்த அவருக்கு சத்தியத்தை ஆழமாகப் போதிக்க வருடக் கணக்காக எடுக்க வேண்டுமென்று அவசியமில்லை ஆனால், தண்ணீருக்குள் மூழ்வதற்கு முன்பாக ஞானஸ்நானத்தைப் பற்றி சில அடிப்படை காரியங்களைப் பற்றி புரிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது.

## அவர்கள் இயேசுவைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும்

முதலும், முதன்மையுமாக ஒருவர் தனக்கு இயேசுவின் மீது இருக்கும் அன்பின் காரணமாக ஞானஸ்நானம் பெறத் தூண்டப்பட வேண்டும். இயேசு சிலுவையில் ஒரு பாவிக்காக என்ன செய்தாரோ அதற்கு நன்றி செலுத்தும் விதமாக ஞானஸ்நானம் பெற வேண்டும். ஒருவர் தான் பரலோகம் போவதற்காக ஞானஸ்நானம் பெற வேண்டும் என்கிற புரிதல் இருந்தால் இயேசு யார்? அவர் இவருக்காக என்னச் செய்தார் என்பதைப்பற்றி புரிதல் இல்லாதவராயிருக்கிறார். அப்படியென்றால், இந்த நபர் ஞானஸ்நானம் பெறுவதற்கு தேவையான காரியங்களைப் பெறவில்லை என்றுதான் பொருள்.



எத்தியோப்பிய மந்திரி தேவனைத் தொழுது கொள்ளும்படி எருசலேமுக்கு வந்தார் [அப்போஸ்தலர் 8:27]. இந்த மந்திரி பலிகளைப் பற்றி அறிந்திருந்தார். இவர் வரவிருக்கும் மேசியாவைப் பற்றிய அறிவு உடையவராக இருந்தார். அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து எத்தியோப்பிய மந்திரிக்குப் பிரசங்கித்தான். [அப்போஸ்தலர் 8:35]. பிலிப்பு மந்திரியிடம் மேசியா வந்து விட்டதாகவும் பாவத்திற்கான கடைசி பலியாகவும் இருக்கிறார் என்றும் சொன்னார்.

ஞானஸ்நானம் பெறும் ஜனங்கள் இயேசுவைப்பற்றிய நற்செய்தியை கேட்க வேண்டும். அவர்கள் இயேசு தாவீதின் வம்சத்தைச் சார்ந்தவர் என்பதை அநேகமாக புரிந்து கொள்ள வேண்டும். இயேசுவின் தெய்வீகத்தன்மை, மானிட அவதாரம், தியாகப்பூர்வமான மரணம், உயிர்த்தெழுதல், பிதாவின் வலது பாரிசத்தில் இருந்து கொண்டு ஆளுகை செய்தல் போன்றவற்றை அறிந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட மேலாக அவருடைய அன்பைப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும், ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் இயேசுவின் இரத்தம், மீட்பு, ஒப்புரவாக்குதல், மன்னிப்பு மற்றும் பரிசுத்தமாக்குதலைக் கொண்டு வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுக்கேற்ற துக்கம் ஒருவரிடத்தில் மனந்திரும்புதலை உண்டாக்கும் போது [II கொரி 7:10] ஞானஸ்நானமானது நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து நம்மை இரட்சிக்கிறது [I பேதுரு 3:21].

ஞானஸ்நானம் என்பது விசுவாசத்தில் ஒருவர் தேவனிடம் இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள இரத்தத்தின் மூலமாக தன் பாவங்களை நீங்கக் கெஞ்சுவதாகும் [அப்போஸ்தலர் 2:38, 22:16; ரோமர் 6]. ஜனங்கள் தாங்கள் இழந்துபோன நிலையை அறிந்துகொள்ளும்வரை அவர்கள் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாகவில்லை.

## ஜனங்கள் தங்கள் பொறுப்புகளை உணர வேண்டும்

கடைசியாக ஜனங்கள் எதற்குள்ளாக இறங்குகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து முதலில் ஒருவர் செல்லுஞ் செலவை கணக்குப் பார்க்க வேண்டும் [லூக்கா 14:25–33] அதற்குப் பிறகுதான் சீஷராக வேண்டும் என்று சொன்னார். ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது. இயேசுவின் சீஷர்களாக எவைகளையெல்லாம் விட வேண்டுமென்று அவர்களுக்கு சொல்லப்பட வேண்டும்.

ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் தாங்கள் பாவத்திற்கு மரிப்பதை புரிந்து கொள்வது மட்டுமல்லாமல் [ரோமர் 6:1–7] சபையைப்பற்றி ஓரளவாவது புரிந்திருக்க வேண்டும். [அப்போஸ்தலர் 8:12] இவ்விதமாகச் சொல்கிறது. **தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.** நாம் ராஜ்யத்தைக் குறித்தும், ராஜ்யத்தின் பிரஜைகளாக இருப்பதினால் நமக்கிருக்கும் கடமைகளைக் குறித்தும் ஜனங்களுக்கு போதிக்க வேண்டும்.

ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாக மனமாற்றவடைவதற்கான காரணங்களுள் ஒன்று அவருடயை வேலையை செய்வதற்காக தேர்வு செய்யப்படுவதாகும். அது என்னவென்று அவர்கள் அறிந்துகொள்ளும் வரை கிறிஸ்தவ வாழ்க்கை முறைக்கு தங்களை அர்ப்பணிக்க அவர்கள் ஆயத்தமாகவில்லை.

இவைகளெல்லாம் மிக ஆழமான பாடங்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், இவைகளெல்லாம் சுவிசேஷத்தின் அவசியமான அங்கங்களாக இருக்கின்றன. மேலும், நீங்கள் நினைப்பதுபோல இவைகள் சிக்கலானவைகள் அல்ல, ஒவ்வொரு கருத்தையும் சிறு பிள்ளைகூட புரிந்து கொள்ளும் அளவுக்கு விளக்க முடியும்.

பல வேளைகளில் நாம் ஜனங்களை தண்ணீருக்குள் மூழ்கடிப்பதற்கு அவசரப்படுகிறோமோ என்று நான் பயப்படுகிறேன். அவர்கள் ஞானஸ்நானம் பெறுவது பல வேளைகளில் கிறிஸ்துவின் மரணத்திற்கான பதிலாயிராமல் நம்முடைய மன்றாட்டுக்குப் பதிலாயிருக்கிறது. ஜனங்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக இயேசுவைப் பற்றி அதிகமாக அறிய வேண்டும்.

## ஜனங்கள் தங்கள் இழந்துபோன நிலையை அறிந்து கொள்ள வேண்டும்

ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக தான் தேவனுக்கு முன்பாக குற்றவாளியாக நிற்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஒருவர் கண்டிப்பாக இதை அறிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், தேவனுக்கு விரோதமாக கலகம் செய்த பாவம் நிறைந்த மனித இனத்தில் இருக்கத் தெரிந்து கொண்டபடியால் இவர் அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்துப் போயிருக்கிறார் (எபேசியர் 2:1). இந்த நபர் தான் தேவனை கோபப்படுத்தியதை அறிந்து கொள்ள வேண்டும். அதன் காரணமாக எல்லோரையும்போல் தண்டிக்கப்பட வேண்டும் (எபேசியர் 2:3).

இந்த நபர் தன்னுடைய பாவங்களை நிவர்த்திசெய்ய தன்னால் எதையும் செய்ய முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்த நபர் தான் செய்த பாவங்களுக்காக சில நன்மையான காரியங்களைச் செய்து ஈடுகட்ட முடியாது. இவருடைய ஒரே நம்பிக்கை தேவன் இவர் மீது இரக்கம் பாராட்டி, கிருபையை பொழிவதுதான். அது நடப்பதற்கான ஒரே வழி இயேசு கிறிஸ்துதான்.

நான் எந்த தவறும் செய்யாத நல்லொழுக்கமுள்ளவர், தேவன் என்னை மோசமானவனாக அல்லது தீமை செய்பவராகப் பார்ப்பவர் என்று நான் நினைக்கவிலலை என்று சொல்பவருக்கு ஞானஸ்நானம் அர்த்தமற்றதாகும்.

### முக்கியமான காரியம்

ஜனங்கள் ஞானஸ்நானம் பெறுவதைக் குறித்து இன்னும் அதிகமாக பேசியிருக்க முடியும். ஆனால், அதே நேரத்தில் ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே வேத வித்தகராக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. இங்கே மிக முக்கியமான கருத்து என்னவென்றால், ஞானஸ்நானம் பெறும்படியான தீர்மானம் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டோ அல்லது ஊழிய அழுத்தத்தின் காரணமாகவோ அமையக்கூடாது. ஒருவர் ஞானஸ்நானம் பெறும்படியான தீர்மானம் ஒருவர் இயேசுவின் சீஷராயிருப்பதின் பொருள் என்ன? என்பதை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் (மத்தேயு 28:18-20).

**ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக தான் தேவனுக்கு முன்பாக குற்றவாளியாக நிற்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஒருவர் கண்டிப்பாக இதை அறிந்து கொள்ள வேண்டும். மேலும், ஒருவர் தான் தேவனை கோபப்படுத்தியதை அறிந்து கொள்ள வேண்டும்.**

# வேதாகம கதாபாத்திரங்கள்
# எப்பாப்பிராவின் மாதிரி
# The Example of Epaphras

**Wes MC Adams**

எப்பாப்பிரா கொலேசே அல்லது லவோதிக்கேயா பட்டணங்களைச் சுற்றியுள்ள **lycus** நதி பள்ளத்தாக்கின் தெற்கு கரையில் ஏதோ ஒரு இடத்தில் வசித்தது போல் தெரிகிறது. இப்பகுதிக்கு அருகில் கர்த்தருடைய சபையாக கூடி வந்த மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். உண்மையில் இப்பகுதி பழங்கால ஆசியாவின் வேதாகமப் பகுதி என்றழைக்கப்பட்டிருக்கலாம்.

அப்போஸ்தலனாகிய பவுல் பேதுரு போன்றோர் எழுதிய கிறிஸ்துவின் உபதேசத்தை புதிய ஏற்பாடு தொகுக்கப்பட தேவன் வழிகாட்டியபடியால் தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகள் மிக வேகமாக பரவத் தொடங்கியது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட நிருபங்கள் (கடிதங்கள்) ஆசிய மைனரிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் பாலஸ்தீனம், எகிப்து மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளில் கூடிவந்த அநேக சபைகளில் பகிரப்பட்டது. இந்த நிருபங்களில் எண்ணற்ற கட்டளைகள், புதிய வெளிப்பாடுகள் ஆராதனையில் நடந்துகொள்ளும் விதத்தைப் பற்றிய மாதிரிகள், இன்னும் சில உதாரணங்கள் மற்றும் மற்றவர்களுடைய வரலாற்றுச் சம்பவங் களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நடைமுறை பாடங்கள் போன்றவைகள் இடம் பெற்றிருக்கின்றன. கடிந்து கொள்ளுதல், சீர் திருத்தல், புத்திமதி சொல்லுதல் போன்றவைகள் இதுபோன்று பல்வேறுபட்ட விதங்களில் செய்யப்பட்டன.

இங்கே ஒரு மனிதனைப்பற்றி பேச ஆவியானவர் அப்போஸ் தலனாகிய பவுலை ஏவியிருக்கிறார். அந்த மனிதன் பெரும்பாலானவர் களால் அறியப்படாதவராகத்தான் இருக்கிறார். அவர் பெயர் எப்பாப்பிரா. இவரை பலர் பிலிப்பியர் நிருபத்தில் அப்போஸ்தலனாகிய பவுலால் மெச்சப்பட்ட எப்பாப்பிரோதீத்து என்று தவறாக நினைத்து விடுகிறார்கள். இந்த எப்பாப்பிரா பல காரணங்களுக்காக மற்றவர்கள் இவனைப் பற்றிப் பேச பாத்திரனாயிருக்கிறான்.

**எப்பாப்பிரா தன் சகோதரர்களுக்காக ஜெபங்களில் போராடி இருக்கிறார்.**

மெச்சும் விதமாக அப்போஸ்தலனாகிய பவுல் இந்த எப்பாபிராவைப் பற்றி இவ்விதமாக எழுதுகிறார். எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான். உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன் நீங்கள் தேவனுக்கு சித்தமான வைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சய முள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான் (கொலோசெயர் 4:12). இங்கே பவுல் எப்பாப்பிரா சகோதரர்களுக்காக ஜெபித்ததை போராடி னதாக குறிப்பிடுகிறார்.

எத்தனை கிறிஸ்தவர்கள் தங்கள் தனிப்பட்ட ஜெபங்களில் சபை விசுவாசிகளைக் குறிப்பிடுவது மட்டுமல்லாமல் அவர்களுக்காக கிருபாசனத்திற்கு முன்பாக மன்றாடி போராடி ஜெபித்து வருகிறார்கள். இங்கே எப்பாப்பிரா விசுவாசிகளுக்கு தேவன் எதைக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்? கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டுமென்று விரும்புகிறார்? அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்களா, வளருகிறவர்களாக இருக்கிறார்களா? என்று எப்பாப்பிரா அக்கறை உடையவராக இருந்திருக்கிறார் (II பேதுரு 3:18). ஒரு கிறிஸ்தவ சகோதரனோ அல்லது சகோதரியோ சக கிறிஸ்தவர்களுடைய பட்டியலைத் தயாரித்து அவர்களுடைய பெயர் களை தேவனுக்கு முன்பாக கொண்டுபோய் அவர்களுக்காக உண்மை யாக ஜெபிப்பதும், அவர்களுக்காகப் பரிந்து பேசுவதும் மெய்சிலிர்க்க வைக்கிறது. இதனால்தான் யாக்கோபு ஆசிரியர் நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்று சொன்னாரோ என்று தெரியவில்லை (யாக்கோபு 5:16) எப்பாப்பிரா சகோதர சகோதரிகள் மீது அதீத ஆசை உடையவனாக இருந்திருக்கிறான்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் இந்த எப்பாப்பிராவைப் பற்றி மேலும் சில தகவல்களை பதிவு செய்திருக்கிறார். இவன் உங்களுக்காவும், லவோதிக்கேயருக் காகவும், எராப்போலிருக்காகவும் மிகுந்த ஜாக்கிரதையுள்ள

வனாயிருக்கிறானென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன் (கொலோ 4:13). எப்பாப்பிராவின் இருதயம் தேவனுடைய பிள்ளைகளோடு இருந்திருக்கிறது. இவர் சகோதரத்துவத்தை விரும்பிய ஒரு கிறிஸ்தவராக இருந்திருக்கிறார் (எபிரெயர் 13:1). இங்கே (கொலோசெயர் 4:13)ல் ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறான் என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற வார்த்தைக்கு மூல பாஷையில் உற்சாகமும் வைராக்கியமும் நிறைந்த என்றிருக்கிறது. அதாவது, ஒன்றின் மீது ஒருவருக்கு இருக்கும் அதீத உற்சாகத்தை இது குறிக்கிறது. இங்கே எப்பாப்பிரா தன் ஆவிக்குரிய சகோதர சகோதரிகளோடு கொண்ட உற்சாக மனநிலை வைராக்கியமாக மாறியது.

நடைமுறையில் நாம் பார்க்கும்போது ஒரு சகோதரன் மற்றொரு சகோதரன் மீது இப்படிப்பட்ட உற்சாக மனநிலையோ அல்லது வைராக்கியமோ கொண்டிருந்தால் அவர் என்ன செய்வார்? ஒரு சகோதரன் தவறு செய்தால் மற்றொரு சகோதரன் அவரை தேடிப்போக மாட்டாரா (யாக்கோபு 5:19,20)? ஒரு சக கிறிஸ்தவன் தனியாக இருக்கும் போதோ அல்லது உற்சாகம் இழந்திருக்கும் போதோ மற்றொரு சகோதரன் அவனை தூக்கிவிட்டு உற்சாகப்படுத்த மாட்டாரா (எபிரெயர் 12:1213)? அதேபோல் ஒரு கிறிஸ்தவன் உலகமே தன்னை விமர்சித்தாலும் தனக்கு எதிராக நின்றாலும் சத்தியத்திற்காக நிற்கும்போது மற்றொரு கிறிஸ்தவன் சத்தியத்திற்காக நிற்கும் கிறிஸ்தவனுக்காக நின்று தைரியமாக அவனைப் பாராட்டமாட்டாரா? (கொலோசெயர் 1:7, 12–13). வெளிப்படையாகவே இந்த எப்பாப்பிரா கிறிஸ்துவின் திராட்சைத் தோட்டத்தில் கனிதரும் கொடியாக இருக்கிறார். எப்பாப்பிராவின் ஜெப வாழ்க்கையையும், அன்பையும் ஊழியத்தையும் பின்பற்ற விரும்புபவர்கள் வேதாகம ஒற்றுமையையும் (யோவான் 17:2021) சகோதர சிநேகத்தையும் மேம்படுத்த முயற்சி எடுப்பார்கள் (யோவான் 13:35) இவைகளெல்லாம் நம் இரட்கரால் அதிகமாக வலியுறுத்தப்பட்டன.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 12 ஆம் அதிகாரத்தில் ஏரோது என்னும் பேர்கொண்ட ராஜா, ராஜவஸ்திரம் தரித்துக் கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து அவர்களுக்கு பிரசங்கம் பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷ சத்தமல்ல, இது தேவ சத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுப்புழுத்து இறந்தான். ஆனால், அப்போஸ்தலர் 14 ஆம் அதிகாரத்தில் லீஸ்திரா பட்டணத்து மக்கள் பவுலையும், பர்னபாவையும் தேவர்களாக வணங்கத் தொடங்கினார்கள். ஆனால்,

அந்த தேவதாசர்கள் அதைக்கேட்ட பொழுது, தங்கள் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு நாங்களும் உங்களைப் போலப் பாடுள்ள மனுஷர் தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்கு பிரசங்கிக்கிறோம். [வசனம் 15] ஆராதனைக்குப் பாத்திரர் தேவன் ஒருவரே. எல்லா மனிதர்களும் சமமாகத்தான் படைக்கப் பட்டிருக்கிறார்கள்.

எப்பாப்பிரா கிறிஸ்துவுக்குள்ளிருந்த தன் சகோதரர்களுக்கு உண்மையாக இருந்தார். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயர் 1:7ல் அதை எங்களுக்குப் பிரியமான உடன்வேலையாளும் உங்களுக்காக கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனு மாயிருக் கிற எப்பாப்பிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள் என்று எழுதுகிறார். lipscomb எனும் வேத அறிஞர் எப்பாப்பிராதான் கொலேச பட்டணத்து சபையை ஸ்தாபித்திருக்க வேண்டுமென்று சொல்கிறார். இந்த எப்பாப்பிராத்தான் சபை கூடும்படி தன் வீட்டு கதவை திறந்து விட்டிருக்க வேண்டும்.

இந்த எப்பாப்பிரா எந்த சந்தேகமுமின்றி கர்த்தருடைய சபையை நேசித்து, அதற்காகத் தன்னை எப்பொழுதும் ஆயத்தமாக வைத்திருக் கிறார். இவர் ஓர் உடன் ஊழியர் எனும் நிலையில் சகோதரிகளுக்கு சேவை செய்திருக்கிறார். இந்த எப்பாப்பிரா உண்மையுள்ளவரா யிருந்து தன் உறுதிப்பாட்டினால் சபையை சீராக நடத்தினார். எப்பாப் பிரா கிறிஸ்துவுக்குள் இருந்தபடியால் கிறிஸ்து தனக்கு எவ்வளவு முக்கியமானவர் என்பதை கர்த்தருடைய ஜனங்களுக்கு காட்டினார்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சேவை செய்வதின் முக்கியத்துவத்தையும் [மத்தேயு 23:11] உண்மையாயிருப்பதின் முக்கியத்துவத்தையும் போதித்தார் [மத்தேயு 24:25]. மற்றவர்களுக்கு சேவை செய்கிற காரியத்தில் கிறிஸ்துவுக்கு உண்மையாயிருப்பது வெளிப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாயிருக்கிறது. [யோவான்13:12-17]. கிறிஸ்துவுக்குள் ஏற்படும் முதிர்ச்சி ஒருவரை அப்படிப்பட்ட தீர்மானத்தை எடுக்க வழி வகுக்கும். அன்பு பூரணப்படும்போது, தேவனுடைய பிள்ளை தான் கூடிவரும் சபைக்குள் மற்றவர்களுடைய ஆவிக்குரிய ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்த கடுமையாகப் பாடுபடுகிறார். இந்த எப்பாப்பிரா கர்த்தர் தயையுள்ளவரென்பதை ருசிபார்த்திருக்க வேண்டும். [I பேதுரு 2:3].

எப்பாப்பிராவின் ஜெபங்களிலும், இருதயங்களிலும் சகோதரர்கள் இருந்தார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் எப்பாப்பிராவை தனிப்பட்ட நபர்களிடமும் [பிலேமோன் 23] சபையினிடத்திலும் புகழ்ந்து பேசியிருக்கிறார். ✝

### வேதாகம கதாபாத்திரங்கள்

# சாத்தானின் மிகப்பெரிய பொய்

# satan's grand lie

*GARY .C.HARPTON*

**ந**ம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிசாசை ஆதிமுதற் கொண்டு கொலை பாதகனென்றும்; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் என்றும் அழைத்தார் [யோவான் 8:44]. அவர் ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள ஒரு சம்பவத்தை குறிப்பிடுகிறார், அச்சம்பவத்தில் சாத்தான் ஸ்தீரியை வஞ்சிக்கிறான். இந்த சோக சம்பவத்தில் சில முக்கியமான பாடங்கள் இருக்கின்றன.

சாத்தான் வாய்ப்புக்குப் பதிலாக தடையின் மீது கவனம் செலுத்தினான் [ஆதியாகமம் 3:1] சாத்தான் ஏதேன் தோட்டத்தில் ஏவாள் புசிக்கக் கூடாதென்று தடைசெய்யப்பட்டிருந்த கனிமீது அவள் கவனத்தைத் திருப்பும்படி அவளைத் தந்திரமாக ஏமாற்றினான். இன்றைய நாட்களில் பலர் தங்களிடம் எது இல்லையோ அதைக் குறித்து அதிகமாக முறையிடுவதை நாம் பார்க்கிறோம். மாறாக, நாம் நன்றி செலுத்துவதில் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் [I தெசலோனிக்கேயர் 5:18] தேவன் நமக்கு மிகப்பெரிய ஈவான இயேசு கிறிஸ்துவையே தந்திருக்கிறாரே [I கொரிந்தியர் 9:15 ;ரோமர் 8:32].

சாத்தான் மரண சாபத்தின் உண்மையை மறுத்தான் [ஆதியாகமம் 3:4]. பொய்க்கெல்லாம் பிதாவாகிய சாத்தான், பிதாவாகிய தேவனை பொய்யர் என்று அழைத்தான் [ஆதியாகமம் 2:17]. இயேசு கிறிஸ்து சொன்ன மதிகேடான ஐசுவரியவானுடைய உவமையைப்போல் பலர் மரணம் என்று ஒன்று இல்லாதது போல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். [லூக்கா 12:6-21]: மருத்துவ துறையில் மாபெரும் மாற்றங்கள், முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் கூட எல்லாரும் மரணத்தை ஒரு நாள் சந்தித்தே ஆக வேண்டும் என்பதை எல்லாரும் உணர்ந்து கொள்ள வேண்டும். [எபிரெயர் 9:37]. சாத்தான், தேவன் அன்புள்ளவர், தயவுள்ளவர் என்பதை மறுத்தான்.

சாத்தான் மனித இனம் பெற வேண்டிய நன்மைகளை தேவன் தடுக்கிறார். அவர் அன்பில்லாதவர் என்று தேவனை குறைகூறினான் [ஆதியாகமம் 3:5]. தேவன் நல்லவர் என்பதையும் எல்லா நன்மையான ஈவுகளுக்கும் தேவனே ஆதாரமாயிருக்கிறார். [சங்கீதம் 136:11, யாக்கோபு 1:17] தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரீடமாக அவர் மனுஷியை ஆதாமின் விலா எலும்பிலிருந்து உண்டாக்கினபோதும்

அவர் ஸ்தீரீகளுக்கு எதிரானவர் என்று சிலர் அவரை குற்றஞ்சாட்டு கிறார்கள். குணசாலியான ஸ்திரீ மெச்சப்படுகிறார், புருஷர்கள் அல்லது கணவன்மார்கள் மனைவிகளிடத்தில் அன்புகூரும்படியாக தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் (நீதிமொழிகள் 31:10; எபேசியர் 5:25-28).

சாத்தான் மனிதனால் தன் சொந்த சட்டங்களை இயற்றிக்கொள்ள முடியும் என்று சொன்னான்.

சாத்தான் ஏவாளைப் பார்த்து நீங்கள் தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்று சொன்னான் (ஆதியாகமம் 3:15). சிலர் நம்மிடம் நம் இரட்சிப்பின் பாதையை நாமே வகுத்துக் கொள்ளலாம் என்று நம்மை நம்பச் செய்வார்கள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் பிதாவின் சித்தத்தின்படி செய்ய வேண்டும் என்று சொன்னார் (மத் 7:21) அப்போஸ்தலனாகிய பவுல் அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளை யிடுக்கிறார் (அப் 17:30) புதிய ஜீவனுக்கான வழி கிறிஸ்து வுடனே ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட்டு புதிதான ஜீவனுள்ளவர் களாய் நடந்துகொள்ளும்படிக்கு தண்ணீரிலிருந்து எழுந்திருத்த லாகும். (ரோமர் 6:3-4).

சாத்தானுடைய பொய்களை கண்டு கொள்ள வேண்டாம். அனுதினமும் தேவனுடைய சித்தத்தின்படி வாழுங்கள் அது தான் பரலோகம் போவதற்கான பாதை என்பதை அறிந்து கொள்ளுங்கள். ✝

---

## சபையின் சிறப்பம்சங்கள்

- சபை தெய்வீக ஆரம்பத்தைக்கொண்டது, அது என்றென்றும் அழியாது (தானியேல் 2:44)

- சபை உலகளாவியது இதற்கு தேசிய அல்லது சர்வதேச எல்லை இல்லை (மாற்கு 16:15; மத்தேயு 28:18-20).

- சபையில் சகல அதிகாரமும் கிறிஸ்துவுக்குத்தான் இருக்கிறது (மத்தேயு 28:18); எல்லோரும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.

# சாத்தானால் செய்ய முடியாத 25 காரியங்கள்

*TIM . CHILDS.*

தேவன் இல்லாமல் போகவேண்டுமென்று விரும்ப முடியாது .

தேவனுடைய அன்பின் வல்லமையை குறைக்க முடியாது.

தேவனுடைய அன்பிலிருந்தும், அவருடைய சமூகத்திலிருந்தும் நம்மை வேறு இடத்திற்கு மாற்ற முடியாது.

தேவன் தம்முடையவர்களை அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவரை குழப்ப முடியாது.

தீமை செய்யும்படி தேவனை சோதிக்க முடியாது.

தேவனுடைய குணாதிசயத்தை மாற்ற முடியாது.

தேவனை பொய் சொல்ல வைக்க முடியாது.

தேவனை மேற்கொள்ள முடியாது.

ராஜ்யத்தின் விதையை அழிக்க முடியாது.

உண்மையை பொய்யாக்க முடியாது.

தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை தோற்கடிக்க முடியாது.

பிசாசுக்கடுத்த உபதேசங்களை தழுவினவர்களோடு ஐக்கியம் கொள்ள தேவனை பலவந்தப்படுத்த முடியாது.

தேவனுடைய கிருபை, இரக்கம், அன்பு மற்றும் நீடிய பொறுமையை கொள்ளையிட முடியாது.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் வல்லமையை பலவீனப்படுத்த முடியாது.

தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ய என்னை வற்புறுத்த முடியாது.

சோதனைகள் வரும்போது என் பயன்பாட்டிற்காக தேவன் ஆயத்தம் பண்ணியிருக்கிற பாதையை தடுக்க முடியாது.

சாத்தானால் தாங்க முடியாத அளவுக்கும், எதிர்க்க முடியாத அளவுக்கும் என்னை சோதிக்கமுடியாது.

தேவனுடைய அக்கறையிலிருந்தும், இரட்சிக்கும் கிருபை யிலிருந்தும் என்னை வலுக்கட்டயமாக அகற்ற முடியாது.

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உலகளாவிய சபையை ஓய்ந்து போகச் செய்ய முடியாது.

இயேசு கிறிஸ்துவின் வருகையை தடுக்க முடியாது.

கிறிஸ்துவின் கட்டளையின்படி மரித்தோர் உயிர்த்தெழுவதை தடுக்க முடியாது.

எல்லா மனுஷரும் எந்த தேவனுடய வார்த்தையின் அளவு கோலின்படி நியாயந்தீர்க்கப்படுவார்களோ அந்த அளவு கோலை மாற்ற முடியாது.

பரலோகப் பட்டணத்துக்கு தேவனுடைய உண்மையுள்ள பிள்ளைகள் செல்வதை தடுக்க முடியாது.

தேவனுடைய கோபாக்கினைடமிருந்தும், தண்டனையிலிருந்தும் தன் துாதர்களையும், தன்னைப் பின்பற்றுபவர்களையும் பாதுகாக்க முடியாது.

தேவன் சாத்தானுக்காக ஒதுக்கி வைத்திருக்கிற இடத்தை அவனால் மாற்ற முடியது. ✝

## முக்கியமான வசனங்கள் மீதான துரிதமான வர்ணனை (பிலிப்பியர் 3:20-21; லூக்கா 24:39-43)

**ந**ம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராகியிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலிப்பியர் 3:20,21).

### உயிர்த்தெழுதலில் நம் சரீரங்கள் எப்படி இருக்கும்?

மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற வசனத்தின்படி, நம் சரீரங்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவருடையதைப் போலிருக்கும். வேத வாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற காரியங்களை அலசி ஆராய்ந்து பார்த்தால், நாம் கற்றுக் கொள்ளும் உண்மைகள் என்ன ?

சாட்சிகளால் காணப்பட்ட சரீரம் உண்மையாகவே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சரீரம் தான், அழியாநிலைக்கு மாற்றப்பட்ட சரீரந்தான்: நான் தான் என்று அறியும்படி, என் கைகளையும், கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப் பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி, தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆனாலும், சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில்; புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார் அப்பொழுது பொரித்த மீன் கண்டத்தையும், தேன்கூட்டுத் துணிக்கையையும் அவருக்கு கொடுத்தார்கள் அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்தார் (லூக்கா 24:39-43). ஆதியாகமம் 18 ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமிடத்தில் வந்த மூன்று புருஷர்கள் அவர்களுக்காக

ஆயத்தமாக்கப்பட்டிடிருந்த ஆகாரத்தை எப்படி புசித்தார்கள்? ஆனால் இதன் பொருள் புதிய பூமியில் ஆகாரம் அவசியப்படும் என்பதல்ல, அழிவில்லாத சரீரத்தால் அவசியப்படும்போது பூமிக்குரிய காரியங்களிலும் ஈடுபட முடியும் என்பதைக் காட்டுகிறது. இருந்த போதிலும், அழிவில்லா சரீரம் அழிவுள்ள சரீரத்திலிருந்து வித்தியாசப்படுகிறது: இவைகளைக் குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். மாற்றமடைந்த சரீரத்தில் இயேசுவால் தோன்றவும், மறையவும் முடிந்திருக்கிறது.

உயிர்த்தெழுந்த மனிதர்களால் அல்ல, தேவதூதர்களால் எந்த நோக்கத்திற்காக பணிக்கப்பட்டார்களோ தங்கள் சரீரங்களிலேயே வசித்து நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல் அழிவில்லா சரீரத்திற்கு மாற்றப்படுவோம்.

---

## நான் ஆராதிக்கத்தவறினால்

- அது என் விசுவாசதத்தின் உண்மைதன்மையை சிலர் கேள்விகேம்கும்படி செய்யும் [யாக்கோபு 2:17].

- அது நான் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாததைக் குறித்து ஒரு மோசமான முன்னுதாரணத்தை வெளிப்படுத்தும் [எபிரெயர் 10:25,26]

- அது நான் சபையாரோடு ஐக்கியம் கொள்வதை விட உலகத்தோடு ஐக்கியம் கொள்வதில் மகிழ்ச்சியாயிருக்கிறேன் என்பதைக் காட்டும் [மத்தேயு 18:20].

- அது நான் என் பிள்ளைகளுக்கு முன்பாகவும், மற்றவர்களுக்கு முன்பாகவும் தவறான மாதிரியை முன்வைக்கக் காரணமாகிறது.

# பாவத்தின் வேர்

# The Root Of Sin

**Bonnie Rushmore**

எல்லாப் பாவங்களுக்கும் மூல காரணம், வேர் நம் விருப்பங்களையும், ஆசைகளையும் மற்றவர்களுடைய விருப்பங்களுக்கு மேலாக வைப்பதுதான் என்று சொல்ல முடியுமா? பாவம் என்பது ஒரு வேதாகம பாடமாக இருக்கிறபடியால் இக்கேள்விக்கு தேவனால் அங்கீகரிக்கப்பட்ட பதிலைக் காண வேதாகமத்திலிருந்து சில வசனப்பகுதிகளை கவனிப்போம்.

முதலாவது, பாவத்திற்கான விளக்கத்தை பார்ப்போம். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (I யோவான் 3:4). தேவனுடைய பிரமாணங்களில் எல்லாவற்றையும் அல்லது ஏதாவது ஒன்றை செய்யத் தவறும்போது நாம் பாவம் செய்கிறோம். ஒருவரால் தன் சிந்தையில் பாவஞ்செய்ய முடியும் (மத் 5:22,28; I யோவான் 3:15) செயலால் பாவஞ்செய்ய முடியும் (ரோமர் 2:32), வார்த்தைகளால் பாவஞ்செய்ய முடியும் (கொலோசெயர் 3: 8 –9). நம் வாழ்க்கையின் எல்லா பாவங்களும் இந்த மூன்று வகைகளில் அடங்கிவிடுகிறது. எனவேதான் அப்போஸ்தலனாகிய யோவான் நூலில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்திலுண்டானவைகள் என்று எழுதுகிறார் (I யோவான் 2:16). பாவம் என்பது உலகத்தால் உண்டாக்கப்பட்ட ஒன்று. அதை பரமப் பிதாவோடு எவ்விதத்திலும் சம்மந்தபடுத்த முடியாது.

பல புதிய ஏற்பாடு வசனப்பகுதிகள் பாவம் என்றால் என்ன என்பதை பட்டியலிட்டுக் காட்டுகின்றன. இவ்வசனங்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத மனித நடக்கைகளின் வகைகளை சுட்டிக்காட்டுகின்றன (ரோமர் 1:29–32; I கொரிந்தியர் 5:11; கலாத்தியர் 5:19 –21; கலாத்தியர் 5:19–21; தீமோத்தேயு 3:2–4) வெளிபடுத்தின விசேஷம் 21:8).

## ஆராதனை

## ஆராதனைக்கு நீங்கள் என்ன கொண்டு வருகிறீர்கள்?

# What Do You Bring To Worship?

### Patrick Morrison

பழைய ஏற்பாடு எல்லா யூத ஆண்களும் வருஷத்தில் மூன்றுதரம் தேவனை ஆராதிக்கவும் பலிகளைச் செலுத்தவும் எருசலேமில் கூட வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறது. வருஷத்தில் மூன்றுதரம் புளிப்பில்லாத அப்பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப் பண்டிகையிலும், உன் ஆண்மக்கள் எல்லோரும் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள் [உபாகமம் 16:16]. தேவனை ஆராதிக்கும்படி எருசலேமுக்கு பயணிப்பவர்கள் வெறுங் கையோடே போகக் கூடாது என்று கட்டளை கொடுக்கப்படிருந்தது. பழைய ஏற்பாட்டில் பாவ நிவாரண பலி செலுத்த முடியாதவர்களுக்கு அதாவது, ஆட்டுக்குட்டியை பலியாக செலுத்த முடியாதவர்களுக்கு வேறு வழி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது [லேவியராகமம் 5:7–11] செல்வ செழிப்புமிக்க ராஜாவிடமிருந்து பரம ஏழை வரை எல்லோரும் தேவனை ஆராதிக்க வரும்போது எதையாவது கொண்டுவர வேண்டும். இங்கே தேவனை ஆராதிப்பதற்கான அடிப்படை விதி நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது; அதாவது, நாம் தேவனை ஆராதிக்கும்போது வெறுங்கையோடு வரக் கூடாது. எதையாவது கொண்டு வர வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக நாம் அவருக்கு ஆராதனையில் எதையாவது செலுத்தும்போது அந்த பலிகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும்.

நம் தலைமுறையில் ஆராதனைக்கான நோக்கமும் மேன்மையும் தொலைந்து போய்விட்டது. பலருக்கு ஆராதனை நேரம் என்பது ஒரு பொழுதுபோக்கு நேரமாகிவிட்டது. அது மாத்திரமல்ல ஆரதனை பலருக்கு வேடிக்கை பார்க்கும் விளையாட்டாக மாறி விட்டது. கர்த்தரை நேசிக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளும் சிலர் ஆராதனை யில் கர்த்தருக்கென்று ஒன்றையுமே கொண்டுவராமலிருப்பது வெட்கக்கேடான காரியமாகும். இன்னும் சிலர் நம் பரமபிதாவை துதிகள் ஏறெடுக்கப்படும்போது கல்லறையைப்போல் சொல் எதுவும் வெளிப்படாமல் மௌனமாயிருப்பது மிகுந்த வேதனையை அளிக்கிறது வெறுங்கையுடன் ! தேவன் கொடுத்த ஐசுவரியத்தை

அவருக்கு கொடுக்க வேண்டிய நேரத்தில் கொடுக்காமல் அதை இறுகப்பிடித்துக் கொள்கிறார்கள். வெறுங்கையுடன் சிலர் தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படும்போது, வாசிக்கப்படும்போது பேசிக்கொண்டும், குறிப்புகளை பகிர்ந்து கொண்டும், பகல் கனவு கண்டு கொண்டும் இருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது வெறுங்கையுடன்! சிலர் திடீரென வந்து கர்த்தருடைய பந்தியில் மாத்திரம் பங்கெடுத்துவிட்டு, ஆராதனையின் மற்ற பங்குகளில் பங்கெடுக்காமல் போவது எவ்வளவு அருவருப்பானது, வெறுங்கையுடன்! சிலர் வருடத்திற்கு ஒருமுறை ஆராதனையில் கலந்து கொண்டு விட்டு அவர்கள் அதற்காக எடுத்த முயற்சிகளை மற்றவர்கள் கவனிக்க வேண்டுமென்று விரும்புவது எத்தனை கேலிகூத்தானது. சகோதரர்களே! நண்பர்களே! தாவீதின் வார்த்தைகளை கவனியுங்கள் ராஜா அர்வனாவைப் பார்த்து அப்படியல்ல; நான் இலவசமாய் வாங்கி என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தாமல் அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன் என்று சொல்லி தாவீது அந்தக் களத்தையும், மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான் (II சாமுவேல் 24:24).

ஆராதனை என்பது மனிதனை நோக்கி ஏறெடுக்கப்படும் ஒன்றல்ல. அது ஒருபோதும் மனிதனுக்கான ஒன்றாக இருந்ததில்லை, அது ஒருபோதும் அப்படி இருக்காது. ஆராதனை என்பது தேவனுக்கு முன்பாக சாஷ்டாங்கமாக பணிந்து அவருக்கு மரியாதை செலுத்துவதாகும். அவருக்கு முன்பாக வெறுங்கையோடே வர நாம் ஒருபோதும் துணியவேண்டாம். ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம் (எபிரெயர் 13:15).

நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்து கொள்வேன் (சங்கிதம் 5:7). கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்கு செலுத்துங்கள்: பரிசுத்த அலங்காரத்துடன் கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள் (சங்கீதம் 29:2) நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள்(சங்கீதம் 95:6) நான் உமக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத்தொழுது கொள்ளுவேன் (சங்கீதம் 116:17) உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து உமது கிருபையினித்தமும் உமது உண்மையினித்தமும், உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும்

உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர் (சங்கீதம் 138:2)ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாயத் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற

பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் (I பேதுரு 2:5) குமாரன் கோபங்கொள்ளாமலும்,நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சக் காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக் கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள் (சங்கீதம் 2:18)

பரலோகத்தின் தேவனை ஆராதிக்கும் போது, நாம் அவருக்கு முன்பாகப் போகும்போது எதையாவது கொடுக்க வேண்டும், அது எல்லோராலும் கொடுக்கக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கும்: நம் ஜெபங்கள், நம் துதிகள், நம் நேரம், நம் தாலந்துகள், நம் பணம் நாம் வைத்திருக்கும் எல்லாம் இதில் உள்ளடக்கம்.

---

## பெரும்பான்மை

- **இயேசு கிறிஸ்து மதசம்மந்தமான காரியங்களில் ஒருபோதும் சரியான அளவுகோல் இல்லை என்று சொன்னார் (மத்தேயு 7:13,14).**
- **நோவாவின் நாட்களில் பெரும்பாலான கீழ்ப்படியாத ஜனங்கள் ஜலப்பிரளயத்தின்ல் அழிக்கப்பட்டார்கள் (ஆதியாகமம் 7:11-24).**
- **சோதோம் கொமோராவின் பெரும்பான்மையான துன்மார்க்கமான ஜனங்கள் அக்கினியாலும் கந்தகத்தாலும் அழிக்கப்பட்டார்கள் (ஆதியாகமம் 19:22-29).**
- **இஸ்ரவேல் ஜனங்களில் பெரும்பாலானோர் கானான் தேசத்தில் பிரவேசிக்க முடியவில்லை (எண்ணாகமம் 14:30; உபாகமம் 1:36-38).**
- **நியாயத்தீர்ப்பு நாளில் பெரும்பாலானவர்கள் நாம் கர்த்தரால் நிராகரிக்கப்படுவார்கள் (மத்தேயு 7:21-23).**
- **சத்தியமானது ஏற்றுக்கொள்ளப்படும் சூழ்நிலை வரும்வரை அறிவிக்காமல் காத்திருப்பதைக் காட்டிலும்,ஏற்றுக் கொள்ளப்படாமல் தள்ளப்பட்டாலும் அறிவிப்பது நல்லது.**

## சபை வரலாறு

## நிர்வாகத்தோடு போராடுதல்

## struggling with administration

Jeremy w.bannier

ஆதி திருச்சபை பாலஸ்தீனத்தின் மலைப் பிரதேசங்களிலிருந்து சிறிய அளவில் மிகப் பெரிய கூட்டமாகப் பெருகி பல இடங்களில் பரந்து விரிந்து மத்தியதரைக்கடல் பகுதியில் செழித்தோங்கியது. ஆதித் திருச்சபை தான் எதிர் கொண்ட எல்லா சவால்களையும் மேற்கொண்டு அபரிதமான வளர்ச்சியை அடைந்தது. ஆதித் திருச் சபையானது நிர்வாகப் போராட்டத்தில் சிக்கிக்கொண்டது. இது ஆரம்ப நாட்களில் சபை வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடைக்கல்லாக இருந்தது.

சில நாளைக்குப் பின்பு பவுல் பர்னபாவை நோக்கி;நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலு முள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம் வாரும் என்றான். அப்பொழுது பர்னபா என்பவர் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக்கூட அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்றான். பவுலோ அவன் பம்லியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடே கூட ஊழியத்துக்கு வராததினாலே அவனை அழைத்துக் கொண்டு போகக்கூடாது என்றான். இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமூண்டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான். பவுலோ சீலாவைத் தெரிந்து கொண்டு சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு புறப்பட்டு சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து சபைகளைத் திடப்படுத்தினான், (அப்போஸ்தலர் 15: 36-40).

அப்போஸ்தலருடைய நடபடிகள் பதினைந்தாம் அதிகாரத்தில் ஆதி திருச்சபையின் பிரதானமான தலைவர்களாயிருந்த பவுல் மற்றும் பர்னபா இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு குறித்து நாம் வாசிக்கிறோம். இவ்விரு தேவ மனிதர்களும் பல வருடங்களாக மிக நெருக்கமாக பணியாற்றி மிக வல்லமையான அதே நேரத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய ஓர் ஊழிய அணியாக இருந்திருக்கிறார்கள், இவர்கள் இணைந்து சீப்புருத்தீவிலும் தற்போதைய துருக்கி நாட்டின் மையப்பகுதியின் பல இடங்களிலும் சபைகளை ஸ்தாபித்தார்கள் அவர்கள் ஒன்றாக இணைந்து பல பகல்களை இரவுளாக, வாரங்களை மாதங்களாகச் செலவு செய்திருக்கிறார்கள் எனவே ஒருவர் என்ன

சிந்திக்கிறார் என்பதை மற்றவர் எளிதாகப்புரிந்துகொள்ள முடிந்தது. இன்னும் சொல்லப்போனால், ஒருவர் அடுத்தது என்ன சொல்லப்போகிறார் என்பதை மற்றவர் சொல்லும் அளவுக்கு நெருக்கமான உறவு இருந்தது. இப்படிப்பட்ட இவர்களுக்கிடையே ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்திருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ளவே முடியில்லை.

இந்தக் கருத்து வேறுபாடு குறித்து சில தகவல்களை கவனியுங்கள். முதலாவது, ஊழிய சம்மந்தமான இலட்சியம் குறிக்கோள்கள் போன்றவற்றில் ஒருமித்த கருத்துடையவர்களாத்தான் இருந்திருக் கிறார்கள். அதாவது, பவுலும் பர்னபாவும் கர்த்தருடைய வசனத்தை அறிவித்த சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படி யிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்பதற்கு ஒன்றாகத் தான் முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆனால், மாற்குவை கூட்டிக்கொண்டு போகலாமா வேண்டாமா என்பதில்தான் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 13:13 ல் பவுல் பர்னபா மற்றும் மாற்கு ஆகிய மூவரும் இணைந்து ஊழியத்தின் முதல் சுற்றை முடித்திருக்கிறார்கள். பின்பு, மாற்கு குறிப்பிடப்படாத காரணங் களுக்காக ஊழியம் கடினமானதாக எண்ணி எருசலேமுக்குத் திரும்பிவிட்டார். பதினைந்தாம் அதிகாரத்தில் பவுல் இதை ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட துரோகமாக கருதாமல் தனக்கும் பர்னபாவுக்கும் இழைக்கப்பட்ட தனிப்பட்ட துரோகமாகவே கருதினார். பவுல் மாற்குவை தன்னை விட்டுப் பிரிந்து சென்ற நபராக குறிப்பிடுகிறார். இருந்தபோதிலும், மாற்குவின் திறமையைக்கண்ட பர்னபா இந்தக்காரியத்தில் பவுலை விட சற்று இரக்கம் உடையவராக காணப்பட்டார். பவுல் சவுலாக இருந்தபோது நண்பர்கள் யாரும் ஊழியத்தில் இல்லாதபோது பர்னபா பவுலோடு பொறுமையாயிருந்து அவருக்கு ஆதரவாக இருந்து இறுதியில் பவுலை ஒரு மிகச்சிறந்த ஊழியராக உருவாக்கினார். அதேவிதமாக, பர்னபா மாற்குவுக்கு ஆதரவாக இருந்து அவரை ஒரு மனிதராகவும், தலைவராவும் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

இருந்தபோதிலும் பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையே ஏற்பட்ட அந்த கருத்து வேறுபாடு அவர்களுடைய ஆவிக்குரிய

உறவில் விரிசல் ஏற்பட காரணமாகிவிட்டது. எனவே, அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப்போனான். பவுலோ சீலாவை தெரிந்துகொண்டு சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு புறப்பட்டு சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து சபைகளைத்திடப்படுத்தினான்.இங்கே வேதவாக்கியங்கள் எல்லாவற்றையும் தெளிவாக விவரிக்காவிட்டாலும்கூட இங்கே தெளிவாயிருக்கிற காரியம் என்னவென்றால் பவுலுக்கும் பர்ன பாவுக்கும் இடையே காரியங்கள் எப்படி செய்யப்படவேண்டுமென்று அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும் கூட தொடர்ந்து அவரவர் வழியில் ஊழியத்தைச் செய்தார்கள் தங்கள் அபிப்பிராய பேதங்கள் ஊழியங்களுக்கு தடையாக இருக்க அனுமதிக்கவில்லை என்பதை நாம் இங்கே கற்றுக்கொள்ள வேண்டும்.

சற்று நேர சிந்தனைக்குப் பிறகு இவ்வசனப்பகுதியில் இடம் பெற்றுள்ள இரண்டு தகவல்கள் மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது.40 ஆம் வசனத்தில் பவுலை ஊழியத்திற்கு அனுப்பிய சகோதரர்கள் பவுல் சீலாவைத் தெரிந்துகொண்டு ஊழியத்திற்கு செல்லும் காரியத்தை அங்கீகரித்திருக்கிறார்கள்,வேறுவிதமாக சொன்னால் பவுலின் பிரயாணத்தை அவர்கள் அங்கீகரித்திருக் கிறார்கள். சகோதரர் பவுலை தேவனுடைய கிருபைக்கு ஒப்பு வித்தார்கள் இது ஏன் இங்கு முக்கியப்பங்கு வகிக்கிறது ? இந்த வாக்குவாதத்திற்கும், பிரிவுக்கும் பவுல்தான் காரணம் என்பது எல்லோருக்கும் தெரியும், இருந்த போதிலும் சகோதரர் பவுலின் ஊழிய முயற்சிகளை அங்கீகரித்து ஊழியம் தொடர்ந்து விருத்தியடைய வேண்டுமென்று விரும்பி யிருக்கிறார்கள்.

மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் மாற்குவின் மீது அதிருப்தி கொண்டாலும் பின்பு மாற்குவிற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறார். இளம் பிரசங்கியாரான தீமோத்தேயுவுக்கு எழுதும் போது மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன் என்று சொல்கிறார். முடிவாக நாம் பார்க்கும் போது முதல் நூற்றாண்டில் சபை அபரிதமான வளர்ச்சியை அடைந்த போது கூட அங்கே பிரச்சனைகள் இல்லாமல் இல்லை. அதிலும் குறிப்பாக, பவுலும் பர்னபாவும் நிர்வாகப் பிரச்சனைகளில் ஒத்த கருத்தில்லாமல் இருந்தார்கள். இருந்தபோதிலும், தேவனுக்கு உண்மை யாயிருந்தபடியால் தங்கள் அபிப்பிராய பேதங்கள்

ஊழியத்திற்கு தடையாக இருக்க அனுமதிக்கவில்லை மாறாக, ஒருவருக்கொருவர் கிருபையுள்ளவர்களாயிருந்தார்கள். அதன் விளைவாக, ஊழியங்கள் விருத்தியடைந்து சபைகள் மிகப்பெரிய வளர்ச்சி அடைந்தன.

இன்றைய நாட்களில் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஒருவருக்கொருவர் கிருபையுள்ளவர்களாயிருந்து, ஆதித்திருச் சபையில் தேவமனிதர்களும் விசுவாசிகளும் எப்படி தேவனுடைய காரியங்களில் நடந்து கொண்டார்களோ அப்படியே நடந்து கொண்டால் அதாவது, அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றினால் சபைகள் மிகப் பெரிய வளர்ச்சியை அடையும். ✝

---

## SCAVENGER HUNT THROUGH JONAH
## யோனா மூலமாக தேடுதல் வேட்டை
rebecca rushmore

1. **எந்தப்பட்டணத்துக்கு போகும்படி தேவன் யோனாவுக்குக் கட்டளையிட்டார் ?**

2. **எந்தப்பட்டணத்துக்குப்போகும்படி யோனா முயற்சித்தார் ?**

3. **மீன் தன்னை விழுங்கிய பிறகு யோனா என்னச்செய்தார் ?**


4. **எது மீனை யோனாவை நிலத்தில் கக்க வைத்தது ?**

5. **யோனா பிரசங்கித்த பட்டணம் எவ்வளவு பெரிதாயிருந்தது ?**

6. **எத்தனை நாட்களில் நினிவே கவிழ்க்கப்படும்போம் என்று யோனா சொன்னார் ?**

7. **அப்பட்டணத்தார் மனந்திரும்பியபோது யோனா எப்படியாக உணர்ந்தார் ?**

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TV வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் TV சனி காலை 7:00 - 8.00 மணி

**மாத இதழ் : திருமறை ஆசான்**

---

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.

---

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382

P.R. **சுவாமி** : 098440 70763

P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420

B. **அர்ஜுனன்** : 994435 58041

## சத்திய வழி


❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி**

❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**

❖ தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி

❖ நம்பிக்கை TV : சனி மாலை 8:00 – 8:30 மணி

❖ **Heaven** TV : வியாழன் மாலை 6:00 – 6:30 மணி


❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்தலகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**

❖ தமிழன் : ஞாயிறு காலை 7.00 – 7.15 மணி

அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி

❖ **Salvation TV** : ஞஸயிறு மாலை 2.00 – 2.30 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை

❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

- ❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( 4 இதழ்கள் ) (அ) ரூ. 200 ( 8 இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

- ❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி


**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**


பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________

# ✯ சத்தியத்தின் குரல் ✯

## Editorial Team


Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**


# 5 நிமிட வேத பாடம்

## சுவிசேஷம்

Paula Bates

1. ஆகையால், நம்முடைய கர்த்தரைப் பற்றிய...........குறித்தாவது அவர் நிமித்தம் ........என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல் தேவ வல்லமைக்கேற்றபடி ........என்னோடே கூடத் தீங்கநுபவி [I தீமோத்தேயு 1:8].
2. ஏனெனில்...........அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும்........கேட்டவர்கள் ..........கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை [எபிரெயர் 4:2]
3. மேலும் நான் கிறிஸ்துவின் சவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் படி............பட்டணத்தில் வந்தபோது..........எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கையில் [I கொரிந்தியர் 2:12]
4. கிறிஸ்துவின்..........குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்.........அவனுக்கு இரட்சப்பு உண்டாவதற்கு அது.........[ரோமர் 1:16].
5. இப்படி..........துவக்கிச் சுற்றிலும், ..........தேசம் வரைக்கும் கிறிஸ்துவின்........பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன். [ரோமர் 15:19]
6. மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின்............நான் மக்கதோனியாவிலிருந்து புறப்பட்டபோது கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு..........உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் [பிலிப்பியர் 4:15]
7. உங்கள் விசுவாசத்தைப் பற்றி உங்களுக்குப் புத்தி சொல்லவும், நம்முடைய சகோதரனும் தேவ......கிறிஸ்துவின்..........எங்கள் உடன்வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனுப்பினோம் [I தெசலோனிக்கேயர் 3:2].

For Further Information, Please Contact :